ஓம்

ஓம் ஈஸ்வரா குருதேவா

# உயிரே கடவுள்


அருளியவர்

**ஞானகுரு**
**வேணுகோபால சுவாமிகள்**



**மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனம்**
**மெய்ஞான தியான வளர்ப்புத் திருச்சபை**
**வடுகபாளையம் - புஞ்சை புளியம்பட்டி - 638 459**
**ஈரோடு மாவட்டம் ✆ : 04295 - 267318**

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **உயிரே கடவுள்** |
| தபோவன வெளியீடு எண் | : | 1 |
| முதற்பதிப்பு | : | மே 1987 |
| 21-ம் பதிப்பு | : | நவம்பர் 2010 |
| 22-ம் பதிப்பு | : | நவம்பர் 2011 |
| உரிமை | : | தபோவனத்திற்கு |
| பக்கங்கள் | : | 196 |
| வெளியீடு | : | **மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனம்**<br>பு. புளியம்பட்டி - 638 459<br>ஈரோடு மாவட்டம்<br>போன் : (04295) 267318 |

இந்தப் புத்தகத்தில் உள்ள கருத்துக்களை பிரசுரிக்கவோ, மொழிபெயர்க்கவோ, தபோவன நிர்வாகத்தின் முன்அனுமதி பெறவேண்டும்.

**- நிர்வாகிகள்**

கணினி அச்சு & அச்சிட்டோர் : சபாநாயகம் பிரிண்டர்ஸ், 176, கீழ வீதி, சிதம்பரம் - 608 001.
தொலைபேசி : (04144) 223020, 223040

39, மில்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010
தொலைபேசி : (044) 26401807

**உயிரே கடவுள்**
**நாம் எண்ணும் எண்ணமே**
**இறைவன்**
**(நம்) உணர்வின் ஆற்றலே**
**தெய்வம்**

– ஞானகுரு வேணுகோபால சுவாமிகள்

ஓம்
ஓம் ஈஸ்வரா குருதேவா

# ஞானகுருவின் அருளுரை

*குருதேவர் எமக்கு உபதேசித்து காட்சியாகவும், உணர்வு பூர்வமாகவும் உணர்த்தியருளியதை, யாம் அனுபவ பூர்வமாக தியானத்தினால் அறிந்துணர்ந்ததை, உலக மக்கள் அனைவரும் இத்தியானத்தினால் ஆற்றல் களைப் பெறவேண்டும் என்ற அவாவினால் 'உயிரே கடவுள்' என்ற இந்நூலை எழுதலானோம்.*

*இன்றைய விஞ்ஞான உலகில் உலக மக்கள் நலம்பெற, மகிழச் செய்ய, விஞ்ஞான அறிவால், பற்பல நன்மைகள் செய்து வந்தாலும், விஞ்ஞான அறிவால் வானமண்டலத்தில் 'ராக்கெட்'களை ஏவி வெடிக்கச் செய்து, வானமண்டலத்தில் நச்சுத்தன்மை ஏற்படுத்தியதோடு அல்லாமல் பூமியில் அணுகுண்டு களை வெடிக்கச் செய்து, அணுக்கதிரியக்கங்களை பரவச் செய்தும், இயந்திரங்களை இயக்கச் செய்ய அணுக் கதிரியக்கங்களைப் பயன்படுத்தி காற்று மண்டலத்தில் நச்சுத் தன்மைகளைப் பரவச்செய்தும், பூச்சிக்கொல்லி மருந்துகளை தூவி பூச்சிகளைக் கொல்ல எண்ணி காற்றையே நச்சாக்குகின்றனர் விஞ்ஞானிகள்.*

*ஞானியர்கள் உபதேசித்த வழியில் நல்லதையே செய்து, நல்வழியில் நடந்து, நல்ல நிலைகளைப் பெற்று பிறவா நிலையான ஒளிநிலை பெற எண்ணி வாழ்ந்து வந்தாலும், விஞ்ஞானிகளால் பரவச்செய்த நச்சுத் தன்மைகளை உலக மக்கள் அனைவரும் சுவாசிக்க*

நேருவதால், மனிதர்களின் உடல்களில் பதிந்துள்ள, நல்ல குணங்களைத் தூண்டச் செய்யும் நல் உணர்வு களின் அணுக்களில் சுவாசித்த நச்சுத் தன்மைகள் கலந்து விடுகின்றன. அதாவது விஷப்பூச்சிகள் கடித்துவிட்டால் எவ்வாறு கடுகடுப்பாகின்றதோ அதைப்போன்று நற்குணங்களின் உணர்வுடன் பேசினாலும், சொல்லில் கடுகடுப்பாக வார்த்தைகள் வெளிப்படுகின்றன. இதைப் போன்று தன்னை அறியாது கோபம், குரோதம், வெறுப்பு, வேதனை போன்ற எண்ணங்கள் தோன்றுகின்றன. அது மட்டுமல்ல சாதாரண மனிதன் முதல் விஞ்ஞானி வரை தற்கொலை செய்துகொள்ளத் தூண்டி விடுகின்றன.

உடலை விட்டுப் பிரிந்து சென்ற உயிராத்மாவையும், காற்றில் உள்ள நச்சுத் தன்மைகள் உருக்குலையச் செய்து, மறுஜென்மம் மனிதனாகப் பிறக்கத் தகுதியிழந்து விஷப் பூச்சிகளாய் பிறக்கச் செய்து விடுகின்றன.

இத்தகைய விஞ்ஞான உலகில் வாழ்ந்து கொண்டி ருக்கும் மக்கள், மெய்ஞ்ஞானியர்கள் காட்டிய வழியில், தியானத்தில், உங்கள் ஆற்றல்களைக் கூட்டி, சப்தரிஷி மண்டலங்களிலிருந்து வெளிப்படும் மெய்ஞ்ஞான ஒளி அலைகளைப் பெற்று, உங்கள் சுவாசத்தால் உங்கள் உடல்களில் சேர்ந்த நச்சுத்தன்மைகளை மாய்த்து, மனிதன், மனிதன் என்ற நிலையில் வாழ்ந்து, உயிராத்மாவை மெய்ஞ்ஞான ஒளியாக மாற்றி, சப்தரிஷி மண்டல சுழற்சி வட்டத்தில் சென்றடைந்து 'என்றும் பதினாறு' என்ற ஒளிநிலை பெறுவீர்களாக!

குருதேவர் எமக்கு உபதேசித்து காட்சியாகவும், உணர்வு பூர்வமாகவும் உணர்த்தியருளியதை, யாம்



அனுபவ பூர்வமாக தியானத்தினால் அறிந்துணர்ந்த உண்மை நிலைகளை சாதாரண மக்களும் குடும்ப வாழ்க்கையில் சிறுவர் முதல் பெரியவர் வரை தியானத்தால் ஆற்றல்கள் பெற்று, வாழ்வில் ஏற்படும் துன்பங்களை ‘ஆத்மசுத்தி’ செய்து, போக்கிக் கொண்டு உயிராத்மாவை ஒளியாக்கலாம் என்று யாம் உபதேசித்து வந்ததை, சிதம்பரம் திரு. கே.பி. கிருஷ்ணராஜ் அவர்கள் இதை எப்படியும் நூல் வடிவில் கொண்டு வந்து, எல்லா மக்களும் இதை அறிந்துணர்ந்து, வாழ்வில் இந்நிலையைக் கடைபிடித்து நலமும் வளமும் பெற வேண்டும் என்ற பேரவாவினால், எம்மை இந்நூல் எழுதும்படி விடா முயற்சியால் மிகவும் வேண்டியபடியால் யாம் இந் நூலை எழுதலானோம்.

இந்நூலை, அச்சில் கொண்டுவர எல்லாவித முயற்சிகளையும் செய்து நூல் வடிவில் கொண்டு வந்த திரு. கே.பி. கிருஷ்ணராஜ் அவர்களுக்கு, இந்நூலை வாசித்து அதனால் ஆத்மபலமும், ஆத்மஞானமும் பெறும் ஆத்ம ஐக்கிய அன்பர்களின் நல்லாசிகளைப் பெறவும், எமது ஆசிகள் உரித்தாகுக! மேலும் குருதேவர் அருளால், ஆசியால், மகரிஷிகளின் அருள் ஒளியால் ஆத்ம பலமும், மெய்ஞ்ஞான ஒளியும் பெற எமது அருளாசிகள் உரித்தாகுக!

இந்த நூலை எல்லா மக்களும் படித்து பயன்பெற வேண்டும் என்ற அவாவினால், இரவு பகலாக இந் நூலின் எழுத்துப் பிழைகளைத் திருத்தியும், இந்நூல் விரைவில் எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும், அதற்கு வேண்டிய பணிகளைச்

*செய்து தந்த சென்னை திரு. எஸ். ருத்திரமூர்த்தி அவர்களுக்கு குருதேவர் அருளாசியால் மகரிஷிகளின் அருள் ஒளி பெற்று, ஆத்மபலமும், மெய்ஞ்ஞான ஒளியும் பெற எமது அருளாசிகள் உரித்தாகுக!*

*யாம் இந்நூலை, எழுதியதைக் கைப்பிரதி எழுதிக் கொடுத்த தாம்பரம் திரு. ஆர். பழனிசாமி அவர்களுக்கு குருதேவர் அருளாசியால் மகரிஷிகளின் அருள் ஒளி பெற்று, ஆத்மபலமும், மெய்ஞ்ஞான ஒளியும் பெற எமது அருளாசிகள் உரித்தாகுக!*

*யாம் இந்நூலை எழுதி வரும்பொழுது, அனுதினமும் வந்திருந்து தமது அரும்பெரும் ஒத்துழைப்பைத் தந்து உதவிய சென்னை திரு. எம். கிருஷ்ணன் பி.ஏ., அவர்களுக்கு குருதேவரின் அருளாசியால் மகரிஷிகளின் அருள் ஒளி பெற்று, ஆத்ம பலமும், மெய்ஞ்ஞான ஒளியும் பெற எமது அருளாசிகள் உரித்தாகுக!*

***நலம் பெறுக! வளம் பெறுக!***

***மகரிஷிகளின் அருளொளி பெறுக!***

**வேணுகோபாலசாமி**

*மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனம்*
*புஞ்சை புளியம்பட்டி*

ஓம்

## "உயிரே கடவுள்"

## (விளக்கம்)

# ஆதிசக்தியும் பரப்பிரம்மமும்

*ஆதியில் ஆவியாக இருந்த ஆற்றல்கள் 'ஆதிசக்தி'. அந்த ஆற்றல்கள் மேகங்களாக மாறி, மேகங்கள் தூசு களாக மாறி, தூசுகள் ஈர்ப்பு காந்த நுண்ணணுக்களாக மாறி, ஈர்ப்பு காந்த நுண்ணணுக்கள் அதன் தன் ஈர்ப்பில் பற்பல குணங்கள் கொண்ட ஆற்றல்களைச் சேர்த்துக் கொண்டு, பற்பல குணங்களின் உணர்வலைகளாக மாறி, ஒன்றுடன் ஒன்று கலந்ததால் நீராக மாறி, நீர் ஆவியாக மாறி, இவ்வாறே ஒன்றுடன் ஒன்று கலந்ததால் வெப்பமாகும் காந்த நுண்ணணுக்கள், ஒன்றுடன் ஒன்று கலந்ததால் அமிலமாக கரைக்கும் அணுக்களும் ஈர்க்கும் காந்த அணுக்களும், பொறிகளை உருவாக்கும் உணர்வலைகளும், கண்களுக்கு புலப்படாத நிலையில், அணுக்களாக, அலை அலைகளாக பேரண்டத்தில் உருப்பெற்றுப் பரவிய பேராற்றல்கள், பற்பல குணங் களின் நுண்ணணுக்களாக உருப்பெறச் செய்ய காரணமாக இருந்த நிகழ்ச்சிகளே 'பரப்பிரம்மம்'. பற்பல உணர்வலைகள் குவிந்து ஒன்று சேர்ந்து ஒரு பொருளாக உருப்பெறச் செய்யும் நிகழ்ச்சி 'பிரம்மம்'. உருப்பெற்ற பொருள் 'சிவம்'. தன் எடையின் கனத்தால் பேரண்டத்தில் நகர்ந்து சுழலச் செய்யும் ஆற்றல் 'சக்தி'. இவ்வாறு 'சிவசக்தியாக' இயங்கி சுழலும்பொழுது*

வெப்பமாகி, வெப்ப அலைகள் பொருளுக்குள் இருக்கும் உணர்வலைகளில் அணுக்களை வெப்பமாக்கி, உணர்வலை களை இயங்கச் செய்யும் ஆற்றலே ‘கடவுள்’.

பேரண்டத்தில் ஒரு சிறு பொருளாக உருப்பெற்று, அந்தப் பொருள் சிவசக்தியாக சுழன்று, இயங்கிக் கொண்டு, பேரண்டத்தில் உள்ள பற்பல குணங்களின் உணர்வலைகள், காந்த அணுக்கள், பொறிகளை எழுப்பும் அணுக்கள், ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால் அமிலமாக்கும் அணுக்கள், தூசுகள், துகள்களையும் தனக்குள் எடுத்துக்கொண்டு வளரும் நிலைபெற்றது.

மேற்கூறியவாறு பலகோடி, கோடி ஆண்டுகள் வளர்ந்து, கோளாகி, நட்சத்திரமாகி, சூரியனாக முழுமை பெற்று சூரியன் தனக்குள் வளர்ச்சி பெற்ற பேராற்றல் மிக்க கதிரியக்க ஆற்றல்களையும், வெப்ப அணுக் களையும், உயிரணுக்களையும், பற்பல தாது வர்க்க சத்துக்களையும், காந்த அணுக்களையும், தூசுகளையும், கடும் விஷ துகள்களையும் பெரும் புயலாக பரவெளியில் உமிழ்ந்து, பரவெளியில் பரவச் செய்கின்றது.

சூரியன் பரவெளியில் உமிழ்ந்ததில், சிறு பொருளாகி, அதன் வளர்ச்சியில் கோள்களாகி, கோள்கள் தன் வளர்ச்சியில் நட்சத்திரங்களாகின்றன. வளர்ந்து வரும் கோள்களும், சூரியனின் ஈர்ப்பு வட்டத்தில் சூரியனை வலம் வந்து கொண்டும், சூரியனின் அணைப்பில் வாழ்ந்து வளர்ந்து கொண்டும் இருக்கின்றன.

*(குறிப்பு : சூரியனின் ஈர்ப்பு வட்டம் ஓர் பிரபஞ்சம். இந்த பிரபஞ்சத்திற்குள் சூரியனை வலம் வரும் கோள்களும், நட்சத்திரங் களும், சந்திரனும் சேர்ந்து ஓர் சூரிய குடும்பமாகின்றது.)*



பிரபஞ்சத்திற்குள் இருக்கும் கோள்கள், சந்திரன், நட்சத்திரங்கள், உயிரணுக்கள் இவைகள் அனைத்தையும் சூரியன் தன் ஆற்றல்களால் பிரகாசிக்கச் செய்கின்றது. மேற்கூறியவாறு பிரபஞ்சத்திற்குள் இருக்கும் அனைத்திற்கும் உயிராக இருந்து இயக்கும் சூரியனை 'சர்வேஸ்வரா' என்றும், இயங்கும்பொழுது ஏற்படும் சக்தி 'சர்வேஸ்வரி' என்றும் மகரிஷிகள் அழைக்கலாயினர்.

பிரபஞ்சத்தில் சூரியனை வலம் வரும் பூமி, பிரபஞ்சத்தில் மிதந்து, சுழன்று கொண்டிருக்கும் நிலை யில், பிரபஞ்சத்தில் மிதந்து கொண்டிருக்கும் உயிரணுக் களையும், பற்பல உணர்வுகளின் சத்துக்களையும் தனக்குள் ஈர்த்து எடுத்துக்கொண்டு தானும் வளர்ந்து கொண்டு, தனக்குள் தாவர இனங்களையும் வளரச் செய்கின்றது. தாவர இனங்கள் தனக்குள் வளர்த்துக் கொண்ட சத்துக்களை பூமியில் பரவச் செய்கின்றன. இதைப்போன்றே பூமியில் விளைந்த சர்வசத்துக்களும் தமக்குள் வளர்த்துக்கொண்ட சத்துக்களை பூமியில் பரவச் செய்கின்றன. பிரபஞ்சத்திலிருந்து ஈர்த்து எடுத்துக் கொண்ட வெப்ப அலைகளும், மற்றும் பற்பல உணர்வலைகளும் பூமியில் பரவிப் படர்ந்திருக்கின்றன.

பூமி பிரபஞ்சத்தில் இருந்து ஈர்த்து எடுத்துக் கொண்ட உயிர் அணுக்கள், பூமியில் பரவியுள்ள தாவ இனங்களின் சத்துக்களையும் பற்பல உணர்வலைகளின் சத்துக்களையும் ஈர்த்து, உடல்கொண்டு வளர்கின்றன. அதாவது கிருமியாக, புழுவாக, பறவையாக, மிருகமாக இவ்வாறு மனிதன் வரை வளர்ச்சி பெற்று வளர்ந்து கொண்டும் வாழ்ந்து கொண்டும் இருக்கின்றன.

பூமி பிரபஞ்சத்தில் ஓர் பரமாக இருப்பதால் 'பரமேஸ்வரா' என்றும், பூமியில் அனைத்து பொருட் களையும் இயங்கச் செய்துகொண்டு இருக்கும் சக்தியை 'பரமேஸ்வரி' என்றும் மகரிஷிகள் அழைக்கலாயினர்.

பூமிக்குள் காற்றுடன் கலந்திருக்கும் சர்வஉணர்வலை களும், சத்துக்களும் பூமிக்கு ஆத்மாவாக இருக்கின்றன. (பூமி ஓர் பரம், பரத்துக்கு ஆத்மா பரமாத்மாவாக இருக்கின்றது). பூமிக்குள் இருக்கும் அனைத்துப் பொருள் களும் தாவர இனங்களும், உயிரினங்களும் பரமாத்மாவில் இருந்தே சத்துகளை ஈர்த்து வளர்ந்து வாழ்கின்றன. இதைப்போன்றே உயிரினங்கள் இறந்தாலும், உயிராத் மாக்கள் பரமாத்மாவில் கலக்கின்றன. தாவர இனங் களின் சத்துக்களும் பரமாத்மாவில் கலக்கின்றன.

சூரியனில், கோள்களில், நட்சத்திரங்களில் விளைந்த பேராற்றல்கள் பிரபஞ்சத்தில் பரவி இருந்ததில் சூரியனில் விளைந்த உயிரணுவாய் உருப்பெறச் செய்யவல்ல நுண்ணணுவும், கார்த்திகை நட்சத்திரத்தில் விளைந்த கதிரியக்க நுண்ணணுவும், வியாழன் கோளில் விளைந்த சத்தும், செவ்வாய் கோளில் விளைந்த சத்தும் சந்தர்ப்ப வசத்தால், இந்த நான்கு ஆற்றல்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்ததால், ஓர் கருவாகி துடிப்புள்ள உயிரணுவாகின்றது.

(குறிப்பு : இவ்வாறே சூரியனில் விளைந்த உயிரணுவாய் உருப்பெறச் செய்யவல்ல நுண்ணணுவும், ஒவ்வொரு நட்சத்திரத்தில் விளையும் கதிரியக்க நுண்ணணுவும், வியாழன் கோளில் விளைந்த சத்தும், ஒவ்வொரு கோளில் விளையும் சத்தும், சந்தர்ப்ப வசத்தால், இந்த நான்கு ஆற்றல்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்ததால் ஓர் கருவாகி துடிப்புள்ள உயிரணுவாகின்றது. அதாவது உயிரணுவுக்குள் துடிப்பு இருந்து கொண்டே இருப்பதால்

*உயிரணுக்குள் வெப்பம் இருந்து கொண்டேயிருக்கின்றது. சந்தர்ப்பவசத்தால் தாவர இனச் சத்துக்களில் இத்தகைய உயிரணு வீழ்ந்தால், அந்த தாவர இனச் சத்தை உயிரணு ஈர்த்து உயிரின் துடிப்பால் ஏற்படும் வெப்பம், தாவர இனத்தின் சத்திற்குள் மறைந்திருக்கும், வெப்ப அணுக்களை இயக்கி புழுவாக உருப்பெறச் செய்கின்றது.)*

மேற்கூறியவாறு உயிரணுவின் துடிப்பினால் உயிரணுவுக்குள் ஏற்படும் வெப்பம், புழுவின் உடலுக்குள் மறைந்திருக்கும் வெப்ப அணுக்களை இயக்கி, உடலை வாழ, வளரச் செய்யும் உயிரணு விற்குள் வெப்பமாய் இருந்து, உயிராய் இயங்கும் 'உயிரே கடவுள்'.

புழுவாகி உடல் பெற்று வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில், புழு உட்கொண்ட இரையும், சுவாசித்த உணர்வுகளும், உடலில் நுண்ணணுக்களாக விளைந்து, விளைந்த நுண்ணணுக்கள், புழுவின் உயிரின் ஈர்ப்பில் ஆத்மாவாக சேர்ந்து, உயிராத்மாவாகி, புழு இறந்தபின், புழுவின் உயிராத்மா, பரமாத்மாவில் கலக்கின்றன.

பரமாத்மாவில் கலந்துள்ள, புழுவின் உயிரான்மா, மறுபிறவியில் பூச்சியாக பிறக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு உடலிலும் உட்கொண்ட உணவுகளுக்கும், பற்பல குணங்களின் உணர்வுகளுக்கொப்ப பல்லியாய், பாம்பாய், பறவையாய், மிருகமாய் இவ்வாறு மனிதன் வரை உருப்பெறச் செய்த

**''உயிரே கடவுள்'. எண்ணும் எண்ணமே இறைவன்''**

**''உணர்வுகளின் செயல்களே தெய்வங்கள்''**

ஓம்

ஓம் ஈஸ்வரா குருதேவா!

# உள்ளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | எமது வாழ்க்கையும் மகானின் சந்திப்பும் | 19 |
| 2. | பித்தர் அல்ல மகான் என்று அறிதல் | 24 |
| 3. | எனக்கு உபதேசம் அளித்தார் | 26 |
| 4. | குருநாதராக ஏற்றுக்கொள்ளுதல் | 33 |
| 5. | தற்கொலை செய்துகொண்ட உயிராத்மாவின் நிலை | 35 |
| 6. | சாபத்தினால் ஏற்படும் நிலை | 36 |
| 7. | சப்தரிஷி மண்டலங்களைக் காண்பித்தல் | 38 |
| 8. | மின்னலைப் பார்க்கச் செய்தல் | 39 |
| 9. | தாவரங்கள் சத்தெடுக்கும் முறை | 42 |
| 10. | கேதார்நாத்தில் தியானம் | 44 |
| 11. | பழனியில் பஸ்களை வழிமறித்தல் | 44 |
| 12. | புற்றுநோயைக் குணமாக்குதல் | 45 |
| 13. | அடிக்க வந்தவர்கள் ஆசீர்வாதம் பெறுதல் | 49 |
| 14. | ஓடாத ஆட்டோவை ஓடவைத்தல் | 50 |
| 15. | ஐவர் மலைக்குச் செல்லுதல் | 51 |
| 16. | வித்தைகளைக் கற்றுக்கொள் என்றார் | 53 |




17. குருதேவரை முதுகில் சுமந்து செல்லுதல் 56

18. மனிதனின் வாழ்க்கை 56

19. உயிரே கடவுள் 60

20. குருதேவர் சூட்சமநிலை அடைதல் 62

21. முதல் தெய்வம் என்றால் யார் என்று அறிதல் 64

22. பேச்சிழந்தவரைப் பேசவைத்தல் 65

23. திருப்பதிக்குச் செல்லுதல் 67

24. என் குடும்பத்தைக் காட்சியாகக் காண்பித்தார் 72

25. நோயாளிகளை நுகர்ந்து பார்த்து குணமாக்குதல் 76

26. திருத்தணிக்குப் புறப்படுதல் 79

27. வியாபாரி சொன்னது 81

28. வாத நோயைக் குணமாக்குதல் 84

29. அருணகிரிநாதர் ஞானம் பெற்ற நிலை 89

30. அருளாடுவோர் நிலை 93

31. மந்திரவாதிகளும், ஆவியுலகமும் 94

32. குமாரபாளையம் செல்லுதல் 95

33. குமாரபாளையத்தில்
நோய்களைக் குணமாக்குதல் 97

34. மந்திரவாதிகளால் ஏற்பட்ட இன்னல்கள் 98

35. மங்களூர் செல்லுதல் 100

36. கொல்லூரில் தியானம் 103

37. கோலமா மகரிஷியின்
தபோவலிமையை அறிதல் 104

38. 'ஓம்' என்ற பிரணவத்தின் உண்மை நிலை 106

39. தெய்வ குணங்களின் தன்மைகள் 107

40. விஷ்ணு காக்கின்றான் 116

41. பிரம்மா படைக்கின்றான் 117

42. சிவன் அழிக்கின்றான் 117

43. துருவ தியானம் 117

44. ஆத்ம சுத்தி செய்யும் முறை 120

45. துருவ தியானம், கூட்டு தியானம்,
பௌர்ணமி தியானம்,
குடும்ப தியானம் செய்யும் முறை 120

46. கூட்டுத் தியானத்தின் பலன்கள் 131

47. பௌர்ணமி தியானம் செய்வதால்
ஏற்படும் பலன்கள் 132

48. குடும்ப தியானத்தின் பலன்கள் 134

49. கலசமும் தியானமும் 136

50. கலசம் வைக்கும் முறை 136

51. கணவன் மனைவி தியானம் செய்யும் முறை 139



52. கணவன் மனைவிக்காக
தியானம் செய்யும் முறை 140

53. மனைவி கணவனுக்காக
தியானம் செய்யும் முறை 141

54. கணவனும், மனைவியும் அவரவர்களின்
தாய் தந்தைக்காக தியானம் செய்யும் முறை 141

55. கணவன் மனைவி உறங்கச் செல்லுமுன் 144

56. குழந்தைகள் மீது கோபம் வரும் பொழுது 145

57. கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு 146

58. கைக் குழந்தைகளுக்கு 146

59. குழந்தைகளுக்கு தியானம் பழக்குதல் 147

60. விவரம் தெரிந்த குழந்தைகளுக்கு 148

61. குழந்தைகள் நலம் பெற 149

62. சமையல் செய்யும் பொழுது 150

63. உணவு பரிமாறும் பொழுது 151

64. உறவினர்கள் கஷ்டங்களைச்
சொல்லக் கேட்டபின் 151

65. அன்பாய் எண்ணும்பொழுது 152

66. பிறர் கஷ்டங்களை காதால் கேட்கும்பொழுது 153

67. கண்களால் துன்பங்களைப் பார்க்கும் பொழுது 155

68. வெளியே செல்லும் பொழுது 165

69. வேலை பார்க்கும் இடங்களில் 166

70. வியாபாரம் செய்பவர்களுக்கு 166

71. பத்திரிகை படிக்கும் பொழுது 166

72. உறவினர்கள், நண்பர்கள் இல்லங்களுக்குச் செல்லும் பொழுது 167

73. திருமணங்களுக்குச் செல்லும்பொழுது 167

74. வயலில் விதையிடும் பொழுது 167

75. நோயாளிகளைச் சந்திக்கும் பொழுது 168

76. சங்கடமான உணர்வலைகளைப் போக்க 168

77. விபத்துக்களையோ எதிர்பாராத நிலைகளையோ பார்க்கும்பொழுது 168

78. துக்கமான நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்பொழுது 169

79. குல தெய்வங்களை வணங்கும் முறை 169

80. கோயிலுக்குச் சென்று வழிபடும் முறைகள் 171

81. விநாயகர் சதுர்த்தி - தத்துவ விளக்கம் 177

82. ஞானகுருவும் தபோவனமும் 187

ஓம்

ஓம் ஈஸ்வரா குருதேவா

# எமது வாழ்க்கையும் மகானின் சந்திப்பும்

போகமாமகரிஷி முருகன் வடிவில் அருள் பாலித்துக்கொண்டிருக்கும் பழனியம்பதியில், நான் சாதாரண குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, பிறகு பஞ்சாலையில் வேலை பார்த்துக்கொண்டு, உபதொழிலாக சைக்கிள் கடையும், விறகுக் கடையும் வைத்து தொழில் செய்து வந்தேன். நான் படித்தது நான்காம் வகுப்பு வரை தான். என் வாழ்க்கைக்குப் போதுமான அளவு சம்பாதித்து வாழ்ந்து வந்தேன். இவ்வாறு நான் வாழ்ந்துகொண்டி ருக்கும்போது பித்தராக பழனியில் திரிந்து கொண்டிருந்த ஒருவர் என்னைப் பார்க்கும்போதெல்லாம் தேனீர் வாங்கிக் கொடுப்பார். அதைக் குடிக்க மறுத்தாலோ இன்னதுதான் சொல்லுவதென்று தெரியாமல் கண்டபடி திட்டி என்னை ஏசுவார். ஏன் இந்த வம்பு என்று நினைத்து, விலகிச் சென்றாலும் என் சட்டையைப் பிடித்து இழுத்துக் கட்டாயப்படுத்தி தேனீர் குடிக்க வைப்பார். இதற்குப் பயந்து அவருக்குத் தெரியாமல் மறைந்து வேறு வழியில் சென்றாலும், எப்படியாவது கண்டுபிடித்து விடுவார். சில நாட்கள் எங்கு போவார் என்றே தெரியாது. வேறு சில நாட்களில் எனது சைக்கிள் கடைக்கு வந்து தேனீர் குடிக்கச் சொல்வார். சிலசமயம் நான் வேலைக்குச் சென்று திரும்பும்போது சண்முகநதி அருகில் என்னை இடைமறித்து ஏதேதோ சொல்வார். அவர் என்ன சொல்கிறார் என்று எனக்குப்

புரிவதில்லை. அவர் பேசும் பாஷையே எனக்குப் புரியாது. இப்படித்தான் எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது.

சில சமயம் ஒரு வெள்ளி உருண்டையை என்னிடம் கொடுத்து ஏதோ சொல்லிக் கொண்டிருப்பார். சில சொற்கள் புரியும். சில சொற்கள் புரியாது. ஆனால், அந்த வெள்ளி உருண்டையை வாங்கி நான் வைத்துக் கொள்ள மறுத்துவிட்டேன். காரணம், அவர் இருக்கும் நிலையைப் பார்த்து, ஒருவித பயம் என்னுள்ளே வந்து விட்டது. அவர் மந்திர தந்திரங்கள் செய்துதான், இந்த நிலை ஏற்பட்டிருக்கும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. அதிலிருந்து அவரைக் கண்டாலே பயம் வந்தது. ஏனென்றால் அவர் கொடுக்கும் பொருளை வாங்கினால், எனக்கும் அந்நிலை ஏற்பட்டுவிடுமோ என்றுதான்.

அதிலிருந்து அவரைத் தெருவில் பார்த்துவிட்டால் வேறு பாதையில் திரும்பிச் செல்வேன். அப்படிச் சென்றாலும், திரும்பும் வளைவான இடங்களிலிருந்து கொண்டு திடீரென்று என்னைப் பிடித்துவிடுவார். அப்படிப் பிடித்ததும், ‘திருடன், திருடன்’ என்று சப்தம் போடுவார். இந்நிலையை மற்றவர்கள் பார்க்கும்பொழுது எனக்கு வெட்கமாக இருக்கும். அதனால் மறைந்து செல்வதை அதிலிருந்து விட்டுவிட்டேன்.

தொழிலின் நிமித்தம், ஒரு சமயம் அகமதாபாத் சென்று இருந்தேன். அங்கு இரண்டு வருடம் தொழில் செய்தேன். அங்கும், ஒருநாள் திடீரென்று என் முன் தோன்றி என்னை தேனீர் குடிக்கக் கூப்பிட்டுச் சென்றார். நானும் தேனீர் வாங்கிக் குடித்தேன். குடிக்கவில்லை



என்றால் திட்டுவார் என்று எனக்குத் தெரியும். இங்கு எப்படி வந்தீர்கள், நான் இருக்குமிடம் எப்படித் தெரிந்து கொண்டீர்கள் என்று கேட்டால் இனம் புரியாத பாஷையில் கோபமாகப் பேசுவார். ஆகையால் அவரிடம் எப்படி அகமதாபாத் வந்தார் என்று கேட்டு தெரிந்து கொள்ளவும் முடியவில்லை. இருந்தாலும், அவர் வாங்கிக் கொடுக்கும் வரை பார்த்துக்கொண்டேயிருப்பேன். ஏனென்றால், அதில் ஏதாவது போட்டுக் கொடுத்து விடுவாரோ என்ற பயம். வேறு எந்தப் பொருள் கொடுத்தாலும் வாங்கிக்கொள்வதில்லை. கொடுக்கும் பொருளில் ஏதேனும் செய்து கொடுத்துவிட்டால், நமக்கு ஏதாவது தொல்லை வந்துவிடுமோ என்ற அச்சம் இருந்து கொண்டேயிருந்தது. இப்படிப் பல வருடங்கள், பித்தர் போன்று இருந்தவரிடம் பழகி வந்தேன். இப்படித்தான் அவருக்கும் எனக்கும் தொடர்பு வந்தது.

எனக்குத் திருமணமாகி இரண்டு பையன்கள், மூன்று பெண்கள் இருந்தனர். ஒரு பெண்ணுக்குத் திருமணமும் ஆகிவிட்டது. கடைசி பையனுக்கோ வயது ஒன்றரை இருக்கும். இவ்வாறு இருக்கும்பொழுது என் மனைவிக்கு உடல்நலம் சரியில்லாமல், இடுப்புக்குக் கீழ் கால்கள் இரண்டும் அசைக்க முடியாத நிலை. மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று பரிசோதனை செய்ததில், டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்யவேண்டும், ஆனால் அறுவை சிகிச்சை செய்யும் அளவிற்கு உடல்நிலை சரியில்லையென்றும், மருந்து கொடுத்து உடல்நிலை ஓரளவிற்கு பக்குவமான பின், அறுவை சிகிச்சை செய்யலாம் என்று மருந்து கொடுத்து வந்தார்கள். ஆனால், உடல்நிலை தேறுவதற்குப் பதிலாக நாளுக்கு

நாள் மேலும் உடல்நிலை மோசமடைந்து வந்தது. இப்படிப் பல மாதங்கள் மருந்து கொடுத்து வந்தும், உடல்நிலையில் முன்னேற்றம் இல்லை. டாக்டர்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லும்படிக் கூறிவிட்டார்கள். வீட்டிற்கு எடுத்து வரும்போது என் மனைவியின் உடல்நிலை இன்றோ, நாளையோ என்ற நிலை. இடுப்பிற்குக் கீழ், இரு கால்களும் உணர்ச்சியற்ற நிலையில் கால்கள் இரணமாகி மிகவும் மோசமாக இருந்தன. வீட்டிற்கு எடுத்துவந்த அன்றே மகளைப் பார்த்த என் மாமனார், மூர்ச்சையாகி மரணம் அடைந்தார். அவருக்கு, என் மனைவி ஒரே மகள். அதனால் இந் நிலை ஏற்பட்டது. மறுநாள் எனது மாமனாருக்கு ஈமச் சடங்கு செய்ய தத்தளித்துக்கொண்டிக்கும் பொழுது கையில் பையனை (அழுதுகொண்டிருந்தவனை) தெரு விற்கு எடுத்துக்கொண்டு வந்தேன். அச்சமயம் எனக்கு தேனீர் வாங்கிக் கொடுக்கும் பித்தரானவர் என்னைப் பார்த்துவிட்டார். நான் வருத்தத்துடன் இருப்பதைக் கவனித்தாகத் தெரியவில்லை. அப்பொழுதும் என்னை தேனீர் அருந்த அழைத்தார். நான் செல்ல மறுத்தேன். அவ்வளவுதான், என்னைக் கடுமையான வார்த்தைகளால் திட்ட ஆரம்பித்து விட்டார். உறவினர்கள் என்னை ஏளனமாய்ப் பார்ப்பார்களே என்று எண்ணி, நான் அந்த பித்தரைக் கோபத்துடன் தள்ளிவிட்டேன். அவரோ என்னை அடிக்கத் தொடங்கிவிட்டார். பையனை வேறு ஒருவரிடம் கொடுத்துவிட்டு நின்றிருந்தேன். எனது சட்டையைப் பிடித்துக் கிழிக்க ஆரம்பித்துவிட்டார். ‘இன்று என்னுடன் தேனீர் குடிக்கவில்லையென்றால் உன்னை விடமாட்டேன்’ என்று அவர் கூற, என் அருகிலிருந்தவர்கள் ‘ஏன் இந்த வம்பு, தேனீரை



வாங்கிக் குடித்துவிடு' என்று என்னைத் தேனீரைக் குடிக்கச் செய்தனர். நானும் தேனீரைக் குடித்தேன். ஆனால் அந்த பித்தரோ என்னை விட்டபாடில்லை. 'இன்று உன்னை விடமாட்டேன்' என்று என்னை வேறு இடத்திற்கு அழைத்தார். நானோ பித்தரை அழைத்துச் சென்று சற்று தூரத்தில் விட்டுவிட்டு வந்துவிடலாம் என்று அவருடன் சென்றேன்.

பழனியில் உள்ள பெரியநாயகி அம்மன் கோயில் தெப்பக்குளம் வரை என்னை அழைத்துச் சென்றார். நான் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று சொன்னேன். அவர் கேட்டபாடில்லை. தெப்பக் குளத்தில் தண்ணீர் இல்லை. குளத்திற்குள் வரவேண்டுமென்று அழைத்தார். எனக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. என் கையை பிடித்து குளத்திற்குள் அழைத்துச் சென்றார். அங்கு சிறிது நேரம் மௌனமாயிருந்தார். அச்சமயம் அங்கு எங்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இல்லை. சிறிது நேரத்தில் தமிழில் நன்றாகப் பேச ஆரம்பித்தார். எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து என் வாழ்க்கை யில் நடந்த நிகழ்ச்சிகளையும், என் மனைவியின் உடல் நிலை குறித்தும், மருத்துவமனையில் மருத்துவர்கள் என் மனைவியைப் பற்றி என்னிடம் சொன்னதையும், அதாவது இனி உன் மனைவி பிழைப்பது ஆண்டவன் செயல் என்று மருத்துவர் சொன்னதை, இவர் சொல்லி, ஆண்டவன் உன் மனைவியை காப்பாற்றி விட்டார் என்று சொல்லிவிட்டுப் பலமாகச் சிரித்தார்.

பின்னர் தெப்பக் குளத்தை விட்டு மேலே கூட்டி வந்து தேனீர் கடைக்குச் சென்று தேனீர் குடிக்குச் சொன்னார். தேனீர் குடித்துவிட்டு கோயில் அருகிலுள்ள

கடையில் ஒரு எலுமிச்சம் பழமும், விபூதியும் வாங்கிக் கொடுத்து, விபூதியை உன் மனைவியின் உடலில் பூசிவிட்டு, பழத்தை பிழிந்து குடிக்கச் செய், உன் மனைவி பிழைத்துக்கொள்வாள் என்று சொல்லி என்னை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

## பித்தர் அல்ல மகான் என்று அறிதல்

நான் வீட்டிற்கு பல சிந்தனையுடன் வரும்போது, இந்தப் பித்துப் பிடித்தவர் ஒருவேளை மகானாக இருப்பாரோ என்ற சிந்தனையில் வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். வந்ததும் விபூதியை என் மனைவியின் உடலில் பூசிவிட்டு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சாற்றைக் குடிக்கச் செய்தேன். இருகால்களும் உணர்ச்சி யற்ற நிலையில் இருந்த என் மனைவி, மறுநாள் காலை யில் கால் விரல்களை சிறிது அசைக்க ஆரம்பித்தாள். சுயநினைவில்லாத என் மனைவி கண் விழித்து, எனக்குப் பசிக்கிறது என்று வாய் திறந்து கேட்க, எனக்கும் என் குழந்தைகளுக்கும் மட்டில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது.

இந்த விவரத்தை பித்தரைப் போன்று இருந்த அந்த மகானைப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று ஆவலுடன் தேடலானேன். ஆனால், அவரோ எங்கு தேடியும் என் கண்ணில் அகப்படவில்லை. இவ்வாறு தேடும் படலம் ஒரு மாத காலமாகிவிட்டது. என் மனைவியும் இந்த ஒரு மாதத்திற்குள் நல்ல குணமாகி எழுந்து உட்காரவும், ஓரளவு நடக்கவும் ஆம்பித்து விட்டாள். தினமும் தேடி சைக்கிளில் பழனி முழுவதும் அலைந்து திரிந்ததுதான் மிச்சம். ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.



ஒருநாள் கடைவீதியில், உள்ள தெருமுனையில் அந்த மகானைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்துடன் தெருவில் ஒரு பக்கமாகவே பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென்று யாரோ என் பின்னாலிருந்து என்னைத் தொட்டு ''என்னைத் தேடினாயா'' என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்து அதிர்ச்சியடைந்து, அதே நேரத்தில் மட்டில்லா மகிழ்ச்சியும் அடைந்தேன். ஏனென்றால், அங்கே நான் யாரைத் தேடி ஒரு மாதமாக அலைந்தேனோ, அந்த மகானே நின்றிருந்தார். உடனே அவர் 'எனக்குத் தேனீர் வாங்கிக் கொடு' என்றார். (இதுவரை அவர்தான் தேனீர் வாங்கிக் கொடுப்பது வழக்கம்) நான் வேறு ஒன்றும் பேசமுடியவில்லை. நான் தேனீர் வாங்கிக் கொடுத்தேன். தெருவில் போவோர் வருவோரையெல்லாம் கூப்பிட்டு 'அவர்களுக் கெல்லாம் தேனீர் வாங்கிக்கொடு' என்றார். இப்படி ரூ. 10 கணக்கு வரும்வரை தேனீர் வாங்கிக் கொடுக்கும் படி சொன்னார். பிறகு 'போதும் உனக்கு ஒன்று, எனக்கு ஒன்று வாங்கி வா' என்று சொல்ல, நானும் வாங்கி வந்து இருவரும் தேனீர் குடித்தோம். இதையெல்லாம் தேனீர் கடைக்காரர் கவனித்துவிட்டு, 'இது ஒரு காரியப் பைத்தியம்' என்று சொல்ல, அந்த மகானுக்கு அதிகக் கோபம் ஏற்பட்டு கல்லை எடுத்து கடையில் வீசி எறிந்தும், கடையிலுள்ள சாமான்களை இழுத்துப் போட்டு உடைத்தும் விட்டார்.

தேனீர் கடைக்காரர் இவரை அடிக்க முற்பட்ட போது நான் தடுத்து, 'உன் பொருளின் கிரயம் எவ்வளவோ, அதை நான் கொடுத்துவிடுகிறேன்' என்று சொல்லி, அதற்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டேன்.

## எனக்கு உபதேசம் அளித்தார்

*பிறகு பெரியநாயகி அம்மன் கோவில் அருகிலுள்ள தெப்பக் குளத்துக்குச் சென்றோம். தெப்பக்குளத்திற்குச் சென்று சிறிதுநேரம் மௌனமாக அமர்ந்து இருந்தார்.* **பின்பு என்னைப் பார்த்து ‘என்னை நம்புகிறாயா’ என்று கேட்டார். நானும் ‘நம்புகிறேன்’ என்றேன். ‘நான் சொல்வதைச் செய்கிறாயா?’ என்றார். நானும் ‘செய்கிறேன்’ என்றேன். ‘இதிலிருந்து சொல் மாறமாட்டாய் அல்லவா’ என்று கேட்டார். ‘மாறமாட்டேன்’ என்றேன். ‘அப்படியானால் என்னுடன் வா’ என்று அழைத்துக் கொண்டு** *என் பெயர் உள்ள வேணுகோபால விநாயகர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார்.*

*நான் பழனியில் இருந்தாலும் இந்த சிறு கோயிலைப் பார்த்ததில்லை. வேறு எங்கும் இப்பெயரை வைத்த விநாயகரைப் பார்த்ததுமில்லை. அந்த விநாயகர் விக்கிரகத்தின் சில விவரங்களை எனக்குச் சொல்லி விட்டு, பெரியநாயகி அம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள தட்சிணாமூர்த்தி விக்கிரகத்தைக் காண்பித்து பூமிக்கும் இந்த தட்சிணாமூர்த்திக்கும் தொடர்புபடுத்தி விளக்கம் கொடுத்தார். இவ்வாறு ஒவ்வொன்றையும் காண்பித்து அதற்குரிய விளக்கங்களைச் சொல்லிக்கொண்டே வந்தார். தூப கம்பத்தின் பக்கம் நின்று கம்பத்தின் நிலையையும், அதை வைத்ததின் நோக்கம் முதலியவற்றையும் கூறினார். பின்பு மாரியம்மன் கோயிலுக்கு கூட்டிச்சென்று, மாரியம்மன் என்றால் யார்? என்ற விவரத்தைச் சொன்னார். பிறகு பைரவர் கோயிலுக்கு நடத்திச் சென்று, அதன் செயலும்*



அந்தச் சிலையை அமைத்ததின் நோக்கத்தையும் விவரமாக எடுத்துச் சொன்னார்.

அன்று மதியம் ஒரு ஹோட்டலில் தயிர் சாதம் வாங்கிக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். மீண்டும் அழைத்துச் சென்று துஷ்ட தெய்வங்களைக் காண்பித்து அதனால் ஏற்படும் நன்மையும் தீமையும் விளக்கமாக எடுத்துச் சொன்னார். இவ்வாறு பல இடங்களுக்கு என்னை அழைத்துச் சென்று பல விளக்கங்களைச் கூறி முடிக்க அன்று மாலை 6 மணி ஆகிவிட்டது. பிறகு என்னை வீட்டிற்குப் போகச் சொல்லி ஏழு லட்டுகளை வாங்கிக் கொடுத்து, இதை குழந்தைகளுக்குக் கொடு என்று சொன்னார். நானும் அதைப் பெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

மறுநாள் காலை 8 மணி அளவில் எங்கள் தெருவிலுள்ள மின்சாரக் கம்பத்தில் கல்லைக் கொண்டு தட்டி என் பெயரைச் சொல்லாமல் ‘தெலுங்கு ராஜ்யம் இங்கே வாடா’ என்று சொல்லி சப்தம் போட்டுக் கொண்டேயிருந்தார். நான் இதை கவனிக்கவில்லை. ஏற்கனவே அவர் கல்லைக் கொண்டு கம்பங்களைத் தட்டி ‘அலோ’ என்று சொல்லிவிட்டு எண்ணூறு, ஆயிரம், லட்சம், கோடி என்று சொல்லிக்கொண்டும், மற்றும் ஏதேதோ பேசிக்கொண்டும், கம்பத்தை தட்டுவது வழக்கம். நான் வீட்டிலிருந்து எதிர்பாராது வெளியே வந்தவுடன் என்னைப் பார்த்து ‘டேய் தெலுங்கு ராஜ்யம்’ என்று கோபமாகத் திட்டிய பின்புதான், எனக்குத் தெரிந்தது, என்னைக் கூப்பிடத்தான் இப்படிச் செய்தார் என்று. அதிலிருந்து என்னைத் திட்டுவது என்றால் ‘தெலுங்கு

ராஜ்யம்' என்றும், நல்ல விஷயங்களைப் பேசுவது என்றால் என் பெயரைச் சொல்வதும் வழக்கமாகி விட்டது.

பிறகு அங்கிருந்தே என்னை பழனி மலைக்குக் கூட்டிச் சென்றார். மலையின் தன்மையைச் சொல்லிக் கொண்டு வந்தார். மலையை ஒரு சுற்று சுற்றி (கிரிவலம்) வந்து விட்டோம். பின்பு மலைக்கு பக்கம் இருக்கும் கொடைக்கானல் மலைத்தொடர்ச்சியின் அடிவாரத்திற்கு நடத்திச் சென்றார்.

அங்கு ஒரு மரத்தடி நிழலில் இருவரும் அமர்ந்தோம். சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். நான் தமிழில் பேசப் பேச அவரோ எனக்குப் புரியாத பாஷையில் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை 'நான் சொன்னது புரிந்ததா' என்று தமிழில் கேட்டார். 'ஒன்றும் புரியவில்லை' என்றேன். பின்னும் புரியாத பாஷையிலேயே பேசத் தொடங்கினார். நான் புரியாமல் விழித்துக் கொண்டி ருந்த சமயம், அவர் பேசும் பாஷையின் அர்த்தங்கள் என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அவர் பேசும் பரிபாஷைக்கு அர்த்தம் விளங்கலாயிற்று.

பின்பு போகரைப் பற்றிய உண்மை நிலையை தமிழில் சொன்னார். போகர், முருகன் சிலை செய்ய எடுத்துக்கொண்ட பொருட்களின் விவரங்களை சொல்லி, போகர், முருகன் சிலையைச் செய்ய காரணகாரியத்தை யும் சொல்லிக் கொண்டே வந்தார். திடீரென்று 'பசிக்கிறதா' என்று என்னைக் கேட்க, நானும் 'ஆம்' என்று சொல்ல, அவர் உடனே காட்டுக்குள் சென்று,



சிறிது நேரத்தில் ஏதோ சில பச்சிலைகளைக் கொண்டு வந்து கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டுத் தண்ணீர் குடித்தேன். பசி அடங்கிவிட்டது. உடல் மிகவும் தெம்பாக இருந்தது.

மீண்டும் சூரியனுக்கும், பழனி முருகன் சிலைக்கும், முருகரை வணங்கும் மக்களுக்கும், தொடர்புபடுத்தி பல விவரங்களைச் சொன்னார். பிறகு, மக்களுக்கும், முருகன் சிலைக்கும், போகருக்கும் தொடர்புபடுத்திப் பல முக்கிய விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். இவ்விவரங்கள் அனைத்தையும் எனக்கு காட்சிகளாகவும், உணர்வு பூர்வமாகவும் செயல்படுத்திக் காட்டினார். இவ்வாறு போகர் முருகன் சிலையைச் செய்ததின் நோக்கத்தைச் சொல்லி விளக்கினார். இன்றுள்ள நிலையில் போகரின் அரும்பெரும் உண்மை தத்துவங்கள் மறைக்கப் பட்டு, அது மக்களுக்கும் கிடைக்காமல் மறைந்துபோயின.

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே மாலை மணி நான்காகிவிட்டது. காட்டுக்குள் போவோம் என்று கூட்டிச் சென்றார். அங்குள்ள பல செடி கொடி களை அவர் கையில் பிடித்துக் கொண்டு என்னை நுகரும்படி சொன்னார். இவ்வாறு ஒரு மணி நேரம் பலதரப்பட்ட செடி, கொடிகளை நுகர்ந்த பின்பு வீட்டிற்குப் போகலாம் என்றார். ஏன், எதற்கு இப்படிச் செடி கொடிகளை நுகரச் செய்தார் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவரிடம் இந்த விவரம் தெரிந்து கொள்ளவும் பயம். வீட்டிற்கு வந்து இரவில் தூங்கும் போது பேரானந்த நிலையை அடைந்தேன்.

மறுநாள் காலையில் வழக்கம்போல் எட்டு மணிக்கு கம்பத்தைக் கல்லால் தட்டும் சத்தம் கேட்டு, நான் வீட்டிலிருந்து வெளியில் வந்தேன். பரிபாஷையில் 'போகலாமா' என்றார். 'சரி' என்றேன். ஒவ்வொரு தெருவிற்கும் நடத்தியே கூட்டிச் சென்றார். அப்பொழுது ஒரு சில வீட்டிற்கு முன் நின்று பரிபாஷையில் சுட்டிக் காட்டி, 'கவனித்துப் பார்த்துக்கொள்' என்று சொல்லிக் கொண்டே பல தெருக்கள் வழியே செல்லும்போது சில வீடுகளைச் சுட்டிக் காட்டி வந்தார். பின்பு சண்முகநதிக்கு இருவரும் சென்றோம். அங்கு ஆள் நடமாட்டம் இல்லாத இடமாகப் பார்த்து ஒரு மரத்தடி யில் இருவரும் அமர்ந்தோம். அப்பொழுது அவர் சுட்டிக்காட்டிய ஒவ்வொரு வீட்டிலுள்ளவர் பெயரைச் சொல்லி, இன்னார் இன்னாரெல்லாம் என்னிடம் வித்தைகள் கற்றுக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, எனக்கே பல ஆசைகளைக் காட்டி, பல ஆசை வார்த்தை களையும் சொல்லி, வித்தையைக் கற்றுக்கொள்ள விரும்பியவர்கள், சிலர் மருந்துகளின் மூலத்தைக் கற்றுக்கொடுத்தால், வேண்டிய வசதி வாய்ப்புகளுடன், கட்டிடங்கள் கட்டித் தருகிறோம், நீங்கள் அங்கேயே தங்கி விடலாம் என்றனர். நான் அரைப் பைத்தியமாய் நடித்த பொழுது, சில குடும்பங்களில் கடும் நோய்வாய்ப் பட்டு, வேதனை கொண்டிருக்கும் ஒருவருக்கு மருந்து கொடுத்த பொழுது, உபச்சாரமும், விருந்தும், வரவேற்பும், புகழாரமும் இருக்கும். ஆனால், நோய் தீர்ந்தபின் ஒரு தடவை சும்மா போனால் முகம் சுளிப்பார்கள். மறுமுறை சென்றால் பைத்தியம் வந்துவிட்டது தொல்லை கொடுக்க, என்று சொல்லிவிட்டு வீட்டில் குழந்தைகள் இருந்தாலும் கதவை மூடிவிட்டு சிறிது



நேரம் வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்புவார்கள். சிலர் என்னைப் பார்த்தவுடன் பைத்தியம் வந்துவிட்டது என்று கதவை மூடிவிடுவார்கள். இவ்வாறு தெருவில் சுட்டிக் காட்டியவர்களின் பெயர்களைச் சொல்லி வந்ததோடு, மனிதனின் குணங்களையும் எனக்குப் புரிய வைத்தார்.

அச்சமயம் நாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்தில் எறும்புப்புற்று இருந்தது. அதை முதலில் நான் கவனிக்க வில்லை. வெகுநேரம் உட்கார்ந்து இருந்ததால் கால்கள் மரத்துவிட்டன. அதனால் கால்களை நீட்டி சரி செய்தேன். அச்சமயம் என் கால்கள் எறும்பு புற்றின்மீது பட எறும்புகள் சாரிசாரியாக என் கால்களில் ஏறி கடிக்கத் தொடங்கின. எறும்புகளை என் கையால் தேய்த்துவிட சில எறும்புகள் இறந்துவிட்டன. இதைப் பார்த்துவிட்ட அவ் எறும்பின் உயிர் என் சுவாசத்தால் ஈர்க்கப்பட்டு, என் உடலில் சேருவதை எனக்குக் காட்டி, நான் அதை விவரிக்கும்பொழுது, எறும்பு கோபத்துடன் கடித்ததும், நீ கோபத்துடன் நசுக்கியதும் இரண்டு உணர்வுகளும் ஒன்றாய் இருப்பதால், நீ உடலுடன் இருப்பதால் எறும்பின் உயிர் உன் உடலில் வந்து சேர்ந்துவிட்டது. இது உன் இரத்தத்தில் கலந்து இரத்தம் அமிலமாக மாறும்பொழுது அதனுடன் கலந்து விடுகிறது. அமிலம் விந்தாக மாறிவரும்பொழுது விந்தில் கலந்து விடுகிறது. விந்தில் உன் ஆற்றலின் சக்தி அனைத்தும் இருப்பதால், எறும்பின் உயிரில், எறும்பின் உடல் சத்தின் அனைத்து ஆற்றலும் உயிரின் ஈர்ப்பில் ஆத்மாவாக மொய்த்துக் கொண்டிருக்கும் அணுசிசுக்கள் உன் குழந்தையாகப் பிறக்கப் போகும் அணுசிசுக்களாக வளரப்போகிறது என்றார்.

பிறகு எறும்புப் புற்றிலேயே உட்காரவைத்து கண்களை மூடிக்கொண்டு என் உடலுக்குள் என்ன நடக்கிறதென்று பார்க்கச்சொன்னார். அவர் சொன்னபடி இருந்தேன். சிறிது நேரத்தில் எனக்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை என்னால் உணரமுடிந்தது. அச்சமயம் புற்றில் இருந்த எறும்புகள் சாரைசாரையாக என் உடம்பில் மொய்க்க ஆரம்பித்து விட்டன. எறும்புகள் உடலில் ஊரும்பொழுது என் உடலின் உணர்வுகள் எவ்வாறு இயங்குகின்றது என்றும், என்னை எறும்புகள் கடிக்கும்பொழுது எவ்வாறு என் கைகள் என்னையறியாமல் எறும்பைத் தேய்த்து நசுக்கு கிறது, நசுக்கிய எறும்பின் உயிர்கள் என் சுவாசத்தின் ஈர்ப்பில் எவ்வாறு கலக்கிறது என்றும் உணரச்செய்தார். உடலில் ஊர்ந்து கொண்டிருக்கும் மற்ற எறும்புகள் தன் உணர்வின் ஒலி எழுப்பி ஒன்றுக்கொன்று புரிந்து செயல்படுவதையும் எனக்கு உணர்த்தினார்.

இதைப்போன்றே வேறு சில நிகழ்ச்சிகளை காட்சியாகவும், உணர்வுகள் மூலம் உதயம் கொடுத்தும் உணர்த்திக் காட்டினார். மேலும் பல அற்புதங்களையும் செய்து காட்டினார். பின்பு ‘நேரமாகிவிட்டது. வீட்டில் உன் மனைவி திட்டிக் கொண்டு இருப்பாள். போகலாம் வா’ என்றார். வீடு நோக்கி வரும் பொழுது ‘நான் பைத்தியக்காரனாக நடிக்கிறேன். உனக்கு இதற்கு முன் காட்டி உணர்த்திய உண்மைகள், இப்பொழுது தெரிந்து கொண்ட உண்மைகள், இனி நீ தெரிந்துகொள்ளப் போகும் உண்மைகளை யாரிடமும், எக்காரணத்தைக் கொண்டும் தெரிவித்தால் உன்னையும் பைத்தியமாக்கி தெருவில் அலையவிட்டு கல்லைக்கொண்டு எறிவார்கள்’



என்று எச்சரித்துவிட்டு என்னை வீட்டிற்குப் போகச் சொல்லிவிட்டார். அத்துடன் 'நாளை இரவு 12 மணிக்கு வந்து கூப்பிடுவேன். நீ சீக்கிரம் வந்துவிட வேண்டும்' என்று சொல்லிச் சென்றார். நான் நேராக வீட்டிற்குச் சென்றேன். அவர் வேறு பக்கம் சென்றுவிட்டார். நான் ஊருக்குள் வரும்பொழுது அவருடன் நான் சேர்ந்து சென்றதைப் பார்த்த நண்பர்கள், வேலைக்கும் போகாமல், கடையையும் கவனிக்காமல், மாமனார் இறந்ததைப் பற்றிய கவலைகூட இல்லாமல் இருக்கிறாயே' என்று புத்திமதி சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். நான் லீவு போட்டு இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு வீட்டிற்குச் சென்றால் என் மாமியார் ஒரே புலம்பலாகப் புலம்பினார்கள்.

## குருநாதராக ஏற்றுக் கொள்ளுதல்

மறுநாள் இரவு அவர் சொன்னபடி வந்து வழக்கம் போல கம்பத்தைக் கல்லால் தட்டலானார். நான் வீட்டைவிட்டு வந்தேன். என்னைக் கூட்டிக்கொண்டு பழனியில் உள்ள வையாபுரி குளத்திற்குச் சென்றார். அந்தக் குளத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அந்த கிணற்றில் பலர் விழுந்து இறந்தது எனக்குத் தெரியும். அந்தக் கிணற்றுப் பக்கம் இரவில் சென்றவர்கள், பயந்து இறந்து இருக்கிறார்கள் என்று பலர் பேசியிருப்பதை கேட்டுமிருக்கிறேன். அந்தக் கிணற்றில் ஒரு பெரிய கல்லைக் கொண்டுபோய் போடும்படி என்னிடம் சொல்லிவிட்டு, கொஞ்சதூரம் தள்ளி நின்று கொண்டார். எனக்குப் பயம் வந்து விட்டது. நான் ஏற்கனவே பயந்த சுபாவம் உள்ளவன். இப்படிச் சொன்னவுடன், திகைத்து

பயத்துடன் நின்றேன். நான் சொல்வதைச் செய்கிறேன் என்று உறுதி கொடுத்துவிட்டு, இப்பொழுது ஏன் தயக்கம் என்று சப்தம்போட ஆரம்பித்தார். எப்படியோ சமாளித்துக் கொண்டு அவர் காட்டிய கல்லை சிறிது தூரம் எடுத்து, நடந்து செல்லச்செல்ல கைகால்கள் நடுங்க ஆரம்பித்துவிட்டன. திகைத்து நின்றேன். என் முன் சிறிது தூரத்தில் வெள்ளையாய் ஓர் உருவம் தெரிந்தது. அவ்வளவுதான், என் கையில் இருந்த கல் நடுக்கத்தால் கீழே விழுந்துவிட்டது. எனக்குப் பின்னால் சிறிது தூரத்தில் என் குருநாதர் நின்று இருந்தார். நான் பார்த்த வெள்ளை உருவம் அவருடன் கட்டிப் புரள்வது போல் தெரிந்தது. என்னைக் காப்பாற்று, காப்பாற்று என்று தாழ்ந்த குரலில் சப்தம் போட்டார். நான் அவர் அருகே சென்றேன். கொன்றுவிடுவேன் என்று சொல் என்றார். அவ்வாறே நானும் சொன்னேன். திடீரென்று அந்த வெள்ளை உருவம் மறைந்து விட்டது.

குருதேவர் என்னைப் பார்த்துப் பலமாக சிரிக்கத் தொடங்கிவிட்டார். சிரிப்பை நிறுத்திவிட்டு, இப்படியெப்படி அந்தப் பேயை விரட்டினாய்? கிணற்றில் கல்லைப் போடச் சொன்னால் என்னை ஏமாற்றினாய் என்று கேட்டுவிட்டு, சரி வேறு இடத்திற்குப் போவோமென்று குளத்தின் கரைமேலேயே நடந்து கொண்டிருந்தோம். அப்பொழுது குளக்கரைக்குக் கீழே ஒரு பெண்ணின் அலறல் சப்தம் கேட்டது. அங்கு நின்றபடியே அந்த சப்தத்தை கவனித்துக் கேட்கச் சொன்னார். அங்கு எப்பொழுதோ தற்கொலை செய்துகொண்ட அந்தப் பெண்ணின் உடலின் உதிரம் அங்குள்ள மண்ணில் ஊடுருவி பதிந்திருப்பதால் அந்தப் பெண்ணின் உயிராத்மா சுழன்று கொண்டிருக்கிறது என்றார்.



# தற்கொலை செய்து கொண்ட உயிராத்மாவின் நிலை

*அந்தப் பெண்ணின் உணர்வலைகள் குவிந்து உருவ மாகத் தெரிகிறது. அப்பெண் அலறிய ஒலி அலைகள் எவ்வாறு என்னை அடைந்து, அந்த ஒலி அலைகளை நான் எவ்வாறு உணர்கிறேன் என்று காட்சியாகக் காண்பித்தார். தற்கொலை செய்து கொண்ட உயிராத்மா, உயிரின் ஈர்ப்பில் அணுசிசுக்கள் வளர்ச்சி குறைந்த நிலையில் இருப்பதைக் காண்பித்தார். அதாவது தேனீக்கள் எவ்வாறு கூட்டம் கூட்டமாக அடர்த்தியாக இருக்கிறதோ, அதைப்போன்று.*

*இவ்வாறு முழுமை பெற்ற உயிராத்மாவில், அதாவது 60 வயது வாழ்ந்து, இறந்த உடலிலிருந்து பிரிந்த உயிராத்மாவின், உயிரின் ஈர்ப்பில் அணுசிசுக்களாக முழுமையாக வளர்ச்சி பெற்று இருப்பதைக் காண்பித்து இந்த உயிராத்மா மறு பிறவியில் மனிதனாக உருப்பெற தகுதி உடையது என்றும் உணர்த்தினார்.*

*தற்கொலை செய்து கொண்ட உயிராத்மாக்கள், அதாவது தற்கொலை செய்துகொண்ட இத்தகைய உயிராத்மாக்கள், குடும்பச் சிக்கலில் விரக்தியடைந்த பெண்கள், எதிர்பாராது பயந்துவிட்டால், பயத்தின் ஈர்ப்பில் அவ்வாத்மா உடலில் சென்று இரத்தத்தில் கலந்து, அமில மாகும் பொழுது, அமிலம் சுக்கிலமாகி சுக்கிலத்தில் கலந்து விடுகிறது.*

*இவ்வாறு கலந்திருக்கும் உயிராத்மாவின் வளர்ச்சி யற்ற, தற்கொலை உணர்வுள்ள அணு சிசுக்கள், எந்தப்*

பெண்ணின் உடலில் கலந்துள்ளதோ, அந்தப் பெண் கருவுற்றால் கருச்சிதைவு, மற்றும் குறைப்பிரசவம் ஏற்படும். மேலும், அடிக்கடி தற்கொலை செய்துகொள்ளும் உணர்வுகளின் எண்ணம் தோன்றி, அந்தப் பெண்ணின் உடலையும் நலிவடையச் செய்கின்றது.

இவ்வாறு தற்கொலை செய்துகொள்ளும் உயிராத் மாக்கள் விரக்தி அடைந்த பெண்களின் உடல்களில் புகுந்துகொண்டு, புகுந்து கொண்ட உடலையும், நலிவடையச் செய்வதோடு புகுந்துகொண்ட உயிராத்மாவும், மனிதப் பிறவிக்கு வருவதும் இல்லை. மேற்கூறிய நிலைகளை எனது குருநாதர் எனக்குக் காட்சிகளாகவும், உணர்வு பூர்வமாகவும் காண்பித்து அருளினார்.

## சாபத்தினால் ஏற்படும் நிலை

தாய் தந்தையர் பல தொழில் செய்து, கஷ்டப்பட்டு சம்பாதித்து, செல்வங்களைச் சேர்த்து இருந்தாலும், அவர்களுடைய குழந்தைகள் கஷ்டப்படாமல் சீரும் சிறப்புமாக வாழவேண்டும், அவர்களின் எதிர்காலம் பசுமையாக இருக்கவேண்டும் என்ற உணர்வின் ஆசை யில் எண்ணி, அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்பு களைச் சிரமப்பட்டு செய்து கொடுத்து, பல தெய்வங் களை வேண்டி, என் குழந்தைகள் நல்லபடியாக இருக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருக்கும் தாய் தந்தையின் ஆசையில் வளர்த்துக் கொண்ட நல்ல உணர்வுகளை, தங்கள் குழந்தைகளின் நல்ல உணர்வு களைப் பெறும் வாய்ப்பாக தாய் தந்தையை வணங்கி,



*தங்களின் நல்ல உணர்வுகளையும், எண்ணங்களையும் பழக்கப்படுத்தாது, தெய்வங்களுக்கு காணிக்கை செலுத்தி விட்டு தெய்வம் கவனித்துக்கொள்ளும் என்ற (எண்ணத்தில்) நம்பிக்கையில் இருந்துவிடுகின்றனர். ஆனால் குழந்தைகள் அவரவர்கள் உணர்வுகளுக்கொப்ப, மற்றவர்களுடன் பழகும் பழக்க வழக்கங்களினால் சந்தர்ப்பவசத்தால் ஏற்படும் பயத்தால், சுவாசித்த தீய உணர்வலைகள் குழந்தைகளின் உணர்வில் சேர்ந்து, அவர்களின் நற்குணங்கள் மறைக்கப்பட்டு, தீய வழியில் செயல்படத் தொடங்கி விடுகின்றனர். தாய் தந்தையர் நல்லதைச் சொன்னாலும் கேட்காமல் தீய உணர்வுகள் தூண்டப்பட்டு எதிர்க்கும்பொழுது, வேதனை கொண்டு தெய்வங்களை வேண்டி, இப்படிச் செய்கிறானே பாவி என்று எண்ணிச் சாபமிடுகிறார்கள்.*

*இவ்வாறு தன்னையறியாது வேதனை கொண்ட உணர்வலைகளின் வினைகளை உயிராத்மாவில் வளர்த்துக் கொண்டு, முதுமை அடைந்து, காலத்தால் இறந்து உடலை விட்டுப் பிரிந்த உயிராத்மா, மறுபிறவியில் மனிதனாகப் பிறக்க இயலாது. ஆத்மா எவ்வாறு தேய்கிறது என்றும், இதைப்போன்று வேதனை கொண்ட மனிதனின் ஈர்ப்பில் இவ்வுயிராத்மா சென்றால், அந்த மனிதனையும் வேதனைபடச் செய்து மரணமடையச் செய்கிறது என்ற நிலைகளையும், குழந்தைகளுக்கு அவர்கள் இட்ட சாபத்தால் குழந்தைகள் வாழ்க்கையில் எவ்வாறு நசிந்து போகிறார்கள் என்பதையும் காட்சியாக உணர்த்தினார்.*

# சப்தரிஷி மண்டலங்களைக் காண்பித்தல்

‘உலகிலுள்ள மதங்கள் அனைத்தும் அந்தந்த மதங்கள் காட்டிய வழிமுறைப்படி வணங்கி வரும் தெய்வ வழிபாட்டில், உபதேசித்த அறநெறிகளையும், பல நற்பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து வரும் மனிதர்கள் ஒவ்வொரு மனிதனும் தான் வணங்கி வரும் தெய்வங்கள், தங்களைக் காத்துவரும் நம்பிக்கையில், எல்லா வழிகளிலும் நல்லதைச் செய்யவே உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் எண்ணுகிறார்கள். ஆனால், நான் உனக்குக் காட்சியில் உணர்த்தியபடி ஒவ்வொரு வரும் அவர்களை அறியாமல் சந்தர்ப்பவசத்தால் தீய உணர்வலைகள் மனிதர்களின் உடல்களில் எவ்வாறு சேருகின்றன என்பதனையே உனக்கு உணர்த்தினேன்’ என்றார். ‘அதிலே நீயும் ஒருவன். தீய உணர்வுகளிட மிருந்து உன்னை நீ எவ்வாறு காப்பாற்றிக்கொள்ளப் போகிறாய்’ என்ற கேள்விக்குறியுடன் அவர் சொல்வதை நிறுத்திக் கொண்டார். சிறிது நேரம் கழித்து என்னை, விண்ணை நோக்கிப் பார்க்கும்படி சொன்னார். பல நட்சத்திரங்களிலிருந்து வெளிவரும் ஒளி அலைகளைக் காண்பித்து அதன் நிலைகளையும் உணர்த்தினார். பின்பு சப்தரிஷி மண்டலங்களின் ஈர்ப்புக்குள் சிறுசிறு புள்ளி களாக வலம் வந்துகொண்டு கோலிக் குண்டுகளைப் போன்று பல வண்ணங்களில் இருந்தன. ‘அவையெல்லாம் என்ன?’ என்று என்னைக் கேட்டார். நான் தெரிய வில்லை என்றதும், மற்றவர்களிடம் பைத்தியம் போன்று பேசுவதைப்போல் எனக்குப் புரியாத நிலையில் பேசிக் கொண்டே என்னை ஓங்கி ஓர் அடி கொடுத்தார். நான்



திகைத்துப் போனேன். பிறகு அதன் நிலையை உணர வைத்தார். அதெல்லாம் சப்தரிஷி மண்டலங்கள் வெளிப் படுத்திய ஒளிச் சக்தியை பூமியில் மனிதர்களாக வாழ்ந்த காலங்களில், அவர்களின் தவங்களின் பலனால், புலன் களின் உணர்வால், அந்த ஒளிச்சக்தியை தங்களின் சுவாசங் களில் ஈர்த்து, இரத்த நாளங்களில் சேர்த்துக்கொண்டு, அவர்களின் தவங்களின் வலிமையால், சப்தரிஷி மண்டலங்களின் ஒளிச் சக்திகளின் ஆற்றல்களை, அவர் களின் உடல்களில் சேர்த்துக்கொண்டதினால், மனிதனை மிருகமாய் மாற்றவல்ல தீய உணர்வலைகளை மாய்த்து, தங்களையே அறியும் ஞானிகளாக ஞானத்தின் வழித் தொடர்களில் மெய்ஞ்ஞானியாகி அவர்களின் உயிரில் ஆத்மாவாக இயங்கிய அணுசிசுக்கள், ஒளியாக மாறி உயிருடன் உயிராய்ச் சேர்ந்து, ஒளியின் உணர்வு கொண்ட ஜடமாக மின்னும் நட்சத்திரங்களைத்தான் நீ பார்த்தது' என்றார்.

(குறிப்பு : உயிரின் ஈர்ப்பில் ஆத்மாவாக இருக்கும் அணு சிசுக்கள் ஒவ்வொரு உடலிலும் சேர்த்துக்கொண்ட உணர்வுகளுக் கொப்ப, அணுசிசுக்கள் மாறிக்கொண்டேயிருப்பதால், மாறிய அணுசிசுக்களுக் கொப்ப, மனித உடலையோ அல்லது மிருக உடலையோ பெறுகின்றது.)

## மின்னலைப் பார்க்கச் செய்தல்

சிறிது நேரம் மலைகளையும், காடுகளையும், சம வெளிகளையும் திரும்பிப்பார்க்கச் சொன்னார். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். அப்பொழுது இளம் கருப்பு அடர்த்திக்கொப்ப லேசான ஒளி, பிரகாசமாக ஒளி இவ்வாறு பலவகையான வண்ணங்களில் சிறு

புள்ளிகளாகத் தெரிந்தன. அதன் விவரங்களை விளக்கி உபதேசித்துக் கொண்டிருந்தார். 'மின்னல் பாயும்போது கண்களை மூடிவிடாதே!' என்றார். எனக்கு பயம் வந்து விட்டது. 'கண்களை மூடவில்லையென்றால், பார்வை இழந்து விட்டால், என்ன செய்வது' என்று கேட்டேன் அவ்வளவுதான் பைத்தியம் பிடித்தவர் போன்று எனக்குப் புரியாத பாஷையில் பேசிவிட்டு பிறகு என் உணர்வு களில் புரியும்படி உணர்த்தினார். 'நான் சொன்னதைச் செய்கிறேன் என்றாய் இப்பொழுது ஏன் தயக்கம்?' என்று கேட்டுவிட்டு 'நீயாகவா பார்க்கிறாய்? நான் அல்லவா பார்க்கச் சொல்லுகிறேன்' என்றார். சிறிது நேரம் சமவெளியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது 'இந்த மனிதர்களின் உடல்களிலிருந்து பிரிந்து வந்த உயிராத்மாக்கள்தான், சிறு சிறு புள்ளிகளாகத் தெரிவது' என்று சொல்லி அதில் பிரகாசமாகத் தெரிந்த புள்ளிகளைச் சுட்டிக் காட்டி 'சில கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, பல செயல்களைச் செய்து வந்து கடைசியில் கூடுவிட்டு கூடுபாயும் சக்தி இழந்த உயிராத்மாக்கள், கரும்புள்ளிகளாக இருக்கின்றன' என்றார். பல மந்திர தந்திரங்களைச் செய்துகாட்டி வந்த உயிராத்மாக்களும் கரும்புள்ளியாய் இருக்கின்றன. இவை அனைத்திலும் உயிரின் ஈர்ப்பில் ஆத்மாவாய் உள்ள அணுசிசுக்கள் தெரிகின்றன. இன்னும் சிலர் ஒன்றையும் எதிர்பார்ப்பு இல்லாது, பல துன்பங்கள் வந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு, நல்ல செயலைச் செய்து வந்து தெய்வமே துணையென்ற நிலையிலும் வளர்ந்து வந்த உயிராத்மாக்கள், இளம் சிவப்பு புள்ளியாய்த் தெரிந்தன, என்று சொல்லி விட்டுச் சமவெளியைப் பார்த்துக்கொண்டே இருக்கச் சொன்னார். அச்சமயம் எதிர்பாராது பளீர் பளீரென்று



மின்னல் பாய்ந்து கொண்டேயிருந்தது. அந்த மின்னலில் சிக்கிய பல வண்ணம் கொண்ட உயிராத்மாக்களின் அணுசிசுக்கள் செயல் இழந்து விட்டன. ஆனால், உயிர்கள் அழிவதில்லை.

ஒளியாய் இருந்த உயிராத்மாக்கள் மின்னலின் கதிர்வீச்சில் சிக்கினாலும், எவ்வித பாதிப்புமில்லாது மின்னிக்கொண்டே இருந்தன. இத்தகைய ஒளியான உயிராத்மாக்கள் மறுபிறப்பிற்கு வராமல், பூமியின் ஈர்ப்பில் சுழன்று கொண்டே தங்களை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவைகளாகின்றன. காலத்தால் விண்ணைச் சென்று அடைந்து விடுகின்றன.

இத்தகைய ஒளியான உயிராத்மாக்களிலிருந்து வெளிப்படும் ஒளி அணுக்கள் சந்தர்ப்ப வசத்தால், பிறிதொரு மனிதனின் உணர்வின் ஈர்ப்பில் சேர்ந்தால் அந்த மனிதனின் ஆற்றல் பெருகி, ஞானத்தின் வழித் தொடரில் தன்னையறியவும் மெய்ஞ்ஞானியாகிறான். இவ்வாறு நிகழ்வது உலகில் எங்கோ ஒருவருக்குத் தான் என்று உணர்த்திவிட்டு, அடுத்து மின்னலில் செயலிழந்த உயிராத்மாக்களைப்பற்றிச் சொல்லத் தொடங்கினார். மின்னலின் தாக்குதலுக்குள்ளான உயிராத்மாவின் அணு சிசுக்களின் செயலிழந்த சத்துக்கள் உயிரில் இணைந்த ஆத்மாவாக இருக்கின்றன. அது மீண்டும் மனிதனாக உடல்பெற தகுதியற்றதாகிறது. இத்தகைய உயிராத்மாக்கள் பூமியிலுள்ள தாவரங்களின் மீது படும் பொழுது உயிரின் துடிப்பினால் செயலிழந்த ஆத்மாக்கள் மீண்டும் அணுக்கருக்களாக உருவாகி, புதுவிதமான பூச்சிகளாக உருப்பெறுகின்றதெவ்வாறு என்பதை உணர்த்தினார்.

மறுநாள் பகலில் சூரியனைப் பார்த்துக்கொண்டிருக்கும்படி கூறிவிட்டு, அதிலிருந்து வெளிப்படும் ஒளி அலைகள் படர்வதைப் பார்க்கச் சொன்னார். அந்த அலைகளில் கலந்துள்ள ஓர் அணுவைப் பிரித்துக்காட்டி அந்த அணு கடிகாரம் ஓடுவதைப்போன்று அணுவிற்குள் துடித்துக் கொண்டேயிருப்பதை என்னுள் உணரச் செய்தார். பிறகு அதில் வெப்ப காந்த நுண் அணுவும். மைக்கைப் (Mike) போன்ற ஈர்க்கும் ஆற்றல்கொண்ட காந்த நுண் அணுவின் தன்மையை உணர்த்திவிட்டு அது விண்ணில் உடல்களை உருவாக்கும் உயிரணுவாய் உருவாகி நம் பூமியை வந்தடைந்து, புழு உடல்பெற்று மனிதன் வரை எவ்வாறு வளர்ச்சி பெறுகிறது என்பதையும், மனிதனாக முழுமை பெற்றபின், மனிதன் வளர்ச்சியில் எவ்வாறு உயிர் ஒளியாக மாறி சப்தரிஷி மண்டலங்களாயின என்பதனைக் காட்சியாகவும், என்னுள் உணர்வில் உணர்த்தியும், சொல்லாலும் உபதேசித்து விட்டு கொடைக்கானல் மலைத் தொடர்ச்சிக்கு என்னை அழைத்துச் சென்றார்.

## தாவரங்கள் சத்தெடுக்கும் முறை

கொடைக்கானல் மலைத்தொடர்ச்சி அடிவாரம் காட்டுக்குக் கூட்டிச்சென்று, அங்குள்ள செடிகொடிகளை மீண்டும் அவர் கைகளில் பிடித்துக்கொண்டு, என்னை நுகரச் சொன்னார். இவ்வாறு பல நூற்றுக்கணக்கான செடி கொடிகளை நுகரச் செய்துவிட்டு, அதன் விவரங்களைச் சொல்லி, செடிகொடிகள் காற்றிலிருந்து எவ்வாறு தனக்கு வேண்டிய சத்துக்களைத் தனக்குள் எடுத்துக் கொண்டு, தனக்குள் எப்படி வளர்கின்றன, அதிலிருந்து

*வெளிப்படும் சத்துக்கள் எவ்வாறு மற்றவைகளுடன் கலக்கின்றன, என்ற விவரங்களையும் விளக்கிவிட்டு, நீயும் தாவரங்கள் வெளிப்படுத்தும் சத்துக்களைத் தனித் தனியாகப் பிரித்து, ஈர்த்து, அதை மற்ற ஒன்றுடன் கலக்கச் செய் பார்ப்போம் என்றார். எனக்குத் தெரியாது என்று சொல்ல பயம். நான் மௌனமாக இருந்தேன். 'நான் கேட்கிறேன், மௌனமாய் இருக்கிறாய்' என்று கேட்டு விட்டு பலமாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டார். வேறு எதுவும் சொல்லப் போகிறாரோ என்று பயத்துடனிருந்தேன், சிறிது நேரம் கழித்து, 'கணேஷ் பீடிக்கட்டு, 25 பீடிகள்', அந்தக் கட்டைப் பற்ற வைத்து என் வாயில் வைத்து உறிஞ்சச் சொல்லிவிட்டு என் காதில் ஏதேதோ சொல்லிக் கொண்டேயிருந்தார். அப்பொழுது தாவரங்களின் வாசனையையும், சத்தின் ஆற்றலையையும் என்னால் நுகரமுடிந்தது. அந்தப் பீடிகள் அனைத்தும் தீர்ந்தபின், சிறிது நேரம் தியானத்தில் அமரச் செய்தார். அச்சமயம் என் உணர்வுகளில், காட்சி யாக, பல உண்மைகளை உணர்த்திக் கொண்டிருந்தார். அதன் பின் 'பாஷிங் ஷோ' சிகரெட்டு பத்தை (10) ஒன்று போல் பற்றவைத்து, முதலில் செய்த மாதிரியே காதில் சொல்லிக் கொண்டே இருந்தார். சிகரெட் தீர்ந்தபின் சில நிலைகளை உணர்த்திவிட்டு, பீடியைப் பற்றவைத்து, காற்றில் இருக்கும் மூலிகைகளின் சத்தை தனித் தனியாக ஈர்த்து, கடும் நோய்வாய்ப்பட்டு இருப்போர்க்கு, எவ்வாறு செலுத்தி அவர்களின் பிணி களைப் போக்குவது என்ற நிலைகளை உணர்த்தினார். பின் இரவு முழுவதும் காட்டிலேயே இருந்தோம்.*

மறுநாள் ஆனைமலைக் காட்டிற்கு இட்டுச் சென்றார். இவ்வாறு மலைகளுக்கும் காடுகளுக்கும் இட்டுச் சென்று, பல உண்மை நிலைகளை உணர்வாகவும், காட்சியாகவும் உணர்த்தினார்.

## கேதார்நாத்தில் தியானம்

இமயமலை கேதார்நாத்திற்கு இட்டுச் சென்று, என் சட்டைதுணிகளை அகற்றிவிட்டு, கோவணத்துடன் உடலை மறந்து தியானம் இருக்கும்படிச் சொன்னார். எங்கே உடலை மறப்பது? ஆடைகள் இருக்கும்போதே குளிர் தாங்க முடியவில்லை. ஆடைகளை அகற்றியதும் என் இருதயம் விர் என்று இரைய ஆரம்பித்துவிட்டது. அவ்வளவுதான், என்னால் பேச முடியவில்லை. என் நிலையைப் பார்த்து விட்டுப் பெரும் சிரிப்பாய்ச் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். சிறிது நேரத்திலேயே என் நிலை தடுமாற ஆரம்பித்து விட்டது. பின் என் காதில் ஏதோ சொல்லித் தியானம் இருக்கச் சொன்னார். அதன்பின் என் உடலில் சூடு ஏற ஆரம்பித்துவிட்டது. அச்சமயம் பேரானந்தமும் பேரானந்தத்தின் உண்மை நிலைகளையும் உணர்த்திக் கொண்டேயிருந்தார். தியானத்தில் இருந்து விடுபட்டவுடன் என் நிலை குளிர் தாங்கமுடியவில்லை. பின் என்னை பழனிக்கு அழைத்து வந்துவிட்டார்.

## பழனியில் பஸ்களை வழிமறித்தல்

பழனிக்கு வந்தபின், பஸ்களை மறிக்கச் சொல்கிறார். ரோட்டில் குறுகலான இடங்களில் உட்கார்ந்து எழுதச் சொல்கிறார். திகைத்து நின்றால் என் சட்டையைக்



கிழித்து விட்டு, ‘நான் சொல்வதைச் செய்கிறேன் என்றாயே, இப்பொழுது செய்’ என்பார். இப்படி ஒரு சில தினங்களில் என்னைப் பார்ப்பவர்கள் பைத்தியம் என்று எண்ணுமளவிற்குச் செய்து விட்டார். என் குடும்பத்திலும் என்னைப் பார்த்தால் வெறுப்பு. நண்பர்கள் மத்தியிலும் அவமதிப்பு. இதனால் என் மனம் மிகவும் வேதனைப்பட்டு, ‘இருப்பதா, இறப்பதா’ என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, குருநாதரிடம் என் நிலைகளைச் சொல்லி, பழனி பக்கம் ஏழாவது மைலில் உள்ள பாப்பம்பட்டி என்ற ஊரில், என் நண்பர் ரைஸ்மில் ராமசாமி நாயுடு என்பவர் வீட்டில் 10 நாள் தங்கிவிட்டு வருகிறேன் என்று கேட்டேன். அவரும் ‘சரி’ என்று சொன்னார். அதன் படி பாப்பம்பட்டிக்குச் சென்று ராமசாமி நாயுடு ரைஸ் மில்லில் தங்கினேன். அச்சமயம் ராமசாமி நாயுடு நாளை கழித்து மலையடிவாரத்தில் உள்ள எங்கள் வீட்டில் 10 நாளும் ‘தங்குவோம்’ என்றார். நானும் ‘சரி’ என்றேன்.

## புற்றுநோயைக் குணமாக்குதல்

மறுநாள் காலையில் ராமசாமி நாயுடுவைப் பார்க்க ஜாதகம் பார்க்கும் மகாலிங்கம் என்பவர் வந்தார். நாங்களிலிருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது மகாலிங்கம், ‘என் அண்ணன் பையனுக்கு புற்றுநோய் என்று சொல்லி சென்னைக்கு அழைத்துப் போய்ப் பார்க்கும்படி சொல்லி விட்டார்கள்’ என்று சொன்னார். அச்சமயம் ராமசாமி நாயுடு என்னைப் பார்த்து ‘உன் குருநாதர் சொல்லிக் கொடுத்ததை வைத்து அந்த பையனுக்கு குணமாக்க முயற்சி செய்’ என்றார்.

நான் சிறிதுநேரம் யோசனை செய்துவிட்டு, எனக்கு 'இந்த வியாதிக்கு எப்படிச் செய்வது என்று முழுவிவரம் தெரியாது. எப்படி இந்தப் புற்றுநோய்க்கு மருந்து கொடுப்பது' என்று சொன்னேன். ராமசாமி நாயுடுவோ விட்டபாடில்லை. அந்தப் பையனுக்கு குருநாதரை நினைத்தாவது விபூதியைக் கொடுத்து கொஞ்சம் வலியை நிறுத்தப் பாரேன் என்று வலியுறுத்திச் சொன்னதன் பேரில், மகாலிங்கம் வீட்டிற்கு சென்று, அவர்கள் வீட்டில் இருக்கும் முருகன் படத்தை வைத்து பால், பழம் வைத்து, தீப ஆராதனை செய்துவிட்டு தியானத்தில் இருந்து அந்தப் பையனின் வயிற்றுவலி குறைய வேண்டும் என்று எண்ணி விபூதியைக் கொடுத்தேன். ஆனால், வலி குறைவதற்குப் பதிலாக வயிற்றுவலி அதிகமாகித் துடிக்க ஆரம்பித்து விட்டான். பின் மலமும் இரத்தமுமாக பேதியாகியது. இதைப் பார்த்த மகாலிங்கத்திற்கு மிகவும் பயம் வந்துவிட்டது என்ன ஆகுமோ என்று இதைக் கண்டு பக்கத்தில் உள்ளவர்கள் என்னை முறைத்துப் பார்த்ததோடு அல்லாமல் திட்டவும் தொடங்கி விட்டனர்.

சிறிது நேரத்தில் எனக்கு குருநாதர் காட்சி கொடுத்து, 'நான் மருந்து கொடுத்துள்ளேன். இன்னும் மூன்று நாழிகையில் அந்தப் பையன் வயிற்றில் உள்ள கட்டி வெளியில் வந்துவிடும். அவனுக்கு உன் கையால் நீரில் சாதத்தைப் பிசைந்து நீராக வடித்துக் கொடுத்துக் கொண்டேயிரு. அந்தக் கட்டி வெளியில் வரும் வரை' என்றார். ஆனால், இந்த விவரத்தைச் சொல்லி சாதமும் நீரும் கொண்டு வரும்படி சொன்னால் யாரும் கேட்பதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, என் மீது



வெறுப்பும் கோபமுமாகத்தான் பேசினார்கள். மகாலிங்கமோ பயத்தால் புலம்பிக் கொண்டிருந்தார். அச்சமயம், மகாலிங்கத்தின் மகள் 11 வயதிருக்கும், அவர் மகனுக்கு 14 வயதிருக்கும், அந்த இருவருக்கும், எனக்கு குருநாதர் காட்சி கொடுத்ததைப் போலவே காட்சி கொடுத்து சாதத்தை நீரில் கரைத்துக் கொடுத்தால் கட்டி வெளி வந்து குணமடைவார் என்று சொன்னதாக சொன்னதும், அங்கிருந்தவர்கள் அமைதி கொண்டு, அந்த இருவரும் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். பின்னர் மூன்று நாழிகை கழிந்தது.

குருநாதர் சொன்னபடி கட்டி வெளிவந்து பையனுக்கு வயிற்று வலியும் நின்றுவிட்டது. ஆனால், எட்டு நாளைக்கு மகாலிங்கம் வீட்டிலேயே தங்கி, என் கையால் சாதத்தை நீரில் கரைத்து இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை, கரைத்த நீரைக்கொடுத்து வரும்படி குருதேவர் சொல்லிவிட்டார். அதன் படியே செய்து கொண்டிருந்தேன். மறுநாள், அந்தப் பையன் தெளிவாகவும், சந்தோஷமாகவும் இருந்தான். இதைப் பார்த்த அந்தக் கிராமத்து மக்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு, ‘எனக்கு மேல்வலி, தலைவலி, காய்ச்சல், நீங்க விபூதி கொடுங்கள்’ என்று என்னை மொய்த்து விட்டார்கள். ஆனால், அந்தச் சமயம் ஊர் முழுவதும் டிங்கி காய்ச்சல் பரவிக் கொண்டிருந்த நேரம், விபூதி வாங்கிச் சென்றவர்கள் எல்லோரும், மறுநாள் என்னிடம் வந்து எனக்குக் காய்ச்சல் குணம் அடைந்து விட்டதென்று என்னிடம் சொல்லிவிட்டு, அவர்களுடன் இன்னும் பலரைக் கூட்டிக்கொண்டு வரத் தொடங்கி விட்டார்கள். அச்சமயம் ராமசாமிநாயுடு என்னைப் பார்க்க வந்தார்.

இங்கு நடந்த நிகழ்ச்சிகளைக் கேள்விப்பட்டு ஆச்சரிய மடைந்தார். பின்பு 'நீங்கள் இங்கேயே இருங்கள். நான் தோட்டத்தில் சாலையை அமைத்துவிட்டு உங்களைக் கூட்டிக் கொண்டுபோய் அங்கு அமர்த்துகிறேன்' என்று சொல்லிவிட்டு ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு, புறப்பட்டார். இவ்வாறு 10 நாட்கள் ஆகிவிட்டன. பையனும் மிகவும் நலமாய் இருந்தான். ஜனங்களின் வருகையும் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

திடீர் என்று குருநாதர் எனக்குக் காட்சி கொடுத்து 'இந்த நிமிஷமே பழனிக்குப் புறப்பட்டு வா' என்று சொன்னார். நான் திகைத்துப் போனேன். எனக்குச் சொன்னதைப் போலவே மகாலிங்கம் குழந்தைகளுக்கும் காட்சி கொடுத்து, உடனே பழனிக்குப் புறப்படு என்று சொல்லுகிறார் குருதேவர், என்று அந்த இருவரும் என்னிடம் சொல்ல, நானும் பழனிக்குப் புறப்பட தயார் ஆனேன். அங்கு என்னை பார்க்க வந்த கூட்டமோ என்னைப் பழனிக்குப் போகவிடமாட்டாத நிலை. நான் எப்படியோ சமாளித்துக் கொண்டு பழனிக்கு வந்தேன், குருதேவரைப் பார்க்க. அவர் வழக்கமாக, இரவில் இரண்டு மணி அளவில், கங்கா பைண்டிங் திண்ணையில், வந்து உட்கார்ந்திருப்பது வழக்கம். அவர்களும் குருதேவரிடம் பல வித்தைகளைக் கற்றுக்கொள்ளவும், வைத்திய முறைகளைத் தெரிந்துகொள்ளவும் முயற்சி செய்து கொண்டவர்கள். இவர்களைப் போன்றே இன்னும் பலர் முயற்சி செய்ததுண்டு. ஆகவே 'கங்கா பைண்டிங்'காரரிடம் விசாரித்தேன், குருதேவர் எங்கிருக் கிறார் என்று. அச்சமயம் குருதேவரிடம் வித்தைகள், வைத்தியங்கள் விவரங்களை அறிந்துகொள்ளும் நோக்கத்



*துடன் வந்து பார்ப்பவர்கள் நான்கைந்து பேர்களிருந் தார்கள். இவர்களனைவரும் 'குருதேவர் எங்கிருக்கிறார்' என்று நான் கேட்டதைக் கேட்டு, சிரிக்கத் தொடங்கி விட்டார்கள். பின்பு என்னைப் பார்த்து, 'நீதான் ஈஸ்வரப் பட்டருக்குத் தொல்லைகள் கொடுத்துக்கொண்டு என்ன என்னமோ செய்கிறாயாம்' என்று சொல்லிக் கொண்டு, 'தெலுங்கு ராஜ்யம்' என்று சொல்லி கொண்டு திட்டிக் கொண்டே, பழனியில் தெருத் தெருவாய்த் திட்டிக் கொண்டே 10-நாளாய் சுற்றிக் கொண்டிருந்தவர், இன்று காலையில் ஒரு கைகால் வராமல் இங்கே விழுந்து கிடந்தார்; நாங்கள் தூக்கிக் கொண்டுபோய் ஆஸ்பத்திரி யில் சேர்த்துவிட்டு வருகிறோம், என்று சொல்லிவிட்டு, மேலும் அவர் ஆஸ்பத்திரியில் ஒரே சத்தம் போட்டுக் கொண்டு, உருண்டு கொண்டே போய் அங்கிருக்கும் கட்டிலை இழுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்; அங்குள்ள நோயாளிகள் பயந்து வெளியே வந்து விட்டார்கள். டாக்டர்கள் வந்து 'இவரைத் தூக்கிக் கொண்டு போங்கள்' என்று எங்களைச் சத்தம் போட்டார்கள். நாங்கள் விட்டுவிட்டு வந்துவிட்டோம். அதைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். நீங்கள் வந்து விட்டீர்கள் என்று சொன்னார்கள்.*

## அடிக்க வந்தவர்கள் ஆசீர்வாதம் பெறுதல்

*ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தேன். அவர் பெட்டில் இல்லை; அவரைப்பற்றி விசாரித்தேன்; அங்குள்ளவர்கள் விவரத்தைச் சொன்னார்கள். சவக்கிடங்கு பக்கம் தனிக் கொட்டடியில் இருக்கிறார் என்று. அங்குபோய் அவரைப்*

பார்த்த உடன் 'ஏன் இவ்வளவு நேரம்' என்று கேட்டு விட்டு, 'அந்தக் கொட்டகையில் உள்ள தட்டிகளைப் பிரித்துக் கொண்டு வா' என்றார். நான் திகைத்து நின்றேன். 'நான் சொல்வதைச் செய்கிறேன் என்றாய். இப்பொழுது நான் சொல்வதைச் செய்' என்றார். அவர் சொன்னபடி தட்டிகளை கழட்டி வந்தேன். 'அதில் நெருப்பு வைத்துக்கொளுத்து' என்றார். நான் என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்துப்போய் நின்றேன். பலமாகத் திட்ட ஆரம்பித்து விட்டார். 'தீயை வை' என்று அவர் சொன்னபடி தீயை வைத்தவுடன் டாக்டரும் மற்றவர்களும் ஓடிவந்து என்னைப் பிடித்துக்கொண்டு 'போலீசில் ஒப்படையுங்கள்' என்று சொன்னார்கள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த குருதேவர் இன்னும் பலமாக சத்தம் போட ஆரம்பித்து விட்டார். ஆனால் அவர் சொல்லும் பாஷை அங்கு உள்ளவர்களுக்கும் தெரியவில்லை. உடனே நெருப்பு முழுவதும் தீ வைத்தது போன்று இல்லாது, பழைய நிலையில் தட்டியாக இருந்தது. அதைப்பார்த்த டாக்டரும் மற்றவர்களும் குருதேவர் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். பிறகு அவர்கள் என்னை விட்டு விட்டுச் சென்றனர்.

## ஓடாத ஆட்டோவை ஓட வைத்தல்

அவர்கள் போனபின்பு என்னிடம், நீ போய் உன் நண்பனிடம் சொல்லி 'ஆட்டோவைக் கூப்பிட்டு வா' என்று சொன்னார். அந்த நண்பரோ 'முஸ்லீம்'. அவரிடம் போய் 'ஆட்டோ'வைக் கேட்டால் 'ஆட்டோ' ரிப்பேராய் இருக்கிறது. உன் குருதேவர் உனக்கு சக்தி கொடுத்தி ருந்தால், அந்தச் சக்தி கொண்டு இதை ஓட வை.



எனக்கு ஒரு காசும் கொடுக்க வேண்டாம். 'நீங்கள் எங்கே கூப்பிட்டாலும் வருகிறேன்' என்றார். அது மட்டுமல்ல. 'ஏன் ஐயா உனக்கு இந்தப் புத்தி? பைத்தியத்துடன் கூட சேர்ந்து பைத்தியமாய்ச் சுற்றிக் கொண்டு, பிள்ளை குட்டிகளைத் தெருவில் விட்டுவிட்டு' என்று ஏளனமாய்ப் பேசத் தொடங்கிவிட்டார். நானும் விட்டபாடில்லை. 'ஓட்டிப்பார்' என்றேன். நான் ரிப்பேர் செய்யக் காசு இல்லாமல் இரண்டு நாளாக நிறுத்தி வைத்துள்ளேன். 'எப்படி ஐயா ஓடும்?' என்றார். நானும் விடாப்பிடியாய் 'ஓட்டிப்பாரும்' என்றேன். அவரும் ஓட்ட முயற்சி செய்தார். சிறிது நேரத்தில் ஓட ஆரம்பித்து விட்டது. அவ்வளவுதான், ஒன்றும் பேசாமல், நீ எங்கு கூப்பிட்டாலும் வருகிறேன். பெட்ரோலுக்குக் கூட காசு வேண்டாம் என்று சொல்லிவிட்டு என்னுடன் வந்து குருதேவரை ஆஸ்பத்திரியிலிருந்து கூட்டிக் கொண்டு பாப்பம்பட்டி சென்றோம். அங்கு ராமசாமி நாயுடுவின் ரைஸ்மில்லில் இறங்கிக் கொண்டு, ஆட்டோவைப் பழனிக்குப் போகச் சொல்லிவிட்டேன்.

## ஐவர் மலைக்குச் செல்லுதல்

குருதேவர் 'ஐவர்மலைக்குக் கூட்டிக்கொண்டு போ' என்றார். ராமசாமிநாயுடு தோட்டத்தில் கரும்பு வெட்டாகி ஆலை ஆடிக்கொண்டிருந்தது. அதனால் கரும்புத் தோட்டத்திற்கு குருதேவரைக் கூட்டிக்கொண்டு போய் விட்டு நாளை ஐவர்மலைக்குப் போகலாம். அங்கு வேண்டிய வசதிகளை செய்துவைக்க ஆட்களை அனுப்பி வைக்கிறேன், என்று சொல்லிவிட்டு எங்களைக் கரும்புத் தோட்டத்திற்குக் கூட்டிச் சென்றார். அங்கு

கரும்பு ஆலை ஆடும் பக்கம் கொட்டகையில் இருக்கச் செய்தார் குருதேவர். அந்தக் கொட்டகையைச் சுற்றிலும் கரும்புத் தோகை காயப்போட்டு இருந்தார்கள்; அன்று இரவு ஒரு மணி சுமார் இருக்கும். கொட்டகையி லிருந்து உருண்டுகொண்டே போய்க் கரும்புத் தோகையில் தீயை வைத்துவிட்டார். அவர் வேகமாக உருண்டு கொண்டே, கொட்டகைக்குள் வந்ததும் என் பெயரைச் சொல்லி 'தீயை வைத்துவிட்டான்' என்று கூச்சல் போட ஆரம்பித்து விட்டார். தீ வேகமாகப் பரவ ஆரம்பித்து விட்டது. அங்குள்ள வேலையாட்களால் எது செய்தும், 'தீ' பரவுவதைத் தடுக்க முடியவில்லை. குருதேவரோ சிரிசிரியென்று பலமாகச் சிரிக்கிறார். நாங்கள் இருக்குமிடம் வரையில் தீ பரவிக் கொண்டு வருகிறது. சிறிது நேரத்தில் நாங்கள் இருக்குமிடமும் தீ பிடித்துவிடும் நிலையடைந்துவிட்டது. இவர் சிரிப்போ அடங்கவில்லை. மற்றவர்களோ அலறுகிறார்கள். நான் என்ன செய்வதென்று தெரியாது, விழித்துக் கொண்டி ருக்கிறேன். திடீரென்று சிரிப்பை நிறுத்தினார் குருதேவர். நெருப்பு அணைந்துவிட்டது. அலறியவர்கள் சிரிக்கத் தொடங்கி விட்டார்கள். அங்குள்ளவர்களுக்கு ஆச்சரியமாக ஆகிவிட்டது. மறுநாள் ஐவர்மலைக்கு ஒரு கூண்டு வண்டியில் குருதேவரைக் கூட்டிக்கொண்டு போனோம். ராமசாமி நாயுடு எங்களை மலையில் விட்டுவிட்டுப் பாப்பம்பட்டி திரும்பிவிட்டார். நானும் குருதேவரும் ஐவர் மலையிலிருந்தோம். இரவு 10 மணி வரை பல உபதேசங்களைக் கொடுத்துக் கொண்டிருந்துவிட்டு, என்னைப் படுத்துத் தூங்கச் சொல்லி விட்டு அவரும் படுத்துக்கொண்டார்.



# வித்தைகளைக் கற்றுக்கொள் என்றார்

விடியற்காலை நான்கு மணியளவில் நாங்கள் படுத்திருந்த இடத்திலிருந்து சிறிது தூரம் தள்ளி மலை உச்சியிலிருந்து குருதேவர் சத்தம் கேட்டது. 'என்னைக் காப்பாற்று; இப்படி இரண்டு மூன்று தடவை சத்தம் வருவதைக் கேட்டு விழித்துப் பார்த்தேன். குருதேவர் என் பக்கம் படுக்கையிலில்லை. அவர் சத்தம் போடு வதைக் கேட்டுக்கொண்டே அவர் இருக்குமிடத்தை அடைந்தேன். நிலா வெளிச்சமிருந்தது. அவர் இருக்கு மிடத்தைப் பார்த்தால் வழுக்கலான இடம், எந்தப் பிடிமானமுமில்லை. 'என்னைக் காப்பாற்று' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். என் வேஷ்டியைக் கழட்டி, முறுக்கி குருதேவரைப் பிடித்துக் கொள்ளும்படி சொல்லி நான் ஒரு முனையில் பிடித்துக் கொண்டு, வேஷ்டியைப் போட்டேன். அவருக்கு எட்டவில்லை. சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, என் காலில் ஒரு பக்கம் வேஷ்டியை கட்டிக்கொண்டு பாறையில் நான் படுத்துக் கொண்டு, அவரிருக்கும் பக்கம் சறுக்கிக் கொண்டு, ஒரு பக்கமுனை வேஷ்டியைப் பிடிக்கச் செய்ய முயற்சி செய்தேன். ஆனால், அவரிருக்கும் பக்கம் போகாமல், அதற்கு மாறாக வேறு பக்கம் என்னை வழுக்கிக் கொண்டு போய் நான் கீழே விழுந்துவிடும் நிலையேற்பட்டு விட்டது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த குருதேவர், 'என்னைக் காப்பாற்றுகிறேன்' என்று சொன்ன நீ 'எங்கேயோ போகிறாய்' என்று சொல்லிப் பலமாகச் சிரிக்க ஆரம்பித்து விட்டார். சிறிது நேரத்தில் 'வித்தையைக் காட்டுகிறேன் பார். அதைக் கற்றுக்கொள்' என்றார். நானோ மரணப் போராட்டத்தில் சிறுகச் சிறுக வழுக்கிக்

கொண்டே போய்க் கொண்டிருக்கிறேன். பாறைகள் என் உடலில் உராசியதால் இரத்தம் வெளிப்பட்டு, வழுக்கல் அதிகமாகவிட்டது. குருதேவரோ 'நான் சொல்வதைக் கேள். வித்தையைக் கற்றுகொள்' என்றார். நானோ இன்னும் சிறிது நேரத்தில், மலை அடிவாரத்தில் போய் வித்தையைக் கற்றுக்கொள்கிறேன் என்று மனம் தளர்ந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தேன். அச்சமயம் குருதேவர் பல அற்புத உபதேசங்களை உபதேசித்தார். ஆனால், அவர் சொல்வதைக் கவனித்துக் கேட்க முடிய வில்லை. நான் கீழே விழுந்து இறந்துவிடுவேன் என்ற உணர்வே இருந்தது. அவர் சொல்வதைக் கேட்கக் கூட முடியவில்லை. இந்த நிலையில் பலமாகச் சிரித்து விட்டு, திடீரென்று எழுந்து நின்றுகொண்டு, என் அருகில் வந்து கைகொடுத்து தூக்கி நிறுத்தி, என்னை அழைத்துச் சென்று சமமான இடத்தில் அமரச் செய்தார்.

பின்னர் சிவநடனம் போன்று மிக அற்புதமாக ஆடத்தொடங்கிவிட்டார். பின்பு அமைதி கொண்டு பல உபதேசங்களைக் கூறினார். பின்பு வானை நோக்கிப் பார்க்கும்படி சொன்னார். அப்பொழுது வானில் அணுக் களின் நிலைகளைக் காட்சியாகவும், உணர்வாலும் உணர்த்திக் கொண்டிருந்தார். அதற்குள் விடிந்து விட்டது. சூரிய உதயம் ஆரம்பித்தது. அப்பொழுது சூரியனின் கதிர்வீச்சால் அணுக்களின் துடிப்பையும், அசைவையும் காட்டி பல அணுக்களின் ஆற்றலின் சக்திகள், ஒன்றுடன் ஒன்று கலந்து ஓர் புதிய அணு உருப்பெறுவதை உணர்த்தி, இவ்வாறு பல ஆற்றலின் அணுசக்திகளின் கலப்பில், ஒன்று சேர்ந்து ஒரு பொருள் உருப்பெறும் நிகழ்ச்சிதான் 'பிரம்மா' என்று உணர்த்திவிட்டு, இதைத்

தான் முன்னோர்கள் பிரம்மா உருவாக்குகிறான் என்று பெயர் வைத்தனர் என்றார். பின்பு இவ்வாறே, சிறுகச் சிறுக பலகோடி அணுக்கள் ஒன்று கூடி வளர்ந்து சூரியனாக வளர்ச்சிபெற்று, சூரியனில் விளைந்த அணுக்கள் பிரபஞ்சத்தில் படர்ந்து கோள்களாகவும், நட்சத்திரங்களாகவும், உயிர் அணுக்களாகவும் உருப்பெற்றது, என்று உணர்த்திவிட்டு, இன்னும் சூரியனின் ஈர்ப்பின் அணைப்பில் பேராற்றல்களை கொடுத்துக் கொண்டு, வளர்த்துக் கொண்டு உள்ளதால் சர்வத்தையும் இயக்கும் ‘சர்வேஸ்வரா’ என்று பெயரை வைத்தனர். சூரியனிலிருந்து வெளிப்பட்ட பலகோடி அணுக்கள் ஒன்றாகி, ஒரு பொருளாகி, பூமியாக வளர்ந்த ‘பரம்பொருளை’ ‘பரமேஸ்வரா’ என்று பெயரை வைத்தனர். சூரியனிலிருந்து வெளிப்படும் ஆற்றலையும், அணுக்களையும், உயிர் அணுக்களையும் நம் பூமி ஈர்த்து எடுத்துக்கொண்ட ஆற்றலின் அலைகள், நம் பூமியில் காற்றாகப் படர்ந்து ஆத்மாவாக இருப்பதை ‘பரமாத்மா’ என்று பெயர் வைத்தனர், முன்னோர்கள் என்று, உணர்த்திவிட்டு பரமாத்மாவிற்குள் உயிர் அணுவாய் இருந்து புழுவிலிருந்து மனிதன் வரை உருவாக்கிய உயிரை ‘ஈஸ்வரா’ என்று உணர்த்திவிட்டு, ஓர் உயிர் அணுவிலிருந்து எவ்வாறு எல்லாம் உடல் அழிந்து, உடலில் சேர்த்துக்கொண்ட வினைகள், உயிரில் ஆத்மாவாகச் சேர்ந்து, சேர்த்துக் கொண்ட வினைகளுக்கு ஒப்ப மறுஜென்மத்தில் உடலின் உருவம் எவ்வாறு மாறுபடுகிறதென்று உணர்த்திவிட்டு, பல நிகழ்ச்சிகளைக் காட்சியாகக் காண்பித்தார்.

## குருதேவரை முதுகில் சுமந்து செல்லுதல்

காலை மணி 7.00 ஆகிவிட்டது. சாமியார்கள் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வரத் தொடங்கி விட்டார்கள். மறுபடியும் கைகால்கள் வராததைப் போன்று படுத்துக்கொண்டார். பின்பு என் முதுகில் குருதேவரைத் தூக்கிக் கொண்டு, நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம். 3.00 மணியளவில் ஆகாரத்தை முடித்துக் கொண்டோம். சிறிது நேரம் கழித்து உபதேசம் செய்து காட்சியாகப் பல நிகழ்ச்சிகளைக் காண்பித்தார். பிறகு சிறிது நேரம் கழித்து, குருதேவர் உடலை விட்டு உயிராத்மா வெளியில் வந்து சூட்சமத்தில் இருந்து கொண்டு, பல நிகழ்ச்சிகளைச் செய்து காட்டியது. பின்பு அவர் உடலுக்குள் சென்று விட்டது. குருதேவர் எழுந்து உட்கார்ந்து கொண்டு பல விளக்கங்களை உணர்த்தி உபதேசித்தார்.

## மனிதனின் வாழ்க்கை

ஒவ்வொரு மனிதனின் உயிரிலும், ஒவ்வொரு நட்சத்திரத்தின் ஆற்றல் இயங்கிக் கொண்டுள்ளது. ஆனால், சூரியன் எவ்வாறு கோள்களையும், நட்சத்திரங் களையும், சந்திரனையும், பூமியையும், விண்மீன்களையும் தன் ஈர்ப்பின் அணைப்பில் வளர்த்துக்கொண்டு, தன் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டு ஜீவிக்கின்றதோ, அதைப் போன்று ஒவ்வொரு மனிதனின் உயிர் சூரியனாக இருந்து கொண்டு, உயிரில் சேர்ந்துள்ள ஆத்மாவின் உணர்வுகள்

கோள்களைப் போன்று மனித உடல்களின் தசைகளாக உருப்பெற்று, தசைகளில் விளைந்த நுண் அணுக்கள், நட்சத்திரங்களாக உருப்பெற்று, நுண் அணுக்களின் உணர்வுகள் உயிரின் ஈர்ப்பில் சேர்ந்து, உயிராத்மாவாக எவ்வாறு இயங்குகின்றது என்று உணர்த்திக்கொண்டி ருக்கும்போது, திடீர் என்று என்முன் ஒரு கோர உருவம் தோன்றியது. அதைப் பார்த்ததும் என்னையறியாது பயத்தால் சத்தம் போட்டுக் கத்திவிட்டேன். சிறிது நேரம் பயத்தால் நடுக்கம் இருந்து கொண்டேயிருந்தது. பின் நடுக்கம் நின்று நான் அமைதியடைந்தேன்.

மீண்டும் கோர உருவம் தோன்றும், அப்போது உன் கண்களின் பார்வையின் ஈர்ப்பினால், பய உணர்வுகள், உன் உடலில் உள்ள காந்த ஆற்றல்களில் மோதப்பட்டு காற்றில் மிதந்துகொண்டிருக்கும் பய உணர்வலைகளை உன் உடல் ஈர்த்து, உன் சுவாசத்தால் உயிராத்மாவின் உணர்வில் மோதி, பய உணர்வுகள் உன் உடலை நடுங்கச் செய்து, உன்னை யறியாது எவ்வாறு சப்தம் போடுகிறாய் என்பதையும், பயத்தால் ஈர்க்கப்பட்ட மூச்சில் கலந்துள்ள பய உணர்வுகளை உன் உடலிலுள்ள இரத்தத்தில் கலந்து வடித்துக்கொண்டு, வெறும் காற்றாக மூச்சு வெளிப்படுகிறது என்பதைப் பார் என்றார். இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போது, திடீர் என்று கோர உருவம் மீண்டும் தெரிந்ததும், பயவுணர்வுகள் என் உடலை இயக்கி, எண்ணம், செயல்கள் தன்னிச்சையாக இயங்குவதைத் தெளிவாக உணர்த்தினார்.

இவ்வாறு மனிதனின் வாழ்க்கையில், ஒவ்வொரு சந்தர்ப்பம் சுற்றுப்புறச் சூழ்நிலைகளால், உணர்வுகளின் உந்துதலால், சுவாசிக்கும் மூச்சில் கலந்துவரும் உணர்வு

களை இரத்தத்தில் வடித்து வைத்து உணர்வுகள் தசை களாக மாறும்போது பயத்தால், கோபத்தால், ஆத்திரத்தால், சோர்வால், குரோதத்தால், வேதனையால் சுவாசித்த உணர்வுகள் இரவில் தசைகளாக மாறும்பொழுது, தசை களில் எதிர்ப்பு உணர்வுகள் உருப்பெறுவதும், அதனால் உடலில், தசைகளில் வலி உண்டாவதும், நோய்கள் உருப்பெறக் காரணம் ஆகின்றன.

இவ்வாறு இரத்தத்தில் கலந்துள்ள உணர்வலைகள் உடலில் உள்ள உறுப்புக்களில் கலந்து, உறைந்து, வடித்த உணர்வுகள் எலும்புக்குள் ஊனாக வடித்து உறைந்து விடுகின்றன. அதாவது, ஒரு மரம், கொய்யா மரம் என்று வைத்துக் கொள்வோம். எத்தனை வகையான உணர்வின் ஆற்றல்கள் கலந்து வித்தாகி மண்ணில் பதிந்து செடியாக முளைத்து, மரமாக வளரும்போது, புவி ஈர்ப்பின் துணையால் காற்றில் மிதந்து கொண்டிருக்கும். தன் உணர்வின் ஆற்றலின் சத்தை தனக்குள் ஈர்த்து, உறைய வைத்து, வளர்த்துக்கொண்டு, தான் மூச்சு விடும் போது, கொய்யா மரத்தின் மணத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றதோ, அதைப்போன்று எலும்புக்குள் ஊனாக உறைந்து, உணர்வுகள் உயிரின் இயக்கத்தால் மரத்தைப்போன்று தன்னிச்சையாக ஈர்ப்பதும், நாம் சுவாசிக்கும்போது சுவாசத்துடன் கலந்து, இரத்தத்தில் கலந்து, தசைகளாக மாறி, தசைகளில் நுண் அணுக்களாக விளைந்து, விளைந்த நுண் அணுக்கள், உயிரின் ஈர்ப்பில் சேர்ந்து உயிராத்மாவாகி, நாற்பத்தெட்டு நாட்களில் நுண் அணுக்கள், அணு சிசுக்களாக உருப்பெறுகின்றன. நாம் சுவாசிக்கும் உணர்வுகள் அணு சிசுக்களில் மோதியதும் எண்ணம், சொல், செயல் என்று உணர்ச்சிகள் உந்தச் செய்து மனிதனை இயங்கச் செய்கின்றன.



இவ்வாறு மனித வாழ்க்கையில் உயிராத்மாவில் உருப்பெற்ற அணுசிசுக்கள், மனிதன் இறந்தபின் உடலை விட்டுப் பிரிந்து சென்று காற்றுடன் (பரமாத்மாவில்) கலந்துவிடுவதும், பிரிந்து சென்ற உயிராத்மாவால் எந்த வகை உணர்வின் மணத்துடன் காற்றில் மிதந்துகொண்டு இருக்கிறதோ, அதேவகை உணர்வுகளின் உணர்ச்சியால் எதிர்பாராது உந்தி சுவாசிக்கும் உடல்களில் ஈர்க்கப் பட்டு, அந்த உடலின் இரத்தத்தில் கலந்து, உடலின் இயக்கத்தால் இந்திரியத்தில் கலந்துவிட்ட உயிராத்மாவின் அணு சிசுக்கள், அந்த உடலின் உருவமாக உருபெறச் செய்யும் அணு சிசுக்களாக வளர்ச்சி பெறுகின்றன. அதாவது குளவி, தன் உமிழ் நீரால் மண்ணைக் கலக்கி, அதை எடுத்துவந்து கூடுகட்டி, அந்தக் கூட்டில் புழுவை வைத்து, அந்தப் புழுவைக் குளவி கொட்டியதும், குளவி யின் விஷமான அமிலம், புழுவின் உயிராத்மாவின் அணுசிசுக்களில் சேர்ந்து, கலந்து குளவியின் உருவம் பெறுகின்றதோ, அதைப்போன்றே மனித உடலில் வளர்ச்சி பெற்ற உயிராத்மாவின் மணத்திற்கொப்ப அதே மணத்தின் உடலைக் கொண்ட ஆடோ, மாடோ, மற்ற மிருகமோ, அவைகளின் சந்தர்ப்ப வசத்தால் ஏற்படும் உணர்ச்சிகளின் உந்துதலின், சுவாசத்தின் ஈர்ப்பில் சென்று மறு உடலின் உருவம் அமைகின்றது. இவ்வாறு மனித வாழ்க்கையில், சுற்றுப்புற சூழ்நிலைக்கொப்ப, உணர்வின் உந்துதலின் சுவாசத்தால் எண்ணமும், செயலும், மறு உருவம் பெறுகின்றது என்று உணர்வாகவும், காட்சி யாகவும் உணர்த்தினார்.

சூரியனில் உயிரணுவாய் உருவாகிய உயிர், சூரியனால் இயக்கப்படும் உன் உயிர், உயிரின் ஈர்ப்பில்

பலப்பல உணர்வுகள் சேர்ந்து உடலாகி, உயிரின் இயக்கத்தால் உடலின் உணர்வுகள் இயங்கி, உணர்வின் ஆற்றலே எண்ணம், செயல், உடலின் இயக்கம் ஆகின்றது.

## உயிரே கடவுள்

உயிரே கடவுள். உன் உடலை ஆள்பவனும், ஆண்டவனாக இருப்பவனும் உன் உயிர்தான். உடலின் இயக்கத்தின் உணர்வில் எழும் எண்ணத்தினால் சுவாசிக்கும் உணர்வே (உன் உயிர்) இறையாகி உடல் வளர இறைவன் ஆகின்றான். உன் உடலிலே சேர்த்துக் கொண்ட உணர்வின் ஆற்றலை உன் சொல்லின், செயலின் ஆற்றலும், அதாவது மயில்துத்தத்தை விஷத்தை (பாஷாணம்) கண்களால் பார்க்கிறாய் என்று வைத்துக் கொள். அதைப் பார்க்கும்போது அமைதி கொண்டிருக்கிறது. ஒரு தீங்கும் செய்வதில்லை. அதை நீ சாப்பிட்டால் உன் உடலின் இயக்கமே மாறுபட்டு குமட்டலும், வாந்தியும் வரச்செய்கின்றது. உடலைச் சோர்வு அடையச் செய்கின்றது. இறந்து விடுவோமோ என்ற எண்ணம் தோன்றுகிறது. இதைப் போன்றே மிளகாயைப் பார்க்க, அமைதியாகத் தெரிகின்றது. சாப்பிட்டாலோ 'ஆ' என்று அலறச் செய்கிறது. காரத்தைத் தணிக்க எண்ணம் தோன்று கின்றது. நீரைத் தேடிச் சென்று குடிக்கச்செய்கிறது. சுவையான இனிப்பை சாப்பிட்டாலோ, மனது மகிழ்ச்சி அடைகிறது. ஆனால், இனிப்பு அதிகமாகிவிட்டாலோ அதைத் தணிக்க எண்ணம் தோன்றுகிறது, நீரைத் தேடிச் சென்று குடிக்கச் செய்கிறது. இதைப்போன்றே நீ சுவாசிக்கும் உணர்வின் செயலே, தெய்வம் ஆகின்றது. தெய்வச் செயலாக அமைகின்றது. ஆகவே, நீ வாழ்க்கை

யில் பற்பல குணங்கள் கொண்ட மனிதர்களிடம் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அச்சமயம் எதிர்பாராது ஒரு முரடனிடம் வாக்குவாதங்கள் முற்று கிறது என்று வைத்துக்கொள். நீ உனக்குள்ள வலுவை மனத்தில் வைத்து, ‘உன்னை அழித்து விடுகிறேன் பார்’ என்று முரடனைப் பார்த்துச் சொல்லுகிறாய். உன் சொல்லில் வெளிப்படும் உணர்வுகள் முரடனின் செவி களில் ஒலித்து, அவன் உடலின் உணர்வுகள் உந்தப்பட்டு, உன்னை அழித்துவிடும் எண்ணம் அவனுக்கு அதிகம் உருப்பெறுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நீ சுவாசிக்கும் உணர்வுகள் உன் இரத்தத்தில் கலந்து முரடனை அழித்துவிடும் எண்ணம் உணர்த்திக் கொண்டே யிருக்கும். முரட்டுத்தனமாக உணர்வுகள் உன் உடலில் சேர்ந்துகொண்டே, வினையாக விளைந்து, உன் உடலில் ஆத்மாவாக சேர்ந்து, சேர்த்துக் கொண்ட வினைகள் அணுசிசுக்களாக உருப்பெற்று விடுகின்றன. உன் உடலைவிட்டு உயிர் வெளியே செல்லும்போது உயிரின் ஈர்ப்பில் வளர்ச்சி பெற்ற உன் உணர்வின் வினைகள் மறுபிறவியில், மற்ற ஒன்றைக்கொன்று புசிக்கும் மிருக உருவமாக, உடலைப்பெற்று விடும் என்று உணர் வாகவும், காட்சியாகவும் உணர்த்தினார்.

இதையெல்லாம் அறிந்ததும் என்னையறியாது, எனக்குப் பய உணர்வுகள் வந்துகொண்டிருந்தது. என் சொல்லும், செயலும் நன்மை செய்யும் நிலை பெற வேண்டும். என்னையறியாது என் சொல்லும், செயலும் பிறருக்குத் தீங்கு செய்யாது காக்க வேண்டுமென்று, குருதேவரிடம் வேண்டினேன். அவர் பலமாக சிரித்து விட்டு **‘உயிரே கடவுள்’. அவன் வீற்றிருக்கும் ஆலயம்**

உன் உடல். அதில் அசுத்தம் சேராது காக்க வேண்டியது உன் மனம். உன்னையறியாது அசுத்தப்படுவதைச் சுத்தம் செய்வது உன் பொறுப்பு, என்று கூறிவிட்டு, இந்தப் பூமியில் மனிதர்களாக வாழ்ந்து, வாழ்க்கையில் தன்னுள் சேர்த்த, தீய உணர்வுகளை மாய்த்து மகரிஷிகளாகி, உயிருடன் உணர்வுகள் ஒளியின் ஒளியாய் ஒன்றி, ஒளியின் உருவமாய் ஒளிர்ந்து, விண்ணில் சப்தரிஷி மண்டலங்களாகத் திகழ்ந்து கொண்டு, அதனின்று வெளிப்படும் உணர்வின் ஆற்றலைக்கொண்டு, மகரிஷிகள் வெளிப்படுத்தும் உணர்வின் ஒளி அலைகளை உனக்குள் சேர்த்து, உன்னையறியாது உன்னில் சேர்ந்த தீயவுணர்வு களை மாய்த்து, உன் எண்ணம், சொல், செயல் புனிதம் பெறும். 'இதுவே உனக்குள் உயிராய் வீற்றிருந்து உன்னை ஆண்டு கொண்டிருக்கும் ஆண்டவனுக்கு நீ செய்யும் பணியாகும். இப்பணியில் ஆண்டவனின் பணியாக நீ ஒளிநிலை பெறுவாயாக!' என்று ஆசீர்வதித்தார்.

## குருதேவர் சூட்சமநிலை அடைதல்

*மேலும் பல நிலைகளை உபதேசித்து உணர்த்தி விட்டு, 'நான் மார்கழி மாதம் ஏகாதசியன்று சூட்சமத்தில் செல்கிறேன்' என்று கூறினார்.*

*'என்னைப் பழநிமலையடிவாரத்திற்குக் கூட்டிச் சென்று நான் சொல்லுமிடத்தில் விட்டுவிட்டு, நீ ஐவர் மலையில் தியானத்தில் இருந்துவிட்டு, ஏகாதசி அன்று விடிவதற்குள் பழனிக்கு வந்து நான் சொல்லுமிடத்தில் யாருக்கும் தெரியாமல், மறைவிடத்தில், தியானத்தில் அமரும்படி கூறிவிட்டு என்னை இங்கிருந்து அழைத்துச்*



செல்லுமுன் நான் சொல்லும் நபர்களைச் சந்தித்து என்னை அவர்கள் வீட்டில் தங்கவைக்கும்படி கூறு. ஏன் என்றால் என்னை இந்த நிலையில் அவர்கள் வீட்டில் தங்க வைக்க மறுப்பார்கள். இவர்கள் எல்லாம் என்னிடம் வந்து பல விவரங்களை அறிந்துகொண்டு பொருட்களைச் சேர்க்க வேண்டுமென்ற பேராசையில் என்னை அணுகியவர்கள். அவர்களின் உணர்வுகளையும், செயல்களையும், நீ அறிந்து கொள்வதற்கே இதை உன்னிடம் சொல்கிறேன்' என்றார்.

குருதேவர் சொன்னபடி ஒவ்வொருவரையும் தனித் தனியே சந்திந்து, குருதேவரை அவர்கள் வீட்டில் தங்க வைக்கும்படிக் கேட்டேன். அதற்கு அவர்கள் 'ஏன்? உன் வீட்டில் வைத்துக் கொள்ளேன்' என்றார்கள். நான், 'எங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள வசதியில்லை' என்றேன். 'எனக்கு என்ன வந்தது? அவரை எங்கள் வீட்டில் வைத்துக்கொள்ள?' என்று சொல்லிவிட்டு, ஏளனமாய்ச் சிரித்தார்கள், நான் சந்தித்தவர்கள் எல்லாம். இந்த விவரத்தை குருதேவரிடம் சொன்னதும், நீ தெரிந்து கொண்டாய் அல்லவா? நீ பழனி மலையடிவாரத் திலுள்ள பாட்டுக் கச்சேரி நடக்கும் இடத்தில் என்னை விட்டுவிட்டு, ஐவர் மலைக்கே வந்துவிடு, பின்பு என்னை அங்கு வந்து பார்' என்றார். நான் குருதேவரை அழைத்து வந்து பாட்டுக் கச்சேரி நடக்கும் இடத்தில் இருக்கச் செய்துவிட்டு, ஐவர் மலைக்கு வந்து தியானத்தில் அமர்ந்திருந்தேன். பின்பு குருதேவர் கூறியபடி மார்கழி மாதம் ஏகாதசியன்று பழனிமலை அடிவாரத்தில் குருதேவர் கூறிய மறைவான இடத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தேன்.

## முதல் தெய்வம் என்றால் யார் என்று அறிதல்

குருதேவர் கூறியபடி, குருதேவர் உடலைவிட்டுப் பிரிந்து சூட்சமத்தில் என்னை அணுகி, சூட்சமத்தி லிருந்து கொண்டு 'நீ உன் முதல் தெய்வங்களிடம் சென்று ஆசி பெற்று வா' என்று குருதேவரின் குரல் மட்டும் கேட்டது. உருவம் தெரியவில்லை. நான் திகைத்துப்போய் முதல் தெய்வம் என்றால் யார்? என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, 'இதைத் தெரிந்து கொள்ளத் தெரியாதவன், பின் எதைத் தெரிந்து கொள்ளப் போகிறாய்?' என்று குருதேவரின் குரல் இரண்டாவது முறையாகக் கேட்டது. 'இதைத் தெரிந்துகொள். உன் தாய் தந்தைதான் உன் முதல் தெய்வங்கள்' என்று குரல் கேட்டதும் குருதேவரின் உருவம் தெரிந்தது.

'உன் தாய் தந்தையிடம் சென்று நான் கூறுவதைச் சொல்லி நாற்பத்தெட்டு நாட்கள் பாதபூஜை செய்து ஆசிபெற்று வா' என்றார். அதன்படி ராஜபாளையம் சென்று என் தாய் தந்தையிடம் ஆசிகளைக் கேட்டேன். அவர்கள் மறுத்துவிட்டார்கள். குருதேவர் என் தாய் தந்தைக்குக் காட்சி கொடுத்துப் பல அற்புதங்களைச் செய்து காட்டி எனக்கு ஆசி கொடுக்கச் செய்தார். நாற்பத்தெட்டு நாட்கள் பாதபூஜை செய்து தாய் தந்தையிடம் ஆசி பெற்றவுடன், கால்நடையாக கிராமப் புறங்களில் சுற்றுப்பயணம் செய்து பல அனுபவங் களைப் பெறும்படி கட்டளையிட்டார் குருதேவர்.



அதன்படி கால்நடையாகச் சுற்றிக் கொண்டு கரூருக்கு வந்த சமயம், என் தந்தை, என் நிலையை எண்ணி, அந்தக் கவலையில் மரணமடைந்து விட்டார். என் தந்தை இறந்ததை குருதேவர் எனக்கு உணர்த்தி, ராஜபாளையம் போகும்படி உத்தரவிட்டார். அங்குபோய் தந்தையின் உடலைப் பார்க்க முடியவில்லை. எரித்து விட்டார்கள்.

தந்தையின் ஈமச்சடங்கு முடிந்தபின், என் தாய் என்னைப் பார்த்து இனி உன் தந்தை நடத்தி வந்த சைக்கிள் கடையை, பழனியில் வைத்துத் தொழில் செய்து உன் மனைவி மக்களைக் காப்பாற்று என்று கடிந்து சொன்னார்கள். வேறு வழியின்றி, என் தாய் சொன்னபடி நடத்தினேன். நாளொன்றுக்கு ஒரு ரூபாய் கூட வருவாய் இல்லை. இவ்வாறு இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன.

நான் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது, திடீரென குருதேவர் என் முன் தோன்றி, ‘நான் சொன்னதைச் செய்கிறேன் என்று வாக்குக் கொடுத்தாய், இப்பொழுது தொழில் செய்கிறாயே’ என்று கேட்டு விட்டு மறைந்துவிட்டார். அன்றிலிருந்து நாள் ஒன்றுக்கும் இருபது ரூபாய் வருவாய் வரத் தொடங்கியது.

## பேச்சிழந்தவரைப் பேச வைத்தல்

அன்றிலிருந்து பத்தாவது நாள் என் நண்பர் ஒருவர் நாற்பது வயதுடைய ஒருவரை அழைத்து வந்து, இவர் ஓர் விபத்தைப் பார்த்ததிலிருந்து வாய் பேசமுடியவில்லை என்று கூறி ஒரு வருட காலம் பல வைத்தியங்கள்

செய்தும் பேச்சு வரவில்லை என்றும் சொன்னார்கள். இவருக்கு நீங்கள் ஏதாவது செய்து பேச வையுங்கள் என்று கேட்டார்கள். நானும் உடன் எலுமிச்சம்பழமும், விபூதியும் வாங்கிவரச் சொன்னேன். அச்சமயம் குருதேவர் எனக்கு உதயம் கொடுத்து, உன் உணர்வை அவன் உடலில் செலுத்து, அவன் பேசுவான் என்று உணர்த்தினார். குருதேவர் சொன்னபடியே செய்தேன். அடுத்த கணம் 'ஆ' என்றும், 'அம்மா' என்றும் அலறி அடித்துக் கொண்டு 'முருகா! முருகா!' என்று சத்தம் போடத் தொடங்கிவிட்டார். அவ்வளவுதான், என் கடை முன் கூட்டம் கூடிவிட்டது. வேடிக்கைப் பார்க்க ஆடிக்கொண்டிருந்தவர், ஆட்டம் நின்று பேச்சுவார்த்தை வராமல் இருந்த காரணத்தை வேடிக்கைப் பார்க்க வந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அச்சமயம் விபூதியைக் கொடுக்கும்படி குருதேவர் உணர்த்தினார். வந்தவர்களுக்கு விபூதியை கொடுத்து சாப்பிடும்படி சொன்னேன். விபூதியைச் சாப்பிட்ட சில நிமிடங்களில் சிலருக்கு வயிற்றுப்போக்கு ஆகிவிட்டது. விபூதியில் விஷம் கலந்து கொடுத்துவிட்டாய். அதனால்தான் இப்படி ஆகிவிட்டது என்று என்னைத் திட்ட ஆரம்பித்து விட்டார்கள். சிறிது நேரத்துக்கு மிகவும் சந்தோஷமாய் இருந்தேன். நான் அடுத்த கணம் பேச்சும் ஏச்சும் கேட்டுக்கொண்டு கவலையுடன் இருந்தேன். வேடிக்கை பார்க்கும் கூட்டமோ அதிகம் சேர்ந்து கொண்டிருந்தது. நான் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தேன். குருதேவர் எனக்கு உதயத்தைக் கொடுத்தவுடன் நான் குறி சொல்வதைப் போன்று வந்தவர்களுக்குக் குறி சொல்ல ஆரம்பித்துவிட்டேன்.



பேதி ஆனவர்களுக்கு அவர்கள் நோய்களைச் சொல்லி, பத்தியம் இருக்கும்படி சொல்லியவுடன் பேச்சும் ஏச்சும் நின்று அமைதி கொண்டதும், காது கேட்காது இருந்த ஒருவர் 'விபூதியைச் சாப்பிட்டதினால் எனக்கு பேசுவது கேட்கின்றது' என்றவுடன் என்னைத் திட்டிய வர்கள் என்னை வாழ்த்தி வணங்க ஆரம்பித்து விட்டார்கள்.

மறுநாள் என்னைப் பார்க்க கூட்டம் அதிகமாக வரத் தொடங்கியது. சைக்கிள் கடையைக் கவனிக்க முடியவில்லை. நாளுக்கு நாள் கிராமப்புறங்களிலிருந்து கூட்டம் வர ஆரம்பித்தது. விபூதியால் நோய்கள் குணமாவதால் இவ்வாறு ஒரு மாதமாக கூட்டம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

## திருப்பதிக்குச் செல்லுதல்

திருப்பதிக்குப் போகும்படி குருதேவர் ஆணையிட, சைக்கிள்களை நண்பர்களிடம் கொடுத்துவிட்டு, நான் திருப்பதிக்குச் சென்றுவிட்டேன். திருப்பதி மலையில் பாபநாசத்தைக் கடந்து ஏழாவது மைலில் காட்டில் கரடிகள் கூட்டமாக வசிக்கும் இடத்தில் தியானத்தில் நாற்பத்தெட்டு நாட்கள் அமரும்படி சொன்னார் குருதேவர்.

குருதேவர் கூறியபடி திருமலை மீது ஏறிச்சென்று பாபநாசம் அடைந்தேன். அன்று இரவு பாபநாசத்தில் தங்கி இருந்து விட்டு, மறுநாள் காலையில் குருதேவர் சூட்சம ரூபத்தில் வந்து என்னைக் காட்டிற்கு அழைத்துச் சென்றார். சுமார் எட்டு மைல் இருக்கும். குறிப்பிட்ட

இடம் வந்ததும் அங்கு நீர் வீழ்ச்சி தென்பட்டது. அதன் அருகில் அடர்ந்த காடு. அங்குச் சென்று பார்க்கும் பொழுது ஒரு குகை தெரிந்தது. அந்தக் குகையில் தியானத்தில் அமரலாம் என்று எண்ணினேன். அதற்குள் குருதேவர் காட்சி கொடுத்து இங்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டு வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று, அவர் காட்டிய இடத்தில் அமரும்படிச் சொன்னார். அச்சமயம் பகல் மணி மூன்று இருக்கும். என் கையில் கொண்டு சென்ற பையை அந்த இடத்தில் வைத்து விட்டுக் காட்டிற்குள் சுற்றிப் பார்க்க சென்றேன்.

நான் தியானத்தில் அமரும் இடத்திற்கு அருகில் இருக்கும் சிலவகை மரங்களில் கனிகள் தெரிந்தன. அதிலிருந்து கீழே விழுந்து கிடக்கும் கனிகளை எடுத்துச் சாப்பிடும்படிச் சொன்னார். அந்தக் கனிகளைச் சிறிது சாப்பிட்டேன். சுவையாக இருந்தது. பின்பு சில பச்சிலைச் செடிகளைக் காட்டி அதையும் சாப்பிடும்படி சொன்னார். அதையும் சாப்பிட்டேன். அது ஒருவகைத் தித்திப்பாய் இருந்தது. சாப்பிட்ட சிறிது நேரத்தில் பசி அடங்கிவிட்டது. உடலுக்கும் தெம்பாய் இருந்தது. நீ தியானம் இருக்கும் 48 நாட்களிலும் ஒவ்வொரு நாளும் பகல் 12 மணிக்குத் தியானத்தைக் கலைத்துவிட்டு நான் காட்டிய கனிகளையும், பச்சிலைகளையும் ஆகாரமாய் எடுத்துச் சாப்பிட்டு விட்டு, மீண்டும் மூன்று மணி யளவில் தியானத்தில் அமரும்படிக் கூறினார்.

நான் பையை வைத்த இடத்திற்குத் திரும்பி வந்து அமர்ந்தேன். சிறிது நேரத்தில் பல சிந்தனைகள் என் உள்ளத்தில் எழலாயின. முந்தைய நிலையில் என் வாழ்க்கை நிலையும், இன்று குருதேவர் வழி நடத்திச்



செல்லும் நிலைகளையும் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது என் எதிரே ஒரு தவளை தன்னைக் காத்துக் கொள்ளும் நோக்கத்துடன் தத்தித் தத்தி வந்தது. அதை ஆகாரமாய் எடுத்து விழுங்கும் உணர்வுடன் பாம்பு ஒன்று துரத்திக்கொண்டு வந்தது. இதைப் பார்த்தவுடன் என் சிந்தனை மறைந்து பாம்பின் செயலையும், தவளையின் நிலையையும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது பாம்பின் வாயில் தவளை சிக்கிக்கொண்டது. தவளை வேதனையுடன் கத்தியது. சிறிது நேரத்தில் பாம்பு தவளையை விழுங்கிவிட்டது. அச்சமயம் பாம்பின் உடலுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் காட்சி யாகத் தெரிந்தது. தவளையின் உயிராத்மா பிரிந்து, பாம்பின் கரு உறுப்புகளின் ஈர்ப்புக்குள் சென்றடை கின்றது. தவளையின் தசைகள் பாம்பின் ஆகாரமாய் ஆகின்றது. அப்பொழுது குருதேவர் காட்சி கொடுத்து பாம்பின் நிலைகளை உணர்த்தினார். அதாவது பாம்பு விழுங்கிய தவளையின் தசைகள் அமிலமாகக் கரைவது தெரிகிறது. கரைந்த அமிலங்கள் பாம்பின் தசைகளில் கலந்து தசைகளாக மாறுபடுவது தெரிகின்றது. குருதேவர் காட்சி கொடுத்து தியானத்தில் அமரும்படிக் கூறி, பாம்பின் உடலின் இயக்கங்களை தியானத்தில் இருந்தபடி விடியும்வரை கவனித்து வரும்படிக் கூறி விட்டு மறைந்து விட்டார்.

விடியும்வரை தியானத்தில் அமர்ந்திருந்தேன். விடிந்ததும் குருதேவர் காட்சி கொடுத்தார். அப்போது குருதேவரிடம் பாம்பின் உடலில் நடந்த நிகழ்ச்சி களைக் கூறினேன். அதற்கு குருதேவர் விளக்கம் கொடுக்கலானார்.

அதாவது 'தவளையின் தசைகள் பாம்பின் தசைகளின் சத்தாக மாறி, பாம்பின் தசைகளில் நுண் அணுக்களாக விளைந்து, பாம்பின் உயிரின் ஈர்ப்பில் நுண் அணுக்கள் போய்ச் சேர்ந்து, பாம்பின் உயிராத்மாவாகிறது' என்றார். அதாவது, இன்று விஞ்ஞான அறிவைக் கொண்டு தாவர இனங்களை ஒட்டு மரங்களாக இணைத்து ஒன்று சேர்த்து இரண்டு மரங்களின் சத்துக்களைக் கலக்கச்செய்து புதுவித்துகளைப் பெறச் செய்கின்றனர் அல்லவா? அதைப் போன்றே, பாம்பு தவளையை ஆகாரமாக எடுத்துக் கொண்டதில், தவளையின் தசைகளின் சத்துக்கள் அமிலமாகக் கரைந்து பாம்பின் தசைகளில் கலந்து, நுண் அணுக்களாக விளைந்து, விளைந்த நுண் அணுக்கள் பாம்பின் உயிரின் ஈர்ப்பில் சேர்ந்து உயிராத்மாவாகின்றன. பாம்பு இறந்த பின் பாம்பின் உயிராத்மா காற்றுடன் கலந்து மணங்கள் கொண்ட ஜடங்களினால் (உடல்) ஈர்க்கப்பட்டு அதனின் கருக்களில் வளர்ந்து அதனின் உருவமாக மறுபிறவி எடுக்கின்றது. உதாரணமாக முதலை போன்ற மறுஉருவம் பெறுகின்றது.

'தவளையின் உயிராத்மாவை பாம்பின் கரு உறுப்புகள் ஈர்த்துக் கொண்டதனால், பாம்பின் கருவில் வளர்ச்சி பெற்றுப், பாம்பின் இனமாக மறு ஜென்மம் பெறுகின்றது. உதாரணமாக, குளவி தன் இனவிருத்தி உணர்வினால் தன் உமிழ் நீரால் மண்ணை உருட்டிக் கூடுகட்டி, ஒரு புழுவைத் தூக்கி வந்து கூட்டில் வைத்து, புழுவைக் கொட்டி தனக்குள் சேர்த்து இருந்த அமிலத்தைப் புழுவின் உடலில் செலுத்துகின்றது. புழுவின் உடல் மேல்பாகம் சருகுபோல் ஆகின்றது. புழுவின் தசைகள் அமிலமாக மாறுகின்றது. புழுவின்



உயிராத்மா துடிப்புடன் இயங்கி, கூட்டிற்கு வெளியே இருக்கும் வெப்ப காந்தங்களை ஈர்த்துக்கொண்டு இயங்கியநிலையில், புழுவின் உயிராத்மா குளவியின் அணுத் திசுக்களாக மாறி, குளவியின் உருவமாக மறு உருப்பெறுவது போன்று, பாம்பின் கரு உறுப்புகளில் ஈர்க்கப்பட்ட தவளையின் உயிராத்மா பாம்பின் கருவில், பாம்பின் அணுத்திசுக்களாக உருப்பெற்று, பாம்பின் உருவமாக மறு உருபெறுகின்றது' என்று உணர்த்தி காட்சியாகவும் காண்பித்தார். இவ்வாறு தொடர்ந்து தியானத்திலிருந்து விட்டு, மாலை 3.00 மணியளவில் தியானத்தைக் கலைத்துவிட்டு, குருதேவர் காட்டிய பச்சிலைகளையும், கனிகளையும் தின்றுவிட்டு, மீண்டும் தியானத்தில் அமரலானேன்.

தியானத்தில் அமர்ந்த சிறிது நேரத்தில், மனைவி மக்கள் நினைவும், தன்னிச்சையாகச் செலவு செய்து கொண்டு நண்பர்களுடன் திரிந்து கொண்டிருந்த நான் குருதேவரிடம் சிக்கிக் கொண்டு, காட்டில் அநாதையாக, சரியான ஆகாரம் இல்லாமல், இப்படி எல்லாம் இருக்க வேண்டிய நிலை வந்துவிட்டதே என்ற எண்ணங்கள் வந்ததே தவிர, தியானம் இருக்க முடியவில்லை. சிறிது நேரத்தில் கண்களைத் திறந்து விட்டேன். ஆனால், மனது படபடவென்று துடிக்க ஆரம்பித்துவிட்டது. துடிப்பை அமைதிப்படுத்த எழுந்து நடந்தேன். அச்சமயம் குரங்குகள் கூட்டம் தென்பட்டது. அதை வேடிக்கை பார்த்து மனதை அமைதிப்படுத்தலாம் என்று எண்ணி குரங்குகள் கூட்டமாக இருக்கும் இடத்திற்கருகில் சென்று ஓர் மரத்தடியில் அமர்ந்து கொண்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

## என் குடும்பத்தைக் காட்சியாக காண்பித்தார்

அப்பொழுது ஒரு முரட்டு குரங்கு, குரங்கு கூட்டங்களை விரட்டிக் கடித்துக் கொண்டிருந்தது. அப்போது சின்ன குட்டிகள் ஓடிவந்து தாய்க் குரங்கைத் தாவிக் கட்டிப்பிடித்துக் கொள்வதும், தாய்க்குரங்கு, குட்டிகளை எடுத்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்த வுடன் என் மனம் அலைமோதிக் கொண்டு, என் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் ஏக்கமும் அதிகரித்து, மயக்கம் வந்து மரத்தடியில் அப்படியே சாய்ந்து விட்டேன். மயக்க நிலையில் என் குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் காட்சியாகத் தெரிகின்றன. என் மூத்த பையன் ‘லாரிக்கு டயர் வாங்கவும், ரிப்பேர் செலவுக்குப் பணம் வேண்டும், எங்காவது பணம் வாங்கிக்கொடு’ என்று என் மனைவி யிடம் கேட்டுக் கொண்டிருக்கின்றான். பணத்திற்கு நான் எங்கு போவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது ‘பணம் வாங்கித் தருகிறாயா? இல்லையா? என்று மிரட்டுகிறான் பையன், ‘உன் அப்பாவிடம் போய்க்கேள்’ என்று சொன்னவுடன் ‘வீட்டை அடமானம் வைத்துப் பணம் தருகிறாயா? இல்லையா?’ என்று மிரட்டுகிறான் பையன். அப்போது என் மனைவி அழுதுகொண்டே, ‘கையிலிருக்கும் பணத்தை எல்லாம தொலைத்து, வயலையும் அடமானம் வைத்து தொலைத்து விட்டாய். இனி வீட்டை அடமானம் வைத்து உனக்கு கொடுத்துவிட்டு நாங்கள் எங்காவது விழுந்து சாக வேண்டியதுதான்’ என்று சொல்லி சத்தம் போட்டு அழ ஆரம்பித்துவிட்டாள். இதைப்பார்த்துக் கொண்டு இருந்த

2½ வயது பையனும் பெண் குழந்தைகளும் அழுது கொண்டே, ‘அப்பா வரட்டும் சொல்கிறேன்’ என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது என் மனைவி கடைசிப் பையனைத் தூக்கிக்கொண்டு மற்ற இரு பெண் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு ‘குளம் குட்டையில் விழுந்து சாவோம்’ எனச் சொல்லிக் கொண்டு வீட்டை விட்டு வெளியில் செல்கின்றார்கள். அச்சமயம், அக்கம் பக்கம் உள்ளவர்கள் என் மனைவியையும் குழந்தை களையும் தடுத்து நிறுத்தி என் பெயரைச் சொல்லிப் ‘பாவிப்பயல் இப்படி செய்துவிட்டு எங்கோ போய் விட்டானே’ என்று ஏசுகிறார்கள். அவ்வாறு என் உடலில் உணர்வுகள் உந்தப்பட்டு மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்த உடன், ‘இது என்ன வாழ்க்கை’ என்ற வெறுப்பு மேலோங்கி, தற்கொலை செய்து கொள்ளும் உணர்வுகள் உந்தப்பட்டு, எழுந்து நீர் வீழ்ச்சியை நோக்கி நடக்கலானேன்.

அச்சமயம் மாலை 6.00 மணி இருக்கும், திடீர் என்று குருதேவர் காட்சி கொடுத்து ‘நான் சொல்வதைச் செய்கிறேன் என்றாய், இப்பொழுது சாகப் போகிறேன் என்று சொல்கிறாய்’ என்று சொல்லிச் சிரிக்கத் தொடங்கி விட்டார். உடனே என் கலக்கம் தீர்ந்தது. மனம் அமைதி அடைந்தது. ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தேன். குருதேவர் காட்சி கொடுத்த நிலையிலேயே உபதேசிக்கலானார்.

சூரியன் எவ்வாறு தனக்குத் தானே வெப்பத்தை உருவாக்கிக் கொண்டு இயங்குகின்றதோ, அதைப்போன்று சூரியனில் உதித்த உயிரணு, சூரியனால் பிரபஞ்சத்தில் வீசப்பட்டு, சூரியனைப் போன்று தனக்குத்தானே வெப்பத்தை உருவாக்கும் துடிப்புநிலை கொண்ட

உயிரணுவாய், பிரபஞ்சத்தில் மிதந்து கொண்டிருந்ததை, பூமியால் ஈர்க்கப்பட்டு, பூமியில் மிதந்து, தாவர இனங் களில் வீழ்ந்து, தாவர சத்தினை ஈர்த்து, நுண்ணிய கிருமியாய் உடல் பெற்று, சில நாட்களில் உடலில் வளர்ச்சி பெற்ற நுண்ணணுக்கள், உயிரில் ஆத்மாவாக சேர்ந்து, கிருமியான உடல் மடிந்து விடுவதும், கிருமி யின் உடலில் இயக்கும்போது உயிரில் ஆத்மாவாக சேர்த்துக் கொண்ட உணர்வின் சத்து மறுபிறப்பாக, மறு உடல் புழுவாக உருப்பெற்று உடல் ஜீவிப்பதும், இவ்வாறே ஒவ்வொரு உடலிலும், உணவும், உணர்வும் எடுத்துக்கொண்டு ஜீவித்த நிலைகளுக்கொப்ப, பூச்சி யாகவும், பாம்பாய், பறவையாய், மிருகமாய், இவ்வாறு பலகோடி ஜென்மங்கள் பிறந்து, இறந்து மனித உடல் வரை உருவாகியது உயிரின் துடிப்பின் ஈர்ப்பு நிலையால் தான் என்பதை முன்பு காட்சியாகக் காண்பித்து உணர்த்தியுள்ளேன் என்று கூறினார்.

‘உன் வாழ்க்கையில் குடும்பப் பற்றும், குழந்தை களின்பால் உனக்கு உள்ள பாசத்தால், உன் உடலில் வளர்த்துக்கொண்ட உணர்வுகள் உந்தப்பட்டு, எவ்வாறு உன் உடலில் செயல்படுகின்றன என்பதை நீ அறிந்து உணரவே, உன் உணர்வுகளை உந்தச் செய்து, உன் குடும்பச் சூழ்நிலைகளைக் காட்சியாகக் காணச்செய்தேன். ஆனால், நீ காட்சியாகக் கண்ட நிகழ்ச்சிகளினால், உன் உடலின் உணர்வுகள் உந்தப்பட்டு நீ சுவாசித்த மூச்சால் நீ சிந்திக்கும் திறன் இழந்து, உடல் சோர்வடைந்து, தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் உருப்பெற்று, உன் குழந்தைகளின்பால் உள்ள பாசத்தை மறந்து, உன் உடலையும் மாய்த்துவிட செயல்படுத்தியது அல்லவா, உன் சோர்வடைந்த உணர்வுகள்’ என்றார்.

**‘இதைப்போன்றே, சுற்றுப்புறச் சூழ்நிலைகளினால் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், புலனறிவால் ஈர்க்கப்பட்ட உணர்வின் சுவாசத்தால் உடலில் உள்ள உணர்வுகள் உந்தப்பட்டு, தீய செயல்கள், செயல்படுத்த வல்ல தீய உணர்வுகளை மாய்த்திட நான் உனக்கு ஆத்மசுத்தி செய்து கொள்ளும் ஆற்றல்பெற கற்றுக் கொடுத்ததை, நீ முயன்று ஆத்மசுத்தி செய்துகொள்ளும் ஆற்றலை ஏன் பெறவில்லை?’ என்று கேட்டுவிட்டு தியானத்தில் அமர்ந்து விடிவதற்குள் ஆத்மசுத்தி செய்து கொள்ளும் உணர்வின் ஆற்றலைப் பெறும்படி பல நிலைகளை உணர்த்திவிட்டு மறைந்துவிட்டார்.**

*குருதேவர் கூறியபடி தியானத்தில் அமர்ந்தேன். அன்று இரவில் நேரம் தெரியாது. நான் தியானத்தில் அமர்ந்திருக்கும் இடத்திற்கு சிறிது தூரத்தில் காட்டுப் பன்றிகள் உறுமிக்கொண்டு வருவது காதில் கேட்கின்றது. சிறிது நேரம் என் அருகில் உறுமல் சப்தம் கேட்டது. அச்சமயம் பயத்தால் உடல் சிலிர்க்கின்றது. அப்பொழுது குருதேவர் கூறியபடி தியானத்தில் ஒருவித உணர்வை ஈர்த்து சுவாசிக்கின்றேன். பயம் நீங்கி மனம் திடப்படு கிறது. பன்றிகள் கூட்டம் விலகிச் செல்கின்றன.*

*பின்பு நடுநிசி இருக்கும், ஒருவித ஒலிகளை எழுப்பிக்கொண்டு கரடிகள் கூட்டம் என் அருகில் வருகின்றன. எனக்கு மிக அருகில் கரடிகள் கூட்டங் களின் ஒலிகளைக் கேட்டவுடன் கண்களைத் திறந்து விட்டேன். என் எதிரே கரடிகள் இரை எடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். பார்த்தவுடன் எனக்குப் பயம் அதிகரிக்கவே, குருதேவரை நினைத்து கண்களை*

மூடி தியானிக்கலானேன். அதன் பிறகு விடியும்வரை என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

பகல் 12 மணிக்கு தியானத்தைக் கலைத்து விட்டு, குருதேவர் காட்டிய இலைகளையும், கனிகளையும் ஆகாரமாக எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, மரத்தடியில் படுத்து உறங்கி விட்டேன். விழித்ததும் காட்டிற்குள் சிறிது சுற்றிப் பார்க்கச் சென்றேன். ஒரு இடத்தில் மலைகளின் இடுக்குகளில் கற்கள் சிறிதும் பெரிதுமாக அடுக்கிவைத்து இருந்தது. அதைப்போய்ப் பார்க்கச் சென்றேன். அதன் அருகில் சென்று பார்க்கும்போது மனிதர்கள் அடுக்கி வைத்தது போன்று தெரிந்தது. கற்களின் இடுக்கில் உற்றுப்பார்த்தேன். உள்ளே என்ன இருக்கிறது என்று, உள்ளே இருந்ததோ, பெரிய கரடிகளும், குட்டிகளும். என் வாசனையை நுகர்ந்ததோ என்னவோ? உறுமத் தொடங்கிவிட்டது. எனக்குப் பயம் வரவில்லை. நான் மெதுவாக நகர்ந்து வந்துவிட்டேன்.

## நோயாளிகளை நுகர்ந்து பார்த்து குணமாக்குதல்

பின்பு வேறு சில இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு நான் தியானம் இருக்கும் இடத்திற்கு வந்து, தியானத்தில் அமர்ந்தேன். காட்சிகள் தெரியலாயின. அந்த மலைப்பகுதியில் முற்காலங்களில் மலைவாசிகள் எவ்வாறு வாழ்ந்து வந்தார்கள் என்ற நிலையையும், காடுகளில் உள்ள விலங்கினங்கள் வெகு தொலைவில் வரும்போதே நுகர்ந்து, குறிப்பறிந்து, இன்ன விலங்கினம் என்று தெரிந்துகொண்டு, தங்களைப் பாதுகாத்துக்



கொள்கின்றனர். அதைப்போன்றே ஒருவருக்கு நோய் கண்டுவிட்டால், அப்பொழுது அவர்களில் ஒருவர் நோயுடன் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவரைப் பார்த்து நோயின் நிலைகளை அறிந்துகொள்ள நுகர்ந்து பார்த்துவிட்டு காட்டிற்குள் சென்று, பல மூலிகைச் செடி-கொடிகளை, எடுத்துக்கொண்டு வந்து மீண்டும் நோயாளியை நுகர்ந்து பார்த்து, தான் கொண்டுவந்த மூலிகைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, நோயாளியை நுகர்ந்து பார்ப்பதும் மூலிகையை நுகர்வதுமாக, இப்படி ஒவ்வொரு மூலிகைச் செடியின் இலைகளை ஒன்று சேர்த்துப் பக்குவப்படுத்தி பிழிந்து நோயாளியைக் குடிக்கச் செய்கிறார். நோயாளியும் குணம் அடைகின்றான்.

குருதேவர் காட்சி கொடுத்து நோயாளியை நுகர்ந்து பார்த்ததையும், மூலிகையை நுகர்ந்து பார்த்ததின் நோக்கத்தையும் விளக்கிக் கூறினார். ‘அதாவது நோயாளி யின் உடலில் நோய்க்குக் காரணமான உணர்வுகளின், மணம் வெளிப்படுவதை நுகர்ந்து பார்த்துவிட்டு, தான் கொண்டு வந்த மூலிகைகளில் எந்த மூலிகை இந்த நோயைக் குணப்படுத்த உதவும் என்று பரிசீலித்துப் பார்ப்பதற்கே, அவன் நுகர்ந்து பார்த்தது. நோயை குணப்படுத்தும் மூலிகையைத் தேர்ந்தெடுத்து, அதைப் பக்குவப்படுத்திக் கொடுக்கின்றான். நோயாளி குணமடை கின்றான். இவ்வாறே ஒவ்வொரு நோய்களுக்கும் தான் கண்டுபிடித்த மூலிகைகளை, தன் கூட்டத்தில் உள்ளவர் களுக்குக் கற்றுக்கொடுத்து, தங்கள் கூட்டத்தில் உள்ளவர்கள், நோயிலிருந்து விடுபட்டு தங்களைக் காத்துக் கொள்ளவும், தாங்கள் கண்டுபிடித்த முறைகள்

மறைந்துவிடாமல் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுத்து, மேலும் மேலும் புதுப்புது கண்டுபிடிப்புகளால் ஆற்றலைப் பெருக்கிக் கொள்கின்றனர் காட்டில் வாழ்ந்த மனித இனம்' என்று கூறினார்.

பிறகு காட்சியாகக் 'கீரியும், நல்ல பாம்பும் ஒன்றுடன் ஒன்று சண்டையிடுவதைக்' காண்பிக்கிறார். கீரி கடித்து நாகத்திற்குக் காயங்கள் ஏற்படுகின்றன. நாகம் கோபத்தால் கீரியைக் கொத்திவிடுகின்றது. கீரியின் உடலில் விஷம் பாய்ந்துவிடுகின்றது. கீரி சண்டையி லிருந்து விடுபட்டு வேகமாக ஓடுகின்றது. ஓர் இடத்தில் நின்று நான்கு திக்குகளையும் நோக்கி தன் உணர்வு களைச் செலுத்தி சுவாசிக்கின்றது. பின்பு ஒரு திசையில் வேகமாக வெகுதூரம் ஓடி, ஒரு மூலிகைக் கொடி படர்ந்திருப்பதில் படுத்துப்புரண்டு, அந்த மூலிகையைச் சிறிது சாப்பிடுகிறது. பின்பு கீரி அமைதி கொண்டு, வழக்கம்போல் இரையைத் தேடிச் செல்கின்றது.

'இதைப் பார்த்தாய் அல்லவா' இந்தக் கீரிக்கு யார், மூலிகையைச் சொல்லிக் கொடுத்தது, விஷத்தைத் தன் உடலிலிருந்து மாய்க்க, மூலிகையைத் தின்னும்படியும், புரளும்படியும்?. அதாவது, பாம்பின் விஷம் கீரியின் உடலில் பாய்ந்தவுடன், கீரியின் உடலில் உள்ள வீரிய உணர்வுகள் உந்தப்பட்டு, பாம்பின் விஷத்தை மாய்க்கும் எண்ணம் உருப்பெற்று, தன் உடலில் உள்ள வீரிய உணர்வை நான்கு திக்கிலும் செலுத்திச் சுவாசிக்கின்றது. அச்சமயம் கீரியின் மயக்கம் சிறிது தெளிகின்றது. அந்தத் திசையை நோக்கி விரைந்து செல்லும் பொழுது, தான் முதலில் சுவாசித்தபோது உணர்ந்த மணம் மூலிகையின் அருகில் வந்ததும், மூலிகையின் மணம்



அதிகமானதும் ஒரே இனமாகக் கண்டுகொண்டு, புரளு கின்றது. ஆனால், தன்னினங்களுக்குச் சொல்லிக் கொடுக்கத் தெரியாது. ஆனால், கீரியின் வீரிய உணர்வால் சுவாசித்த உணர்வின் ஆற்றல்கள், கீரியின் தசைகளில் கலந்து நுண்ணணுக்களாக விளைந்து உயிரில், ஆத்மாவில் சேர்ந்து, கீரி இறந்த பின் மறுபிறப்பாக தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உடலமைப்பாக, மறுஉருவம் பெறுகின்றது என்பதைப் பார்த்தாய் அல்லவா' என்று உணர்த்திவிட்டு மறைந்துவிட்டார்.

இவ்வாறே 48 நாட்களிலும் பல நிலைகளைக் காட்சியாகவும், என் உடல் உணர்வுகளிலும் உணர்த்தி உபதேசித்து பல உண்மை நிலைகளை அறியச்செய்து ஆத்மசுத்தி செய்து கொள்ளும் ஆற்றலைப்பதிய வைத்தார், குருதேவர். 48 நாட்கள் முடிந்ததும், நடந்து திருத்தணிக்கு போகும்படி கூறினார்.

## திருத்தணிக்குப் புறப்படுதல்

குருதேவர் கூறியபடி, பயணம் மேற்கொண்டேன். காலை 5.00 மணியளவில் புறப்பட்டு அடிவாரம் வந்துசேர மூன்று மணி நேரம் ஆயிற்று. சிறிதுநேரம் இளைப்பாறிவிட்டு, என்னிடம் இருந்த 25 பைசாவிற்கு தேனீர் வாங்கிக் குடித்து விட்டு திருத்தணியை நோக்கி நடக்கலானேன். சித்திரை மாதமானதால், வெய்யில் கடுமையாக இருந்தது. காலில் காலணிகூட இல்லை. காலோ ஆணிக்கால், தரையோ சுடுகின்றது. காலில் உள்ள ஆணியில் சிறுகல்லை மிதித்து விட்டாலும் வலி எடுக்கிறது. எப்படியோ சமாளித்து நடந்து செல்கின்றேன்.

சாலையில் ஓரத்தில் உள்ள மாந்தோப்பு தெரிகின்றது. தோப்பின் வேலிக்கு வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும் மரத்திலிருந்து மாம்பிஞ்சு உதிர்ந்து கீழே கிடப்பது தெரிந்தது. நான் அங்குச் சென்று மாம்பிஞ்சை எடுத்துத் தின்று கொண்டே நடக்கலானேன். சிறிது நேரத்தில் தொண்டை 'கர கர' வென்று ஆகி, நாக்கு வறட்சியில் தாகம் எடுக்க ஆரம்பித்துவிட்டது. நான் செல்லும் பாதை யில் வீடுகள் இல்லை. சிறிது தூரத்தில் ஒரு கிணறு இருந்தது. கிணற்றில் இறங்கித் தண்ணீர் குடித்தேன். நீரோ 'சப்'பென்று இருந்தது. தாகம் அடங்கவில்லை. குடித்த நீரால் வயிறு நிறைந்துவிட்டது. தொண்டைக் கரகரப்பு நீங்கவில்லை. எப்படியோ ஆகட்டும் என்று நடக்கலானேன். ஐந்து மைல் நடந்திருப்பேன். தாகத் தினால் நாக்கு வறட்சியடையவே, ஒரு சிந்தனையு மில்லாது, சாலையின் ஓரத்தில் உள்ள புளிய மரத்தின் நிழலில் தியானத்தில் அமர்ந்தேன். சிறிது நேரத்தில் புளிய மரத்தின் இலைகளைப் பறித்து உண்ணும்படி உணர்வுகள் உணர்த்தியது. உடனே தியானத்தைக் கலைத்துவிட்டு மரத்தில் ஏறி இலைகளைப் பறித்துத் தின்றவுடன் உமிழ் நீர் சுரக்க ஆரம்பித்துவிட்டது. தாகம் அடங்கியது. தொண்டைக் கரகரப்பும் நீங்கியது. உடலுக்குத் தெம்பும் வந்தது. என் பை நிறைய புளியம்பூ, இலை, பிஞ்சுகளைப் பறித்து நிரப்பிக் கொண்டு நடக்கலானேன்.

அப்பொழுது, என் சிந்தனையில், வறுமையில் வாடும் கோடானு கோடி மக்கள் எவ்வாறெல்லாம் வாடிக்கொண்டும், வேதனைப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் என்ற எண்ணம் உதிக்கின்றது. அதுவே



காட்சியாகப் பல நிலைகள் தெரிந்து கொண்டிருக்கின்றன. வாயில் புளியம் இலையை மென்று குதப்பிக் கொண்டிருந்ததால் தாகமே எடுக்கவில்லை. என் உணர்வில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகையில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைகள் காட்சிகளாகத் தெரிந்து கொண்டிருப்பதால் வெய்யிலின் கொடுமையோ, கால் ஆணியால் ஏற்படும் வலியோ தெரியாமல் நடந்து கொண்டேயிருந்தேன். இவ்வாறு இரவு 8.00 மணிவரை நடந்தேன். சாலையின் ஓரத்தில் ஒரு மண்டபம் தெரிந்தது. அங்குச் சென்று பார்த்தேன். அங்கு ஒருவரும் இல்லை. அந்த இடத்தில் நான் எடுத்துச் சென்ற புளியம் இலைகளைத் தின்றுவிட்டு தியானத்தில் அமர்ந்தேன். இரவு ஒரு மணியளவில் படுத்துக்கொண்டேன்.

## வியாபாரி சொன்னது

விடிந்து 7.00 மணியளவில் எழுந்து சூரிய தியானம் செய்துவிட்டு, மண்டபத்திற்குப் பக்கத்திலிருந்த புளிய மரத்தில் இலைகளைப் பறித்துக்கொண்டு சிறிதளவு தின்றுவிட்டு, பையில் நிரப்பிக்கொண்டு நடக்கலானேன். 10.00 மணி அளவில் புத்தூர் என்ற ஊரைக் கடந்து செல்லும்பொழுது, ஒருவர் ஓடிவந்து, என் கையைப் பிடித்து நிறுத்தி 'என்னைத் தெரியவில்லையா?' என்று கேட்டார். நான் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது 'லாரி ஒன்று குழந்தை மீது மோதுவதை நான் பார்த்ததும் 'ஆ' என்று அலறியதிலிருந்து, எனக்குப் பேச்சுவராது போகவே, ஒரு வருட காலம் எந்த வைத்தியம் செய்தும் பேச முடியாமலிருந்த என்னை, நீங்கள் தானே பேச

வைத்தீர்கள், ‘பழனியில்’ என்றார். அவர் விவரம் சொன்னபின் ‘இப்பொழுது உங்களைத் தெரிகிறது’ என்றேன். காப்பி குடிக்கும்படி கட்டாயப்படுத்தினார். நான் என்ன சொல்லியும் கேட்காமல் வற்புறுத்தினார். நான் காப்பி மட்டும் குடித்துவிட்டு, திருத்தணிக்குப் போகவேண்டும், விடை கொடுங்கள் என்று கேட்டேன். ‘உங்களிடம் சில விஷயங்கள் சொல்ல வேண்டியிருக் கிறது’ என்றார். ‘நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள்’ என்று நான் கேட்டதற்கு அவர் ‘நம்ம ஊரிலே சரக்கு களை தயார்செய்து, இங்கு கொண்டுவந்து, இந்த ஊரிலும் பக்கத்து ஊரிலும் வியாபாரம் செய்கிறேன்’ என்றார்.

‘நீங்கள் சில விஷயங்கள் சொல்லவேண்டும் என்றீர்களே என்ன விஷயம்’ என்று கேட்டேன். எங்கள் வீட்டிற்குப் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவருக்கு ஒரு கையும் காலும் வராமல் இருந்தது. அவரை காரில் உங்களிடம் கூட்டி வந்தேனல்லவா, அவருக்கு நீங்கள் விபூதிப் பாக்கெட்டை ஆசீர்வதித்து, கைகால்களிலும் தேய்த்து, சிறிது நீரில் போட்டுக் குடிக்கும்படி சொல்லி பயிற்சி கொடுத்து, இதன்படி செய்தால் நீங்கள் நன்கு நடப்பீர்கள் என்று சொன்னீர்கள். நீங்கள் சொன்னபடி செய்து வந்தார். இப்பொழுது நல்லவிதமாய் நடந்து, வழக்கம்போல் வேலைகளைச் செய்து வருகிறார். அவருக்கு வேண்டியவர் ஒருவர் நோயால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார். அவரைக் கூட்டிக்கொண்டு நாங்கள் மூவரும் பழனிக்கு வந்தோம். உங்கள் சைக்கிள் கடைக்கு வந்து பார்க்கும்பொழுது கடை மூடி இருந்தது. பக்கத்தில் விசாரித்தேன். ‘அவர் எங்கு போனாரோ



தெரியவில்லை. இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. இங்கு நோயாளிகள், தினம் வந்து கேட்டு, ஏமாற்றத்துடன் போகிறார்கள். இதைப் பார்க்கும்பொழுது எங்களுக்கு கஷ்டமாயிருக்கிறது' என்றார்கள். நாங்கள் மூவரும் உங்கள் வீட்டிலாவது நீங்கள் இருக்கும் இடத்தை கேட்கலாம் என்று உங்கள் வீட்டிற்கே போனோம். உங்கள் மனைவியிடம் கேட்டவுடன், அழுதுகொண்டே 'எங்கே போனார் என்று எங்களுக்கும் தெரியவில்லை!' என்று சொல்லிவிட்டு, 'சின்னப்பையன் அப்பாவை நினைத்துக் கொண்டே 'நயினா நயினா' என்று அழுகிறான் என்று சொன்னார்கள். வீட்டிற்கு வந்து 'ஏன் கேட்டோம்' என்று எங்களுக்கு மிகவும் வருத்தமாய் ஆகிவிட்டது, என்று சொல்லிவிட்டு, கண்களில் நீர் ததும்ப தழுதழுத்த குரலில் 'சாமி உங்களுக்கு ஊரில் என்ன குறை? நீங்கள் குழந்தைகளுக்காகவாவது ஊருக்குப் போங்கள்' என்று காலைக் கட்டிப்பிடித்துக்கொண்டு 'கோ' வென்று அழ ஆரம்பித்துவிட்டார். பிறகு அவருக்கு நான் சமாதானம் சொல்லிவிட்டு 'என் மனைவி நோய்வாய்ப்பட்டு மரண அவஸ்த்தையில் இருந்ததைக் குணப்படுத்திக் கொடுத்தார் குருதேவர். 'நான் சொல்வதைக் கேட்பாயா?' என்று குருதேவர் என்னிடம் வாக்கு கேட்டார். நான் 'சரி' என்று வாக்கு கொடுத்த பின், குருதேவர் சொன்னபடி செய்யவில்லை என்றால், குருதேவரின் கோபத்திற்கு நான் ஆளாக வேண்டுமல்லவா?', என்று அவருக்கு ஆறுதல் சொல்லிவிட்டு 'திருத்தணிக்குப் போகின்றேன்' என்றேன். 'பஸ் வரட்டும்' என்றார். 'வேண்டாம்' என்று சொல்லிவிட்டு, திருத்தணி நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

## வாத நோயைக் குணமாக்குதல்

*மாலை 5.00 மணியளவில் திருத்தணியை அடைந்தேன். புத்தூரில் என்னைப் பார்த்த வியாபாரி திருத்தணி மலையில் முதல் படியில் வீற்றிருந்தார். என்னைப் பார்த்ததும் 'காப்பி சாப்பிடலாம்' என்று உணவு விடுதிக்குக் கூப்பிட்டார். 'என்னால் சாப்பிட முடியாது' என்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் காப்பி சாப்பிடக் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார். அவர் வற்புறுத்தல் தாங்காது கடைக்குப் போனோம். இரண்டு காப்பி வாங்கிச் சாப்பிட்டேன். இதை கவனித்துக் கொண்டிருந்த ஒருவர், நாங்கள் காப்பிக் கடையை விட்டு வெளியில் வந்ததும், வியாபாரியைத் தனியே அழைத்து விசாரித்துவிட்டு இருவரும் என்னிடம் வந்தார்கள்.,*

*விசாரித்தவர், 'நான் ஒரு விவசாயி, இங்கிருந்து பத்தாவது மைலில் எங்கள் கிராமம் இருக்கிறது. என் மனைவிக்கு ஒன்றரை வருட காலமாக எழுந்து உட்காரவோ, நடக்கவோ முடியவில்லை. என்ன நோய் என்று தெரியவில்லை. எந்த வைத்தியத்திற்கும் கட்டுப் படவில்லை. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. சாமி எங்கள் ஊருக்கு வந்து என் மனைவியின் நோயைப் போக்கி நடக்க வைக்க வேண்டும்' என்று கண்களில் நீர் ததும்ப ஊருக்குக் கூப்பிட்டார். 'நான் இங்கு தியானத்திலிருந்துவிட்டு, அதன்பிறகு தான் எங்கும் வரமுடியும்' என்றேன். 'தாங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ, அதுவரைக்கும் இங்கேயேயிருந்து தங்களை அழைத்துக்கொண்டு போகிறோம்' என்றார்.*



வியாபாரியையும், விவசாயியையும் கூட்டிக்கொண்டு மலைமீது ஏறிச் சென்றேன். குருதேவர் கூறிய இடத்தை அடைந்தவுடன் அவர்கள் இருவரையும் நான்கு நாள் கழித்து, வரும்படி சொல்லிவிட்டு, குருதேவர் குறிப்பிட்ட இடத்தில் தியானத்தில் அமர்ந்துகொண்டேன். வியாபாரி யிடம், நான் எங்கு இருக்கிறேன் என்று ஊரில் யாருக்கும் தெரியப்படுத்தக் கூடாது என்றும் சொல்லி அனுப்பிவிட்டேன்.

நான் தியானத்தில் இருந்த நான்கு நாட்களிலும் பல நிலைகள் காட்சிகளாகத் தெரிந்து கொண்டிருந்தன. யாம் காட்சிகளாகப் பார்த்த பல நிலைகளுக்கும் குருதேவர் விளக்கி உபதேசித்து அருளிவிட்டு, நாளை வரும் விவசாயின் ஊருக்குச் செல்லும்படி கூறிவிட்டு மறைந்துவிட்டார்.

நான்காம் நாள் நானிருக்கும் இடத்திற்கு விவசாயும், வியாபாரியும் வந்து என்னை அழைத்துக்கொண்டு விவசாயின் வீட்டிற்குச் சென்றார்கள். விவசாயின் மனைவி வாதநோயால், கைகால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார்.

அன்று இரவு தியானத்தில் அமர்ந்தேன். அந்த சமயம் காட்சியாக.

‘விவசாயின் தாயார் வாதநோயுடன் கைகால் வராமல் படுக்கையிலிருந்து கொண்டு, வேதனையுடன் பலமுறை மருமகளைக் (விவசாயின் மனைவியை) கூப்பிட்டார்கள். அப்பொழுது மருமகள் ‘சனியன் தொலைய மாட்டேன் என்கிறதே’ என்று முனகிக் கொண்டே,

மாமியாரைப் பார்க்க அருகில் வந்தார். ‘ஒரு பக்கமாக எனக்கு கை கால்கள் வலிக்கின்றது. என்னை அந்தப் பக்கம் கொஞ்சம் புரட்டிவிடு’ என்றார்கள். மருமகளோ, ‘நீ செத்தால்தான் எனக்கு விடிவுகாலம் வரும்’ என்று சொல்லிக்கொண்டே, வேண்டா வெறுப்புடன் மாமியாரை ஒரு பக்கமாக புரட்டி விடுவதைக் கண்டு, மாமியார் வேதனையுடன் ‘இப்படி எல்லாம் ஏசுகிறாயே, முருகா!’ என்று சொல்லி வேதனையுடன், பெருமூச்சு விட்டார்கள். மருமகளுக்கு கோபம் வந்து ‘என்னை இப்படி எல்லாமா பேசுகிறாய்’ என்று ஏச, மாமியாரும் வேதனையுடன் பேசினார்கள். மருமகள் கோபத்துடன் ஏசிய உணர்வலைகள், மாமியாரின் உணர்வுகளில் உந்தப்பட்டு, சுவாசித்த உணர்வலைகள், மாமியாரின் இரத்தத்தில் கலப்பது காட்சியாகத் தெரிந்தது. இதைப்போன்று மாமியார் சாபமிட்டு ஏசிய உணர்வலைகள், மருமகளின் உணர்வு களில் உந்தப்பட்டு, மருமகள் சுவாசித்த உணர்வலைகள், மருமகளின் இரத்தத்தில் கலப்பதும் காட்சியாகத் தெரிந்தது.

மேற்கூறியவாறு ஒருவருக்கொருவர் பல மாதங் களாக நினைத்தும், ஏசியும், பேசிக்கொண்ட உணர் வலைகள், அதாவது மருமகள் மாமியாரை நினைத்து எசிய உணர்வலைகள் மாமியாரின் உடலில் வினைகளாக விளைகின்றன. மாமியார், மருமகளை நினைத்து சாப மிட்டு பேசிய உணர்வலைகள், மருமகளின் உடலில் வினைகளாக விளைகின்றன.

மாமியார் வேதனை உணர்வுடன், மருமகளை எண்ணியவாறே உடலைவிட்டு உயிராத்மா பிரிந்து சென்றது.



'மாமியார் எப்பொழுது இறக்குமோ என்ற வேதனையுடன் ஏங்கி இருக்கும் நிலையில் மாமியார் இறந்ததைப் பார்த்தவுடன், மாமியாரின் உயிராத்மா மருமகளின் சுவாசத்தின் ஈர்ப்புக்குச் சென்று, இரத்தத்தில் கலந்து விடுகின்றது. சில நாட்களில், மருமகளின் உடலில் மாமியாரின் உயிராத்மா இயங்கத் தொடங்கி, மாமியார் எந்த நோயால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்களோ, அதே வேதனையை மருமகள் அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலைகள்'.

எனக்குக் காட்சியாகத் தெரிந்து கொண்டிருக்கும் சமயம், குருதேவர் காட்சி கொடுத்து 'இதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்டுவிட்டு, அதற்குச் சில வழிமுறைகளை உணர்த்தி உபதேசித்தார்கள். பிறகு தியானத்தைக் கலைத்துவிட்டேன்.

விவசாயின் மனைவியிடமும், நீங்களும் உங்கள் மாமியாரும் அடிக்கடி கோபித்துக் கொள்வீர்களா? என்று கேட்டேன். 'ஆம்' என்று ஒப்புக்கொண்டார்கள். 'நான் சொல்கிறபடி செய்தால் நோய் தீரும்' என்றதும், 'தாங்கள் எப்படிச் செய்யச் சொல்கின்றீர்களோ, அதன்படி நாங்கள் செய்கிறோம்' என்றார்கள்.

விவசாயின் குடும்பத்தில் உள்ள அனைவரையும் தியானத்தில் அமரச்செய்து, தியானம் இருந்து கண்களைத் திறந்தவுடன் விவசாயின் தாயாரின் பெயரைச் சொல்லி 'அவர் உயிராத்மா மகரிஷிகளின் அருள் ஒளியால் புனிதம் பெறவேண்டும்' என்று குடும்பத்தில் உள்ள அனைவரையும் குருதேவர் உணர்த்திய வழியில் சொல்ல வைத்தேன். இவ்வாறு பத்து நாட்கள் தியானம்

இருந்து சொல்ல வைத்ததனால், விவசாயின் மனைவி பத்து நாட்களில் மெள்ள, மெள்ள எழுந்து நடக்கலானார்.

விவசாயின் குடும்பத்தில் அனைவரும் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள். விவசாயின் மனைவி இனி நான் யாரையும் மனம் நோகும்படி பேசமாட்டேன் என்று வேண்டிக் கொண்டார். தொடர்ந்து நீங்கள் தியானம் செய்து வந்தால் உங்களை அறியாது வரும், கோபம், குரோதம், பயம் நீங்கி உங்கள் குடும்பத்தில் நலமும், வளமும் பெற்று வாழ்வீர்கள் என்று ஆசிர்வதித்து விட்டு குருதேவர் எனக்குச் சொல்லியபடி திருவண்ணாமலைக்குப் புறப்பட்டேன். ஆனால், விவசாயி என்னுடன் திருவண்ணாமலை வரைக்கும் வந்து என்னை விட்டு வருகிறேன் என்று என்னுடன் புறப்பட்டார். என்னைத் தனிமையில் திருவண்ணாமலைக்கு நடந்து போகும்படி குருதேவர் சொல்லியிருப்பதால், என்னுடன் யாரும் வர வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

குறிப்பு : விவசாயின் வீட்டில் தங்கி இருந்த பத்து நாட்களிலும், குருதேவர் சொற்படி தினமும் ஒரு வேளை சாதத்தைக் கரைத்துக் குடித்து வந்தேன்.

நான் திருவண்ணாமலைக்குச் சென்றேன். தனிமையில் பத்து மைல் நடப்பதும் இரண்டு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வதும், ஆக, இவ்வாறே நடந்து, இரவு 8.00 மணியானதும் மரத்தடியில் தியானத்தில் அமர்ந்து விடுவேன். அப்பொழுது குருதேவர் பல நிலைகளைக் காட்சியாகவும், உணர்வுபூர்வமாகவும் உணர்த்துவார்கள். இரவு 11.00 மணி அளவில் படுத்துக்கொள்ளும்படி கூறுவார்கள். படுத்துக்கொள்வேன். காலை 5.00 மணி



யளவில் எழுந்து நடப்பதும், இடையில் புளியமரத்தைப் பார்த்தால், புளியம் தழைகளைப் பறித்துப் பையில் வைத்துக்கொண்டு, அதைக் கொஞ்சம் மென்று தின்று கொண்டே நடப்பேன்.

இவ்வாறு ஐந்து நாட்கள் நடந்து, ஐந்தாவது நாள் மாலை 3.00 மணியளவில் திருவண்ணாமலை அடிவாரம் வந்து சேர்ந்தேன். அங்குள்ள ஒரு மடத்தில் அமர்ந்தேன். சிறிது நேரத்தில் உறக்கம் வந்துவிட, உறங்கிவிட்டேன்.

## அருணகிரிநாதர் ஞானம் பெற்ற நிலை

இரவு 7.30 மணியளவில் விழித்த என்னை சிறிது நேரத்தில், வேறு ஓர் இடத்திற்கு குருதேவர் அழைத்துச் சென்றார். அங்குச் சென்றதும் அருணகிரிநாதரின் வாழ்க்கை நிலைகளை உபதேசிக்கலானார்.

அதாவது, அருணகிரி தன் செல்வச் செருக்கினால் பெண்மோகம் கொண்டு, காமவெறியினால், பல பெண் களின் படுக்கையறைகளை அடைந்து ஊதாரித்தனமாகச் செல்வத்தை செலவழித்து, செல்வம் அழிந்து, பெண் வியாதியாகி, முற்றி பெருவியாதியாக மாறி, மேனியின் அழகு விகாரமாகியது. மேனி அரித்தாலும் காமம் தணியாது, காமத்தின் உந்தலினால், தன் ஆசைநாயகி களை அணுக, ஆசைநாயகிகளோ அருணகிரியின் ‘விகாரத் தோற்றத்தைக் கண்டு காறிஉமிழ்ந்தனர். உற்றார் உறவினர் வெறுக்க, ஊர்மக்கள் சிரித்ததாலும், செல்வத்தை இழந்து இருந்ததாலும் மேனியில் அரிப்பு மொய்த்ததாலும், தன் காமத்தின் உந்தலினால், மோகம் தணியாது, தன் சகோதரியிடமே காமத்தின் இச்சைகளைச் சொல்லி,

ஆசைநாயகிகளை அடைய பொருள் கேட்கின்றார் அருணகிரி.

தன் சகோதரனின்பால் உள்ள பாசத்தால், அவனையும் அறியாது, என்னிடம் அவன் இச்சைகளைச்சொல்லி பொருள் கேட்கின்றானே என்ற வேதனையுடன், ‘உனக்கு இச்சைதானே தீரவேண்டும். இதோ இந்த உடலில் (தன் உடலை காண்பித்து) உன் இச்சைகளைத் தீர்த்துக் கொள்’ என்று சொல்லியவாறு மயங்கி கீழே விழுந்து உயிர் துறந்தார். சகோதரியின் நிலையைக் கண்டு அருணகிரி தன் உடலின் வாழ்க்கையை வெறுத்து, உடலை மாய்த்திடும் எண்ணங்கொண்டு, கோபுரத்தின் மீதேறி, கீழே வீழ்ந்திடும் தருவாயில், அடுத்த பிறவி யாவது, ‘இந்த உடலை விட்டு பிரியும், இந்த உயிராத்மா உயர்ந்த குணங்கள் கொண்ட உடலைப்பெறட்டும்’ என்ற உணர்வுகள் உந்தி விண்ணை நோக்கி ஏங்கிக் கொண்டிருக்கும் நிலையில், தெய்வீகக் குணங்களின் உணர்வுகள் கொண்ட, ஒரு மெய்ஞ்ஞானியின் உயிராத்மா, அருணகிரியின் ஏக்கத்தின் சுவாசத்தில் ஈர்க்கப்பட்டு, இரத்தத்தில் கலந்ததனால், அருணகிரியின் உணர்வுகள் மெய்ஞ்ஞானத்தின் உணர்வுகளாக மாறின. அதனால் கோபுரத்தில் இருந்து கீழே விழாமல், மெய்ஞ்ஞான உணர்வாக, புலமைகள், பாடும் ஆற்றல்கள் பெற்றார் என்பதை உபதேசித்து அருளினார்.

அருணகிரியின் இரத்தத்தில் குடிகொண்டுள்ள மெய்ஞானியின் உயிராத்மா, தன் மெய்ஞானத்தின் ஆற்றல் மிக்க உணர்வலைகள் ஈர்ப்பதை அருணகிரி சுவாசிப்பதால், அருணகிரியின் உயிரில் உராயும்பொழுது, தெய்வீக உணர்வுகளின் குணங்களைப் பாடச் செய்கின்றது.

சுவாசித்த மெய்ஞானத்தின் ஆற்றல் மிக்க உணர்வலைகள் இரத்தத்தில் கலந்து, இரத்தம் தசைகளிலும், உடல் உறுப்புக்களிலும் கலப்பதால், தசைகளிலும், உடல் உறுப்புக்களிலும் அணுத்திசுக்களாக உருப்பெறுகின்றன. உருப்பெற்ற அணுத்திசுக்கள் நுண்ணணுக்களாக விளைந்து அருணகிரியின் உயிராத்மாவின் ஈர்ப்பிற்குச் சென்று, உயிரின் அணைப்பில் உயிராத்மா இயங்குகின்றது. அருணகிரியின் இரத்தத்தில் குடிகொண்டுள்ள மெய்ஞானியின் ஆற்றல் மிக்க உயிராத்மா, மேலும் தன் ஆற்றலைப் பெருக்கிக் கொள்கின்றது.

அருணகிரியின் உடலில் மெய்ஞானியின் உணர்வலைகள் பதிந்து, வளம் பெற்று இருந்ததனால், அருணகிரி, தன் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டு, தான் கண்டறிந்த உண்மை நிலைகளைப் பாடலாகவும், உபதேசமாகவும் மக்களுக்கு உணர்த்தலானார். இவ்வாறு ஊர் ஊராகச் சென்று அங்கு அமைந்துள்ள ஆலயங்களில், தான் கண்டறிந்த தெய்வகுணங்களின் உணர்வுகளைப் பாடியும் உபதேசித்தும் வரும் நிலையில், அதைக் கேட்டறிந்த மக்களுக்கு அருணகிரியின்பால் பக்தியும், அன்பும், பாசமும் பெருகலாயின.

இதைக்கண்டு பொறாமை கொண்ட மந்திரவாதிகள், அதாவது ஆவிகளைக் கைவல்யம் படுத்திக்கொண்டு, வேள்விகள் செய்து, தெய்வத்தின் பெயரால் பல அற்புதங்களைச் செய்து காட்டி மக்களையும் அரசனையும் ஏமாற்றி, புகழ் தேடிவந்த மந்திரவாதிகளுக்குப் புகழ் மங்கிவருவதைக் கண்டு, அருணகிரிக்குப் பல இன்னல்களை மந்திரவாதிகள் விளைவித்தனர். மந்திர

வாதிகளின் செய்கைகளைப் பொருட்படுத்தாது, பேருண்மை யின் உணர்வலைகளின் ஆற்றல்களை, பல வருடங் களில் தனக்குள் வளர்த்துக்கொண்ட உயிராத்மாவை, ஒளியாக வளர்த்துக்கொண்டு, உடலை விட்டுப்பிரிந்து ஒளியாக வெளியேறினார் என்றும், இந்த நிலைகள் அனைத்தையும் குருதேவர் காட்சியாகக் காண்பித்து உணர்த்தினார்கள்.

மேற்கூறியவாறு அருணகிரியின் வாழ்க்கையில், தன் இரத்தத்தில் குடிகொண்டுள்ள மெய்ஞானியின் உயிராத்மாவின் வளர்ச்சியில், அருணகிரியின் உயிராத்மா மெய்ஞானத்தைப் பெறும், உயிராத்மாவாக வளர்ச்சி பெறுகின்றது.

அருணகிரியின் இரத்தத்தில் குடிகொண்டுள்ள மெய்ஞானியின் உயிராத்மா, அருணகிரியின் உடலை இயக்கி, சூரியன் வெளிப்படுத்தும் காந்த ஆற்றலையும், கோள்கள், நட்சத்திரங்கள், சப்தரிஷி மண்டலங்கள் வெளிப்படுத்தும் பேராற்றல்களையும் பெற்று, தான் பெற்ற ஆற்றல் மிக்க உணர்வலைகளால் உருப்பெற்ற உண்மை நிலைகளைப் பாடலாகப் பாடி, பாடிய பாடல் களை ஒலியலைகளாகப் படரச் செய்தும், அருணகிரி யின் உடலில் இருந்தவாறே, பேராற்றல் மிக்க உயிராத்மாவாக வளர்த்துக் கொண்டு, அருணகிரியின் உடலை விட்டு மெய்ஞானியின் உயிராத்மா ஒளியாக வெளிவந்து, சப்தரிஷி மண்டலங்களின் சுழற்சி வட்டத்தைச் சென்றடைகின்றது.



## அருளாடுவோர் நிலை

சிறிது நேரம் ஓய்வுக்குப் பின்பு, மீண்டும் உபதேசிக் கலானார். ஒவ்வொரு ஊர்களிலும், ஊர்க்காவல் தெய்வம் என்ற பெயரில் வழிபாடு செய்து வருபவர்கள், தங்கள் குறைகளையும், கஷ்ட நஷ்டங்களையும், நோய் களையும் போக்கக் கோரிக்கைகள் வைத்து, முறையிட்டு, உயிர்ப்பலி கொடுப்பதும், அச்சமயம் பம்பை, உறுமி மேளம் போன்ற வாத்தியங்களை முழங்கச் செய்து, ஊளையிட்டும், குவளையிட்டும் அருள் ஆடச்செய் கின்றனர். மேற்கூறியவாறு வாத்தியங்களின் ஒலிகளைக் கேட்பவரின் உணர்வுகள் உந்தப்படுகின்றன. அச்சமயம் தங்கள் கஷ்டங்களை எண்ணி, வேதனையான உணர்வு களுடன் ஏங்கி இருக்கும்பொழுது, வேதனையான உணர்வுகள் உந்தப்பட்டு, இதைப்போன்ற உணர்வுகளுடன் இறந்து காற்றில் மிதந்து கொண்டிருக்கும் உயிராத்மாவை ஈர்த்து சுவாசிக்க நேருகின்றது. அப்பொழுது, ஈர்க்கப்பட்ட உணர்வுகள் இரத்தத்தில் கலந்து, தெய்வத்தின் பெயரைச் சொல்லி அருள் ஆடத் தொடங்கி விடுகின்றது.

இவ்வாறு வேதனையான உணர்வுள்ள உயிராத்மா, இரத்தத்தில் கலந்திருப்பதால் கை, கால் குடைச்சல், மேல்வலி போன்ற உபாதைகள் ஏற்படுவதும், பம்பை போன்ற மேள வாத்தியங்களின் ஒலிகளைக் கேட்டாலும், ஆலயங்களுக்குச் சென்று கற்பூர ஆராதனைகளைப் பார்க்கும் பொழுதும் அருளாட வைத்து விடுகின்றன.

அருளாடுவோர் குடும்பங்களில் பல இன்னல்கள் வரக் காரணமாகின்றன. இவர்கள் யாரிடம் பேசினாலும் கேட்பவர்களுக்கு இவர்கள் மீது வெறுப்படையும்

உணர்வுகளைத் தூண்டிவிடுகின்றன. இத்தகையோர் வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சலிப்பு, சஞ்சலம், சோர்வு, வெறுப்பு, பயம், கோபம் போன்ற உணர்வுகள் உருப்பெறக் காரணமாகி சுவாசிப்பதால், பலவித நோய்கள் உருப்பெறுகின்றன.

## மந்திரவாதிகளும், ஆவியுலகமும்

இவர்கள் சுவாசித்த உணர்வலைகள் இரத்தத்தில் கலந்து, தசைகளாக மாறும் பொழுது, அணுத் திசுக்களாக உருப்பெற்று, நோய்களை உருப்பெறச் செய்துவிடு கின்றன. நோய்களை உருப்பெறச் செய்த அணுத் திசுக்கள், வேதனைகளை உருப்பெறச் செய்யும் உணர்வு களின் நுண் அணுக்களாக வளர்ச்சி பெற்று, உயிரின் ஈர்ப்பிற்குச் சென்று, உயிரின் அணைப்பில் உயிராத்மாவாக இயங்கத் தொடங்கிவிடுகின்றன.

இத்தகையோர் இறந்தபின் இவர்கள் உயிராத்மா மனித உடலைப் பெறத் தகுதியிழந்து ஆவியுலகில் சஞ்சரிக்க நேருகிறது. இவர்கள் சுவாசத்தால் ஈர்க்கப் பட்டு, இவர்கள் இரத்தத்தில் கலந்திருந்த உயிராத்மாவும், இவர்கள் இறந்தபின், மனித உடலைப் பெறத் தகுதி யிழந்து ஆவியுலகில் சஞ்சரிக்க நேருகிறது.

இவர்களுடைய உயிராத்மா ஆவியுலகில் சஞ்சரிக்கும் நிலையில் மந்திரவாதிகள் 'இட்சினி' போன்ற கருக் களை உருச்செய்து வைத்துக்கொண்டு, அதற்குகந்த மந்திரங்களைச் ஜெபித்து, மேற்கூறிய உயிராத்மா போன்ற வற்றைத் தன் வசம் கைவல்யப்படுத்தி வைத்துக்கொண்டு, பொருள் சம்பாதிக்கும் நோக்குடன், இத்தகைய



உயிராத்மாக்களை ஏவி, பிறருக்குத் துன்பங்கள் விளைவிக்க பயன்படுத்துவதும், பொருள்களை வரவழைக்கவும் பயன்படுத்துகின்றனர்.

இதுபோன்றே, செய்வினையால் அவதியுறுவோருக்கும், இத்தகைய உயிராத்மாவை ஏவி வேதனையைக் கட்டுப் படுத்தவும் செய்கின்றனர். தற்கொலை செய்துகொண்ட ஆவி வேறு ஓர் உடலில் சேர்ந்து, தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தால், இத்தகைய உயிராத்மாவை ஏவி கட்டுப்படுத்துகின்றனர். இவ்வாறு செய்துவரும் மந்திரவாதிகள் இறந்தபின், மறு ஜென்மம் மனிதப் பிறவி எடுப்பதை இழந்து, ஆவியுலகின் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் நிலையில், மற்றவர்கள் உடலில் சேர நேர்ந்தால், அந்த உடல்களுக்கு தொல்லைகள் கொடுக்கின்றன.

மேற்கூறியவை அனைத்தும் காட்சியாகக் காண்பித்து உணர்த்திவிட்டு, 'நீ ஆத்மசுத்தி செய்துகொண்டு படுத்துக் கொள்' என்றார். குருதேவர் கூறியபடி ஆத்மசுத்தி செய்து கொண்டு உறங்கலானேன்.

## குமாரபாளையம் செல்லுதல்

விடிந்து காலை 6.00 மணியளவில் எழுந்தவுடன் பசிக்க ஆரம்பித்துவிட்டது. புளியந்தழைகளைப் பறித்துச் சாப்பிட்டு விட்டு, தியானத்தில் அமர்ந்தேன். சிறிது நேரத்தில் குருதேவர் காட்சி கொடுத்து உனக்குத் தொல்லைகள் கொடுக்கிறேன், என்று எண்ணுகிறாயா என்று கேட்டு சிரித்துவிட்டு 'நீ திருத்தணியில் பார்த்து வந்த விவசாயி, ஆயிரம் ரூபாயை உனக்குக் கொடுக்க

கொண்டு வருகிறான். அவன் கொடுக்கும் பணத்தை வாங்கி, நீ நூறு ரூபாயை எடுத்துக் கொண்டு, மீதியை அவரிடம் ஆசீர்வதித்துக் கொடுத்துவிடு' என்று சொல்லி விட்டு 'நீ நாளைய தினம் குமாரபாளையம் என்ற ஊருக்குச் சென்று அவினாசியப்பனைப் பார். அவன் உனக்கு அறிமுகமானவனே. அவன் வீட்டில் தங்க வேண்டாம். அங்குப் பண்டரிகோயில் என்ற பஜனை மடத்தில் தங்கவும். பலதரப்பட்ட நோயாளிகளும், ஆவிகள் சாடியவர்களும் தோஷங்களால் பீடிக்கப்பட்டவர் களும் வருவார்கள். உனக்கு உபதேசித்த ஆற்றலைப் பயன்படுத்தி உன்னிடம் வரும் நோயாளிகளைப் பார்க்கும் பொழுது, அவர்கள் உடல்களில் இயங்கும் நிலைகள் காட்சியாகத் தெரியவரும். அதை அறிந்துணர்ந்து பிணி களைப் போக்கி மகிழச் செய். இவ்வாறு நீ செய்யும் பொழுது மந்திரவாதிகளின் வருவாய் குறையும். அதனால் உனக்கு மந்திரவாதிகள், தொல்லைகள் கொடுக்க முற்படுவார்கள். நீ அவர்களுக்குக் கவனமாக, நல்ல உபதேசங்களைச் செய்து, நற்செயல்களைச் செய்யும்படி அவர்களைப் பக்குவப்படுத்து, என்று உபதேசித்தருளினார்.

குருதேவர் கூறியபடி, திருத்தணியில் இருந்து விவசாயி என்னைத் தேடிவந்து ஆயிரம் ரூபாயை 'என் காணிக்கையாக வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்லிக் கொடுத்தார். குருதேவர் கூறியபடி, நூறு ரூபாயை எடுத்துக்கொண்டு, மீதித் தொகையை ஆசீர்வாதம் செய்து அவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டேன்.

சிறிது நேரம் கழித்து விவசாயியை ஆசிர்வதித்து ஊருக்குப் போகும்படி அனுப்பிவிட்டு, அன்று, நாள்



முழுவதும் திருவண்ணாமலையில் இருந்துவிட்டு, மறுநாள் காலை பஸ்ஸில் குமாரபாளையம் புறப்பட்டேன்.

## குமாரபாளையத்தில் நோய்களைக் குணமாக்குதல்

குருதேவர் கூறியபடி குமாரபாளையம் வந்தவுடன் அவினாசியப்பனை விசாரித்தபோது, அவர் சின்னப்ப நாயக்கன் பாளையத்தில் இருக்கிறார் என்றார்கள். அங்குச் சென்று அவினாசியப்பனைச் சந்தித்து விவரங் களைச் சொல்லியபின், பண்டரி கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு பண்டரி கோயிலின் உரிமையாளரிடம் விவரம் சொல்லிக் கேட்டதும், சரி என்று சொல்லி ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்தார்கள். அங்குத் தங்கலானேன்.

மறுநாள் காலையில் நோய்களைக் குணப்படுத்திக் கொள்ள சிலர் வந்தார்கள். குருதேவர் உபதேசித்தபடி நோயாளிகளைப் பார்க்கும் பொழுது, நோய்களின் தன்மைகள் காட்சியாகத் தெரியலாயின. நோய்க்குத் தக்கவாறு ஆசீர்வதித்து திருநீற்றைக் கொடுக்கலானேன். இவ்வாறு செய்து வரும் நிலையில் நோய்கள் குணமாவதைக் கண்டு, ஒரு வாரத்திற்குள் பல இடங் களுக்குப் பரவி, மக்கள் கூட்டம் அதிகரிக்கலாயின. குருதேவர் அவ்வப்போது பல நிலைகளை உணர்த்திக் கொண்டேயிருந்தார்.

ஒவ்வொரு நாளும் பலதரப்பட்ட, பலநிலைகள் கொண்ட ஆவிகள் சாடியவர்கள் வருவார்கள். அவர் களைப் பார்க்கும் பொழுது, அவர்களின் உடல்களில்

ஆவிகள் எவ்வாறெல்லாம் செயல்படுகின்றன, என்று கண்டுணர்ந்து குருதேவர் உபதேசித்த உபாயத்தின்படி, இரத்தத்தில் கலந்துள்ள ஆவிகளின் உணர்வலைகளைப் பலஹீனப்படுத்தி, ஆவிகள் சாடி வந்தனர்களிடம், சில உபாயங்களைச் சொல்லி, இதன்படி செய்து வந்தால், ஆவிகளின் உணர்வலைகள் முடங்கி, நீங்கள் நலமடைவீர்கள் என்று சொல்லி, அவர்களுக்கு திருநீறும், எலுமிச்சம் கனிகளையும் ஆசீர்வதித்துக் கொடுத்து அனுப்பிவிடுவேன். இவ்வாறு நான்கு மாதங்களில் மக்கள் கூட்டம் வருவது அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

## மந்திரவாதிகளால் ஏற்பட்ட இன்னல்கள்

இதைக்கண்ட, அங்குள்ள மந்திரவாதிகளுக்குப் பொறாமை ஏற்பட்டு, பல மந்திரவாதிகள் ஒன்று சேர்ந்து, என்னிடம் வந்து 'நீ எந்த ஊர்' என்று மிரட்டி கேட்டுவிட்டு, 'எங்கோ இருந்து, இங்கு வந்து பல வித்தைகளைச் செய்து ஊரை ஏமாற்றவா பார்க்கிறாய்' என்று மிரட்டி விட்டு, தகாத வார்த்தைகளைச் சொல்லி ஏசவும் செய்தார்கள். அச்சமயம், அங்கிருந்தவர்கள் பலரும், மந்திரவாதிகளைக் கண்டு பயந்த நிலையில் ஒன்றும் பேசாமல் இருந்தார்கள். சிறிது நேரம் கழித்து மந்திரவாதிகள் போகும்பொழுது, நாளை விடிவதற்குள் இந்த ஊரைவிட்டு நீ போகவில்லையென்றால் என்ன நடக்கும் தெரியுமா?' என்று மிரட்டிவிட்டுப் போய்விட்டார்கள். மந்திரவாதிகள் போன பின்பு அங்கிருந்த பலரும், 'நீங்கள் பேசாமல் இருந்தது நல்லதாயிற்று. ஏதாவது

*பேசி இருந்தால், உங்களை அடித்துக்கூட இருப்பார்கள், 'பாவிகள்' என்று சொல்லி வருத்தப்பட்டுச் சென்றார்கள்.*

*மந்திரவாதிகள் என்னை மிரட்டிக் கொண்டிருக்கும்பொழுது, அவர்கள் உடல்களில் இட்சினியின் கரு எவ்வாறெல்லாம் செயல்படுகிறது என்று பார்க்க வாய்ப்பு கிட்டியதே என்று மகிழ்ந்தேன். ஆனால், குருதேவரோ இவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்துவிட்டு, 'உனக்கு இந்தத் தொல்லைகளைக் கொடுப்பவர்கள், சாதாரண பாமரமக்களுக்கு எத்தகைய தொல்லைகளைக் கொடுப்பார்கள் என்பதை நீ அறிந்து கொள்ள வாய்ப்பான நிலையே இன்று நடந்த நிகழ்ச்சிகள்' என்றார்.*

*மந்திரவாதிகள் மிரட்டியதைக் கேள்விப்பட்டு அவினாசியப்பன், சக்திவேல், சக்திவேலுவின் தந்தை, பண்டரி கோயில் உரிமையாளர்கள் இருவர், சுந்தரராஜு நாராயணன் மற்றும் பலர் வந்து 'நாங்கள்' இருக்கிறோம், நீங்கள் கவலைப்படவேண்டாம்' என்று ஆறுதல் கூறினார்கள்.*

*மறுநாள் காலை 5.30 மணியளவில் எழுந்து கதவைத் திறந்தேன். வாசற்படி முன் 'மண்டைஓடும்' அதில் யந்திரத்தகடும் வைத்திருந்தார்கள். அதை அப்புறப் படுத்திவிட்டு காவேரி ஆற்றுக்குக் குளிக்கச் சென்றேன். அச்சமயம், மந்திரவாதிகளில் ஒருவன் என்னை 'நில்' என்று மிரட்டியவாறு கத்தியை ஓங்கிக்கொண்டு என் அருகில் வந்தான். நான் சிரித்துக் கொண்டே ஆற்றுக்குக் குளிக்கச் சென்றேன். மந்திரவாதி கத்தியை ஓங்கியவாறு சிறிது நேரம் நின்று இருந்து விட்டு, பின் அவன்*

சென்றுவிட்டான். நான் குளித்துவிட்டு பண்டரி கோயிலுக்கு வந்து வழக்கம்போல் வருபவர்களுக்கு ஆசீர்வதித்து திருநீற்றைக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

ஒவ்வொரு நாளும் மந்திரவாதிகள் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள். இதையறிந்த நண்பர்கள் பலரும் ஒன்று சேர்ந்து என்னிடம் வந்து, அடுத்த தெருவில் நாராயணன் வீடு ஒன்று காலியாக இருக்கிறது. அங்கு வந்து தாங்கள் தங்கி இருந்தால் பாதுகாப்பாக இருக்கும். நாங்களும் தங்களைச் கவனித்துக்கொள்ள ஏதுவாயிருக்கும் என்றார்கள். நான் யோசனை செய்து அப்புறம் சொல்லுகிறேன் என்றேன். எப்படியும் நாராயணன் வீட்டில் தங்க வேண்டும் என்று வற்புறுத்தி வேண்டினார்கள். குருதேவரும் அனுமதித்தார். நான் சரி என்றேன். நாராயணன் வீட்டில் தங்கலானேன்.

## மங்களூர் செல்லுதல்

வழக்கம்போல் மக்கள் ஆசீர்வாதம் வாங்கிச் சென்றார்கள். இவ்வாறு நாராயணன் வீட்டில் தங்கியிருக்கும்பொழுது நண்பர் சுந்தரராஜு என்னிடம் வந்து, எங்கள் அத்தை மிகவும் உடல் நலமில்லாமல் மங்களூரில் இருக்கிறார்கள். அவர்களை இங்கு அழைத்து வர இயலாத நிலையில் இருப்பதால் தாங்கள் மங்களூர் வந்து, அத்தைக்குள்ள வியாதிகளைக் குணப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். நான் நாளைச் சொல்கிறேன், என்று சொல்லி அனுப்பிவிட்டேன். குருதேவரும் அனுமதித்தார்கள். மறுநாள் சுந்தரராஜு வந்தார். மங்களூர் செல்ல ஏற்பாடு செய்யுங்கள் என்றேன்.



மறுநாள் மங்களூருக்கு நானும் சுந்தரராஜும் புறப்பட்டுச் சென்றோம்.

இரவு ரயிலில் பயணம் செய்து காலை 3.00 மணியளவில் மங்களூரிலுள்ள சுந்தரராஜுவின் அத்தை வீட்டிற்குச் சென்று அங்கு தங்கினோம்.

அங்கு காலைக் கடனை முடித்துக்கொண்டு, குளித்து விட்டு தியானத்தில் அமர்ந்தேன். தியானம் கலைந்தபின், நோயுடனிருந்தவருக்கு ஆசிர்வதித்து திருநீற்றைக் கொடுத்தேன். அதன்பின் ஆகாரத்தை முடித்துக்கொண்டு சோபாவில் அமர்ந்தேன். அச்சமயம் சுந்தரராஜுவின் மாமனார் சுப்பிரமணியம் அவர்கள், தன் சிரமத்தின் நிலைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் நாராயணசாமியும், திரு. சீனிவாசராவும் வந்தார்கள். அப்பொழுது நோயாளியின் உடல்நிலைகளைப் பற்றி என்னிடம் விசாரித்து அறிந்தார்கள்.

சிறிது நேரம் கழித்து என்னைப் பற்றிய விவரங் களை அறிந்துகொள்ள ஆசைப்பட்டார்கள். நானும் என் நிலையில் விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தேன். ‘நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டு திரு. நாராயணசாமியும், திரு. சீனிவாசராவும் வீட்டிற்குச் சென்றார்கள்.

மறுநாள் வழக்கம்போல் தியானம் இருந்து விட்டு, நோய்வாய்ப்பட்டு இருந்தவருக்கு ஆசீர்வதித்து திருநீற்றைக் கொடுத்தேன். அச்சமயம் திரு. நாராயணசாமியும், திரு. சீனிவாசராவும் வந்து இருந்தார்கள். எல்லோரையும் ஆசீர்வதித்து திருநீற்றைக் கொடுத்தேன். காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு அமர்ந்தோம்.

நோயின் தன்மைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அச்சமயம் குருதேவரைப் பற்றிய விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தேன். குருதேவர் சில நேரங்களில் கோரக்நாத், மச்சேந்திரநாத், சோலங்கநாத் என்று சொல்லிக் கொண்டிருப்பார் என்று சொன்னதும், திரு நாராயணசாமி அவர்கள் எங்கள் வீட்டிற்குப் பக்கமாக உள்ள கதிரியில் கோரக்நாத், மச்சேந்திரநாத், சோலங்கநாத் சமாதிகள் இருக்கின்றன என்று சொல்லிவிட்டு, கதிரிக்குப்போய் சமாதியைப் பார்க்கலாம் என்று என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். அங்கு போய் ஒரு மணி நேரம் தியானம் இருந்தேன். குருதேவர் காட்சி கொடுத்து அங்குள்ள நிலைகளை விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அதாவது மங்களூரை, மங்களாதேவி என்ற அரசி ஆட்சி செய்து கொண்டிருக்கும் காலத்தில் மங்களாதேவி மச்சேந்திரநாத்தை தன்வசப்படுத்திக் கொண்டாள். தன் குருவான மச்சேந்திரநாத்தை, கோரக்நாத் தன் மந்திர சக்தியால், மங்களா தேவியிடமிருந்து மீட்டுச் சென்றார், என்று அங்குள்ள நிலைகளைக் காட்சியாகக் காண்பித்து விளக்கமாக உபதேசித்து அருளினார்கள். பின்பு தியானத்தைக் கலைத்துக்கொண்டேன்.

திரு. நாராயணசாமி அவர்கள், அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். மதியம் அவர்கள் வீட்டில் ஆகாரத்தை முடித்துக் கொண்டு, சிறிது நேரம் ஓய்வுக்குப் பின், திரு. சீனிவாசராவ் வீட்டிற்குச் சென்றுவிட்டு திரு. சுப்பிரமணியம் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம்.



# கொல்லூரில் தியானம்

ஒரு வாரத்தில் சுந்தரராஜுவின் அத்தை உடல் நலம் பெற்றார்கள். நானும், சுந்தரராஜும் குமாரபாளையம் திரும்பி வந்துவிட்டோம். நாராயணன் வீட்டில் தங்கி பிணியைப் போக்கிக் கொள்ள வருபவர்களுக்கு, ஆசிர்வதித்து திருநீற்றையும், எலுமிச்சம் கனியையும் கொடுத்து வந்தேன். இவ்வாறு சில நாட்கள் சென்றபின் குருதேவர் என்னைக் கொல்லூருக்குப் போகும்படி ஆணையிட்டார். (அதாவது மூகாம்பிகை கோவில் இருக்குமிடத்திற்கு) இந்த விவரத்தைக் குமாரபாளையம் அன்பர்களிடம் தெரிவித்தேன். அவர்களுக்கு என்னைக் கொல்லூர் அனுப்ப மனமில்லாது, கூடிய சீக்கிரம் தாங்கள் குமாரபாளையம் வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டு என்னை வழியனுப்பி வைத்தார்கள்.

ஈரோட்டிலிருந்து மங்களூருக்கு ரயிலில் சென்றேன். மங்களூரில் ரயிலைவிட்டு இறங்கி நடந்து வந்து கொண்டிருந்தேன். அச்சமயம் திரு. சுப்பிரமணியம் என்னைப் பார்த்து விட்டார். அவர், பால் வியாபாரம் செய்து வருவதால் தினமும் ரயிலில் வரும் பால் கேன்களை எடுக்க ரயில் நிலையத்திற்கு வருவதால், என்னைப் பார்க்க நேர்ந்தது. என்னை அவர் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனதும், திரு . நாராயணசாமி அவர்களுக்கும், திரு. சீனிவாசராவ் அவர்களுக்கும் தகவல் கொடுத்து, அவர்களும் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்களிடம் 'குருதேவர்' என்னை கொல்லூருக்குப் போகச்சொல்லி இருக்கிறார்கள், ஆகையால் நான் கொல்லூருக்குப் போக வேண்டும்' என்றதும் அவர்கள்

‘நாங்களும் மூகாம்பிகை கோயிலுக்கு உங்களுடன் வருகிறோம்’ என்று சொல்லிவிட்டு ‘இன்று ஒருநாள் மங்களூரில் தங்கிவிட்டு நாளை நாம் எல்லோருமே போவோம்’ என்று கேட்டுக் கொண்டார்கள்.

மறுநாள் பஸ்ஸில் கொல்லூர் சென்றோம். அங்கு மூகாம்பிகையை தரிசித்தோம். திரு. நாராயணசாமி, திரு. சீனிவாசராவ், திரு. சுப்பரமணியன் மூன்று பேரும் விடைபெற்று மங்களூர் சென்றார்கள். நான் குருதேவர் சொன்ன இடத்திற்குச் சென்று தியானத்தில் அமரலானேன்.

## கோலமா மகரிஷியின் தபோவலிமையை அறிதல்

நான் தியானத்தில் அமரும் சமயம், அடைமழைக் காலம். குருதேவர் ஆணைப்படி மரத்தடியில் மழையில் நனைந்தவாறே தியானத்தில் அமர்ந்து இருந்தேன். குருதேவர் காட்சிகொடுத்து, சிரித்துவிட்டு, கோலமா மகரிஷியின் தபோவலிமையையும் அவர் பெற்ற ஆற்றலையும் விவரித்து உபதேசிக்கலானார்கள்.

அச்சமயம் நம் பூமி சுழல்வது காட்சியாகத் தெரிகின்றது. வடதுருவம், தென்துருவம் இந்த இரு பக்கங்களும் மேகம் போன்று உள்ளே செல்வது தெரிகின்றது. பூமியின் நிலப்பரப்பை அந்த மேக அடர்த்தி அடைந்தவுடன் பனிப்பாறைகளாக உறைவது தெரிகின்றது. பூமியின் சுழற்சிவட்டத்தில் வெப்பமானது தெரிகின்றது. பூமி சுழன்று ஓடுபாதை ஓரங்களில் சிறிய கல் முதல் பெரும் பாறைகள் போன்று மிதந்து கொண்டிருப்பது



தெரிகின்றது. பாறைகளாக மிதந்து கொண்டிருப்பதை குருதேவர் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

அதாவது கோள்களிலிருந்தும், நட்சத்திரங்களிலிருந்தும், சூரியனிலிருந்தும் வெளிப்பட்டு வரும் உணர்வலைகளும், தூசுகளும், துகள்களும் சந்தர்ப்ப வசத்தால் பலநுண்ணணுக்களும், கலந்து, குவிந்து ஒன்றுசேர்ந்த பொருள்கள் தான் பாறைகளாகத் தெரிந்தது. அந்தப் பாறையான பொருள்களுக்குள் ஆற்றல்மிக்க அணுக்கள் உண்டு. ஒவ்வொரு பாறைக்கும் ஒவ்வொரு விதமான ஆற்றல் உண்டு என்று விளக்கினார்.

பூமியின் சுழற்சியில் ஏற்படும் வெப்ப வட்டத்தில், பாறைகள் (பொருள்கள்) சிக்கி ஆவியாகி அணுக்களாக புவிஈர்ப்பில் படர்வது தெரிகிறது. பூமியில் சுழற்சி வட்டத்தில் வெப்பமாகும் நிகழ்ச்சி தெரிகிறது. அதிலிருந்து வெளிப்படும் சப்தம் ‘ஓ’... என்ற நாதமாகக் காதில் கேட்கின்றது. பூமியின் சுழற்சி வட்டத்தின் வெப்ப அலைகள் புவிஈர்ப்பிற்குள் செல்லும்பொழுது, வெப்பம் தணிந்து புவிஈர்ப்பில் பரவியிருக்கும், பல உணர்வுகள் கொண்ட அணுக்களில் அசைவது தெரிகின்றது. தணிந்த வெப்ப அலைகள் வெளிப்பட்டுக் கொண்டே இருப்பதும், பூமியின் ஈர்ப்பில் வந்து நிலப்பரப்பில் ‘ம்...ம்...ம்’ என்று அடங்கிக் கொண்டேயிருப்பதும் தெரிகின்றது. அச்சமயம் குருதேவர் தணிந்த வெப்பத்தின் நிலைகளை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

அதாவது, தணிந்த வெப்ப அலைகள் ‘பூமியின் ஈர்ப்பில் வந்து அடங்கிக் கொண்டேயிருப்பதனால், பூமியின் உள்ளும், புறமும் தணிந்த வெப்பம் இருந்து

கொண்டே இருப்பதனால், பூமியின் வெப்பத்தால் பூமிக்குள் சகல பொருள்களும் புறத்தில் தாவர இனங் களும், உயிரினங்களும் வாழ வளர்ச்சிபெறக் காரணமா கின்றன. பூமியின் வெப்பத்தால் துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகி, நீராகக் கடலில் கலக்கின்றன என்று விளக்கினார்கள்.

மேலும், குருதேவர் உபதேசிக்கையில் பூமியின் இயற்கையில் செயல்நிலைகளைக் கோலமாமகரிஷி, தன் தவவலிமையால் கண்டறிந்ததை, நீ இப்பொழுது காட்சியாகப் பார்த்தாய் அல்லவா! இதைப் போன்று கண்டறிந்த ஆற்றல்களைத் தனக்குள் பெற்று, தன் உயிராத்மாவை ஒளி நிலையாக மாற்றிக் கொண்டிருக்கும் நிலையில், தனக்குள் வளர்த்துக் கொண்ட ஆற்றல் களின் நிலைகளைக் காவியமாகத் தொகுத்து தெய்வச் செயல் என்ற பெயரில் ‘மூகாம்பிகா என்று பெயர் வைத்து, இந்த தெய்வ நிலைகளைக் காவியமாகப் படைத்து, பாமர மக்களும் தெய்வ நிலைகளைப் பெறும் வண்ணம் அருள்பாலித்தார்’ என்றார்கள்.

## ஓம் என்ற பிரணவத்தின் உண்மை நிலை

பூமி சுழலும் பொழுது ஏற்படும் வெப்பத்தினால் வெளிப்படும் வெப்ப அலைகள் ‘ஓ’... என்ற நாதமாய் ஓங்காரமாகப் பரவி, நாதம் தணிந்து, புவிஈர்ப்பில் நிலப் பரப்பை வந்தடையும்பொழுது ‘ம்...’ என்று அடங்குவதும் இந்த நிலை தொடர்ந்து செயல்படுவதால், ‘ஓ...ம்’... ‘ஓ...ம்...ம்’... என்ற நாதமாக வெப்ப அலைகள்



ஒவ்வொரு குணங்களின், ‘ஓம்’ என்ற பிரணவம் ஒவ்வொரு அணுவிற்கும் மூலமாக இருப்பதால் ஆலயங் களில் ஒவ்வொரு தெய்வகுணங்களின் பெயர்களைச் சொல்லும் முன் ‘ஓம்...ம்’ என்ற பிரணவத்தை ஓதுவதன் சூட்சமம் இதுவே என்று அருளினார்கள்.

பரவெளியில் பரவி இருக்கும் கற்களும், பாறை களும், விஷதுகள்களும் புவிஈர்ப்பினால் அசுர வேகத்தில் பூமிக்கு வந்து வீழ்ந்தால், பொருள்களுக்கும், உயிர் களுக்கும் பேராபத்தை விளைவிக்கும் அல்லவா! இவை களுக்கு ‘அசுரர்கள்’ என்று பெயர் வைத்து, பரவெளியில் பரவியிருக்கும் பெரும்பாறைகளும், தூசுகளும், விஷ துகள்களும், பூமி சுழலும் பொழுது ஏற்படும் கடும் வெப்ப சுழல் வட்டத்தில் சிக்கி ஆவியாகவும், தூசி களாகவும், அணுக்களாகவும் மாற்றும் நிகழ்ச்சிகளின் செயல்களை, அதாவது கடும் வெப்பத்தில் வரும் நாதம் ‘‘**ஓங்காரம்**’’, கடும் வெப்பத்திற்கு ‘‘**ஓங்காரக்காளி**’’ என்று பெயர் வைத்து, அது செயலாக ஓங்காரக்காளி அசுரர்களை அழித்து நம்மை இரட்சிக்கின்றாள் என்று பூமியின் கடும் வெப்பநிலைகளின் சூட்சமச் செயல்களைக் காவியமாக அருளினார்கள்.

## தெய்வ குணங்களின் தன்மைகள்

பூமியின் சுழற்சி வட்டத்தில் ஏற்படும் கடும் வெப்ப அலைகள் புவிஈர்ப்பில் பரவும் பொழுது வெப்பம் தணிந்து, தணிந்த வெப்ப அலைகள் பூமியில் பரவி இருக்கும் அணுக்களையும், பூமியில் சகல பொருள் களையும் இயங்கச் செய்ய காரணமாகின்றன என்ற

சூட்சும நிலைகளின் செயல்களை **'பராசக்தி'** என்றும், அதாவது பூமியில் உள்ள சகல பொருட்களையும் தாவர இனங்களையும், உயிரினங்களையும் தணிந்த வெப்ப அலைகள் இயக்கும் நிலைகளைத் தான் 'பராசக்தி' என்று பெயர் வைத்து அருளினார்கள்.

பூமியின் பரவிய தணிந்த வெப்ப அலைகள் ஒவ்வொரு உணர்வலைகளிலும், அணுக்களிலும் அடங்கி, காந்தமாகி, ஒன்று சேர்ந்து, ஒன்றின் பத்தாகி, உருப் பெற்று வளரச்செய்யும் நிலையே **'மகாலட்சுமி'**. அதாவது பூமியில் உள்ள சகல பொருள்களுக்கும், தாவர இனங்களுக்கும் சத்தாகி வளர்க்கும் நிலைகளைத்தான் 'மகாலட்சுமி' என்று பெயர் வைத்து அருளினார்கள்.

பூமியில் விளைந்த அனைத்துப் பொருள்களுக்கும், அனைத்துத் தாவர இனங்களுக்கும் அனைத்து உயிரினங் களுக்கும், ஒவ்வொன்றுக்கும் மணம், குணம், சுவை இருக்கின்றது அல்லவா! வேப்ப மரத்தின் இலைகளை நுகர்ந்தால் கசப்பான மணத்தை அறியச் செய்கின்றது. சுவைத்தால் கசப்பின் உணர்வை அறியச் செய்கின்றது. அதை விழுங்கினால் குமட்டல் குணத்தின் செயலை இயங்கச் செய்கின்றது. கண்களால் வேம்பைப் பார்த்தால், இது கசக்கும் என்ற குமட்டல் குணத்தின் நிலையை அறியச் செய்கின்றது. ஆனால் குமட்டல் குணத்தை அறியும்பொழுது அதை வெறுக்கச் செய்கின்றது. 'அறியச் செய்யும் நிலையைத்தான்' ஞானம் என்றும் செயல்களை 'மகாசரஸ்வதி' என்றும், அதாவது வேப்ப மரத்தைப் போன்று பூமியில் உள்ள அனைத்து தாவர இனங்களும், அனைத்து உயிரினங்களும், அது வளர்த்துக் கொண்ட உணர்வுகளின் சத்திற்கொப்ப, குணங்களின் மணங்களை,



ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் பொழுது ஒவ்வொன்றின் உணர்வின் குணங்களின் நிலையை அறிந்து செயல் படுகிறோம் அல்லவா! இந்த நிலையை 'ஞானம்' என்றும், ஞானத்தின் செயல்களைத்தான் 'மகாசரஸ்வதி' என்றும் பெயர் வைத்தருளினார்.

புவிஈர்ப்பினால் நிலத்தில் பதிந்துள்ள வேப்பமரம், புவிஈர்ப்பின் துணையால் நிலத்தில் உள்ள நீரையும், காற்றில் மிதந்து கொண்டிருக்கும் தணிந்த வெப்ப அலைகளையும், தன் இனமான உணர்வலைகளையும் தன் இனமான உணர்வலைகளின் (வேம்பின்) சத்துக் களையும் தனக்குள் ஈர்த்து, சேர்த்துச் கொண்டதில், தணிந்த வெப்ப அலைகளின் இயக்கத்தால், தனக்குள் எடுத்துக்கொண்ட சாந்தமான உணர்வலைகளின் (வேம்பின்) சத்துக்கள் நீருடன் கலந்து, வேப்பமரமாக வளரும் நிலையில், வேம்பின் மணத்தையும், குணத்தையும் சுவையையும் வெளிப்படுத்துகின்றது.

| | |
|---|---|
| வேப்பமரத்தை இயக்கி வளரச் செய்யும் வெப்ப அலைகளின் ஆற்றல்கள் | ''வெப்பம்'' பராசக்தி. |
| வேம்பின் உணர்வின் சத்துக்கள் வேப்ப மரமாக காந்த நிலையில் வளரும் ஆற்றல்கள் | ''காந்தம்'' மகாலட்சுமி |
| வேப்பமரமாக வளர்ந்து, அதன் உணர்வின் சத்துக்கள் அதன் மணத்தையும், குணத்தையும், சுவையையும் வெளிப் பெறச் செய்யும் ஆற்றல்கள் | ''ஞானம்'' மகாசரஸ்வதி |

| | |
|---|---|
| பாறைகள், மற்றப் பொருட்கள் அனைத்தையும் இயங்கச் செய்யும் வெப்ப அலைகளின் ஆற்றல்கள் | ''வெப்பம்'' பராசக்தி. |
| பல உணர்வுகளின் சத்துக்கள் உறைந்து, காந்தமாக, பாறைகளாக, பொருள்களாக வளரும் ஆற்றல்கள் | ''காந்தம்'' மகாலட்சுமி. |
| பாறைகளாக, பொருள்களாக வளர்ந்து, அதன் தன் மணங்களையும், குணங் களையும், சுவைகளையும் வெளிப் பெறச்செய்து, அறியச் செய்யும் ஆற்றல்கள் | ''ஞானம்'' மகாசரஸ்வதி |
| உயிரின் துடிப்பால் வெப்ப அலைகளை ஈர்த்து உடலை இயங்கச் செய்யும் ஆற்றல்கள் | ''வெப்பம்'' பராசக்தி |
| உயிரின் துடிப்பின் இயக்கத்தால், தான் எடுத்துக் கொண்ட உணர்வும், உணர்வு களின் சத்துக்களும், உடலை காந்தமாக வளரச் செய்யும் ஆற்றல்கள் | ''காந்தம்'' மகாலட்சுமி |
| உயிரின் துடிப்பால் உணவையும், உணர்வுகளையும் உடலாக வளர்த்துக் கொண்ட நிலைக்களுக்கொப்ப உணர்வு களின் குணங்கள் செயல்பட்டு அறியச் செய்யும் ஆற்றல்கள் | ''ஞானம்'' மகாசரஸ்வதி |

மேற்கூறியவாறு பூமியின் ஒவ்வொரு பொருள் களிலும் மூன்று நிலைகளாக இயங்கும் ஆற்றல்களை,



*அதாவது இயக்குதல், வளர்த்தல், அறிதல் என்ற நிலைகளே சக்தி, லட்சுமி, சரஸ்வதி.*

*இந்த மூன்று ஆற்றல்களும் ஒன்றின் துணை கொண்டு ஒன்றுக்குள் ஒன்றாகச் சேர்ந்து வளர வாழச் செய்யும் ஆற்றல்களை 'மூகாம்பிகா' என்றருளினார் கோலமா மகரிஷி.*

*பற்பல விதமான குணங்களின் உணர்வலைகளுக்குள் வெப்ப காந்த அணுக்கள் கலந்திருப்பதனால் ஆவியான மேகங்களும், பற்பல ஆற்றல்கள் மிக்க உணர்வலை களும் சிறு அசைவினால் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து குவிந்து ஒன்றுடன் ஒன்று உராயும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் வெப்பத்தை* **'கடவுள்'** *என்றும், குவிந்த ஆவியான மேகங்கள் பற்பல குணங்கொண்ட உணர்வலைகள், காந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து வெப்பத்தினால் பொருளாக உருப்பெற்ற சந்தர்ப்பம்* **'பிரம்மா'** *என்றும், பொருளாக உருப்பெற்று வளர்ந்த பொருள்களிலிருந்தும் வெளிப்படும் உணர்வலைகளின் மணம், குணம், சுவைகளின் ஆற்றல்கள் (ஞானம்)* **'சரஸ்வதி'** *என்றும் அருளினார்கள்.*

*உருப்பெறச் செய்த சந்தர்ப்பம் 'பிரம்மா' உருப் பெற்ற பொருளை அறியச் செய்யும் நிலை சரஸ்வதி (ஞானம்). பிரம்மாவின் மனைவி சரஸ்வதி என்றார்கள்.*

*மேற்கூறியவாறு சிறுபொருளாக உருப்பெற்று, பெரும் பொருளாக வளர்ந்து பரம்பொருளான பூமியைச்* **'சிவம்'** *என்றார். பூமியின் உள்ள உணர்வுகளை இயங்கச் செய்யும் வெப்ப அலைகள்* **'சக்தி'** *என்றார்கள்.*

உதாரணமாக, நம் உடல் சிவம். உடலுக்குள் இயக்கும் உணர்வலைகளை இயங்கச் செய்யும் வெப்ப அலைகள் சக்தியாக இயங்கி நம்மை வளர வைக்கின்றன அல்லவா!

இதுபோன்றே, பூமி சிவசக்தியாக இயங்குகின்றது என்றார்கள். அதாவது பற்பல உணர்வலைகளின் சக்திகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒரு சிவமாகின்றது. ஒரு சிவம் பற்பல சக்திகளாக இயங்குகின்றது.

பூமி சுழலும் பொழுது ஏற்படும் வெப்பம் ''**விஷ்ணு**'', அதாவது பூமி சுழல்வதைக் குறிக்க விஷ்ணுவின் ஒருகையில் சக்கரமும், பூமி சுழலும் பொழுது வெப்பத் தினால் ஏற்படும் நாதத்தைக் குறிக்க ஒரு கையில் சங்கும், வெப்பம் உருப்பெறும் நிலையைக் குறிக்க விஷ்ணுவின் நெற்றியின் மத்தியில் சிவப்பு நாமமும், சிவப்பிற்கு இருபக்கமும் வெள்ளைத் திருமண்ணும் இருக்கின்றன. அதாவது, பூமியின் சுழற்சியில் வெளிப்படும் காந்த அலைகள் பரவெளியில் பரவியிருக்கும் காந்த அலை களுடன் உராயும்பொழுது ஏற்படும் வெப்பத்தைக் குறிக்க நெற்றியில் நாமம், இருபக்கம் வெண்மையும் மத்தியில் சிவப்பும் என்றார்கள்.

பூமி சுழலும் பொழுது ஏற்படும் வெப்பம், புவி யீர்ப்புக்குள் வெப்ப அலைகளாகப் பரவும் பொழுது, பூமியில் பரவியிருக்கும் எண்ணிலடங்காத பற்பல உணர்வலைகளின் சத்துகளுக்குள் அடங்கி, அந்த உணர்வலைகள் பூமியில் பதிந்து, பதிந்த உணர்வலை களின் சத்துக்கள் தூசியாக, மணலாக, மண்ணாக, கற்களாக, பாறைகளாக, மலைகளாக உருப்பெற்று வளரக் காரண மாகின்றன. அவைகளிலிருந்து வெளிப்படும் உணர்வலை





களின் சத்துக்கள், காளான்களாக, புற்களாக, பூண்டாக, செடிகளாக, கொடிகளாக, மரங்களாக வளரக் காரணமாகின்றன.

செடி, கொடி, தாவர இனங்களிலிருந்து வெளிப்படும் உணர்வலைகளின் சத்துக்களை உயிரணு ஈர்த்து, ஈர்த்த தாவர இனங்களின் சத்துக்கள் உயிரின் உடலாக வளர்ந்து அதாவது கிருமியாய், புழுவாய், பூச்சியாய், பல்லியாய், பாம்பாய், பறவையாய், மிருகமாய் இவ்வாறு மனிதன் வரை உருப்பெறச் செய்ய சத்தாக உறையக் காரணமாகி சாந்தமாக வளரச்செய்யும் ஆற்றல்களே **''மகாலட்சுமி''** என்றும், விஷ்ணுவின் மனைவி மகாலட்சுமி என்றும் அருளினார்கள்.

| | |
|---|---|
| ஆவியான மேகங்களும், காந்த அணுக்களும், பற்பல குணங்கள் கொண்ட உணர்வலைகளும், பற்பல தூசுகளும் | ''ஆதிசக்தி'' |
| ஆவியான மேகங்களும், வெப்ப காந்த அணுக்களும், பற்பல குணங்கள் கொண்ட உணர்வலைகளும், சிறு அசைவினால் ஒன்று சேர்ந்து குவிந்து ஒன்றுடன் ஒன்று உராய்வதால் ஏற்படும் வெப்பம் | ''கடவுள்'' |
| ஆவியான மேகங்களும், வெப்ப காந்த அணுக்களும், பற்பல குணங்களின் உணர்வலைகளின் சத்துக்களும் ஒன்று சேர்ந்து குவிந்து ஒன்றுடன் ஒன்று கலந்து வெப்பத்தினால் உருப்பெறும் சந்தர்ப்பத்தின் ஆற்றல் | ''பிரம்மா'' |

| | |
|---|---|
| மேற்கூறியவாறு இரு பொருளாக உருப்பெற்ற, பெரும் பொருளாக - பரமாக - உருப்பெற்று பூமியானது | ‘‘சிவம்’’ |
| பூமியின் இயக்கம் | ‘‘சக்தி’’ |
| பரவெளியில் பூமியைப் பரமாகக் காண்பது | ‘‘பரமசிவம்’’ |
| பூமியான பரமசிவத்திற்குள் பற்பல உணர்வுகளை இயங்கச் செய்யும் ஆற்றல்கள் | ‘‘பராசக்தி’’ |
| பூமி சுழலும்பொழுது சுழல் வட்டத்தில் ஏற்படும் வெப்பம் | ‘‘மகாவிஷ்ணு’’ |
| வெப்பஅலைகள் பூமியில் பரவி யிருக்கும் சத்துக்களில் அடங்கி, அந்தச் சத்துக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து காந்தமாக வளரும் ஆற்றல்கள் | ‘‘மகாலட்சுமி’’ |

மேற்கூறியவாறு, கோலமா மகரிஷி தவவலிமையால் கோள்களின் பேராற்றல்களை அறிந்துணர்ந்து தனக்குள் எவ்வாறு பேராற்றல்களைப் பெற்று உயிராத்மாவை ஒளியாக வளர்த்துக் கொண்டார் என்ற பேருண்மைகளைக் காட்சியாகவும், உணர்வு பூர்வமாகவும் உபதேசித்து அருளினார்கள்.

தியானத்தை கலைத்தவுடன் என் உடலில் பல அட்டைகள் கடித்து ரத்தத்தைக் குடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பல அட்டைகள் ரத்தத்தைக் குடித்துவிட்டு உப்பியவாறு தரையில் வீழ்ந்து கிடந்தன. அட்டைகள்



கடித்து இடங்களில் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்தவுடன் உடல் சிலிர்க்கலானது. இதற்கு முன் நான், அட்டைகளைப் பார்த்ததில்லை. ஆகையால் திகைத்தவாறு இருந்தேன். அச்சமயம் குருதேவர் சிரித்து விட்டு மனிதர்களின் ரத்தத்தைக் குடித்த அட்டைகளின் உடல்களில், ரத்தம் நுண்ணணுக்களாக விளைகின்றன. அட்டையின் உயிர் ஈர்ப்பில் நுண்ணணு உயிருடன் இணைந்து உயிராத்மாவாகிறது. அட்டை இறந்தபின் மனிதனின் உணர்வின் மணத்துடன் அட்டையின் உயிராத்மா காற்றில் மிதக்கின்றது. இத்தகைய உயிராத்மா, இலகுவில் மனிதர்களின் ஈர்ப்பிற்குச் சென்று விடுகின்றது. சுவாசிக்கும்பொழுது மனிதர்களின் இரத்தத்தில் கலந்து இந்திரியத்திற்குள் சென்றுவிடுகின்றது.

உதாரணமாக, குளவி எவ்வாறு புழுவைக் கூட்டில் வைத்து புழுவைக் கொட்டியதும், குளவியின் விஷமான அமிலம், புழுவின் உடலில் பாய்ந்து, கலந்து குளவியாக உருப்பெறச் செய்யும் அணுத்திசுக்களாக வளர்ச்சிபெற்று குளவியாக உருப்பெறுகின்றதோ, அதைப்போன்று மனிதனின் இந்திரியத்தில் கலந்துள்ள அட்டையின் உயிராத்மா, மனிதனாக உருப்பெறச் செய்யும் கருவாக வளர்ச்சி பெறுகின்றது. இவ்வாறு இந்திரியத்தில் வளரும் கரு, மனிதன் இறந்தபின் உடலை விட்டுப் பிரிந்து காற்றில் விண்ணில் மிதக்கின்றது. இவ்வாறே ஏழு மனிதர்களின் உடலுக்குள் சென்று, ஒவ்வொரு மனித உடலிலும், சிறுகச்சிறுக வளர்ச்சி பெற்று ஏழாவது மனித உடலில் மனிதனாக உருப்பெறவல்ல கருவாக ஆற்றல் பெறுகின்றது, அட்டையின் உயிராத்மா என்று கூறிவிட்டு காதில் ஊதினார். என் உடலில் ரத்தத்தை

உறிஞ்சிக்கொண்டிருந்த அட்டைகள் அனைத்தும் உதிர்ந்தன. சிறு தூறலாக மழை பெய்து கொண்டிருந்தது.

‘‘குளித்துவிட்டு வரும்படி’’ கூறினார். அருகில் உள்ள ஆற்றிற்குச் சென்று குளித்துவிட்டு, கையில் வைத்திருந்த பேரீச்சம்பழங்கள் இரண்டைத் தின்றுவிட்டு, சிறிது நீரைக் குடித்துவிட்டு தியானமிருந்த இடத்திற்கு மீண்டும் வந்து தியானத்தில் அமர்ந்தேன்.

மனித உடலை இயக்கும் விஷ்ணு, பிரம்மா, சிவம் இம்மூன்று தெய்வச் செயல்களால் எவ்வாறு மனிதனின் உடல் இயங்கி உருப்பெறுகின்றது என்ற தத்துவத்தை உபதேசிக்கலானார்.

## விஷ்ணு காக்கின்றான்

உயிரின் துடிப்பினால், மனிதனின் உடலில் உள்ள உணர்வுகளின் அணுக்கள் வெப்பமாகின்றன. வெப்பம் உடலை இயங்கச் செய்கின்றது. உடலின் இயக்கத்தினால் சுவாசிக்கும் பொழுது சோ...ஹ...ம், சோ...ஹ...ம் என்று நாதமாகின்றன. அதாவது மூச்சை ஈர்க்கும்பொழுது, ‘சோ’... என்ற நாதமாக உடலுக்குள் செல்கின்றது. வெளியில் வரும் சமயம், ‘ஹ’... என்ற நாதமாக மாறி, வெளிப்படும் சமயம், ‘ம்’... என்ற மூச்சாக வெளிப்படுகின்றது. இவ்வாறு உயிரின் துடிப்பால் ஏற்படும் வெப்பத்தினால் இயங்கும் செயல்களை ‘விஷ்ணு’ என்றார்.

அதாவது வெப்பம், இயக்கம், நாதம் இப்படி மூன்று நிலையாக இயங்கி மனிதனை வாழச் செய்யும் நிலையே ‘‘விஷ்ணு காக்கின்றான்’’ என்று அருளினார்.



## பிரம்மா படைக்கின்றான்

உடல் உட்கொண்ட உணவும், சுவாசித்த பற்பல உணர்வலைகளும், இரத்தத்தில் கலந்து, இரத்தம் தசைகளில் கலந்து வெப்பத்தினால் அணுத்திசுக்களாக உருப்பெற்று, அணுத்திசுக்களால் உடலாக உருப்பெறச் செய்யும் நிகழ்ச்சியே ''பிரம்மா'' என்றருளினார்.

## சிவன் அழிக்கின்றான்

உடல் சுவாசித்த உணர்வலைகள் உடலுக்குள் மறைந்து விடுகின்றன. உட்கொண்ட உணவுகளின் சத்துக்களை உடலுக்குள் மறைத்துக் கொள்கின்றது. உணவின் மணம், குணம், நிறம், சுவைகள், இவைகள் அனைத்தையும் தனக்குள் மறைத்து தனதாக்கிக் கொள்ளும் நிலைகளைத் தான் 'சிவன்' அழிக்கின்றான் என்று அருளினார்.

மேற்கூரிய, மூன்று தெய்வச் செயல்களைக் காட்சி யாகவும் உணர்வுபூர்வமாகவும் உபதேசித்து அருளினார் குருதேவர்.

குருதேவர் எமக்கு உபதேசித்து அருளிய தியான முறையை இதைப்படிக்கும் அனைத்து மக்களும் பெற வேண்டும் என்ற பேரவாவினால், இத்துடன் தியானம் செய்யும் முறையை மிக விளக்கமாக இணைத்துள்ளோம்.

## துருவ தியானம்

அகத்திய மாமகரிஷி அவர்கள் தம்முள் உள்ள நஞ்சினை அடக்கி, புவியின் துருவத்தின் வழியாக

விண்ணின் ஆற்றலை தம்முள் நுகர்ந்து, எதனை எல்லையாக வைத்து எதனை நுகர்ந்தாரோ, அதனின் ஆற்றலை தம்முள் பெற்றவர். அகத்தியர் இந்த புவியில் வாழ்ந்த காலத்தில் ஒவ்வொன்றின் உணர்வையும் நுகர்ந்தறிந்து, அதனை தம்முள் விளைய வைத்து, அதனின் ஆற்றலை தம்முள் பெருக்கிக் கொண்டவர்.

அகத்தியர் தமக்குள் விளைவித்து வளர்த்துக்கொண்ட பேராற்றல்களை தம் மனைவியின்பால் பாய்ச்சி, 'தமது மனைவியும் மெய்யுணர்வின் தன்மையைப் பெறவேண்டும். அதன் வழி கொண்டு, இருளைப் போக்கி பொருள் காணும் திறன் பெறவேண்டும் என்றும், தன் மனைவி தம்முள் அறியாது சேர்ந்த நஞ்சை அடக்கி, தம்முள் சேர்ந்த உணர்வுகளை ஒளியின் உணர்வின் தன்மையாக மாற்ற வேண்டும் என்றும்' அகத்தியர் தம் அருளுணர்வு களை தமது மனைவிக்கு ஊட்டினார்.

அகத்தியரின் மனைவி, தமது கணவர் தமக்கு ஊட்டிய அருளுணர்வின் தன்மைகளை தமக்குள் இணைத்து வளர்த்து, அதன் நிலை கொண்டு பேரானந்தத்தின் உணர்வின் தன்மை களை அறிந்து, இவைகளை தாம், தம் கணவராலேயே பெற்றோம் என்றுணர்ந்து, தாம் பெற்ற பேரானந்தத்தின் உணர்வின் தன்மைகள், தமது கணவரிடத்தில் மேன்மேலும் வளரவேண்டும். அவர் உயர்ந்த ஆற்றல்களைப் பெற வேண்டும், அவருடைய அருள்துணை கொண்டு தம்முள் அருளாற்றல்கள் பெருக வேண்டும், என்ற உணர்வை வளர்த்து, தமது கணவரின் உணர்வுகளுடன் தமது உணர்வு களை இரண்டற இணைத்து, இரு உணர்வுகளையும் ஒரு உணர்வாக ஒன்றிணைத்து துருவத்தின் ஆற்றல்களை தம்முள் வளர்த்துக் கொண்டார்கள்.



அகத்தியரும், அவரின் மனைவியும் தங்களுடைய உணர்வுகளை ஒரு உணர்வாக்கி விஷத்தை அடக்கி, நல்ஒளியின் உணர்வினை தங்களுக்குள் வளர்த்துக் கொண்டு, இரு உயிரையும் ஒரு உயிராக்கி துருவத்தின் ஆற்றலை நுகர்ந்து, தங்களுக்குள் விளைவித்து துருவ நட்சத்திரமாக எதையுமே அடக்கிடும், உருவாக்கிடும் நிலையாக உருவானார்கள். அவர்கள், இன்றும் விண்ணில், புவியின் துருவப் பகுதியில் துருவ நட்சத்திரமாக, என்றும் பதினாறாக, அழியா ஒளி சரீரமாக வாழ்ந்து வளர்ந்து கொண்டுள்ளார்கள்.

அதிகாலையில் 4.30 மணியிலிருந்து 6.00 மணி வரை துருவநட்சத்திரத்தின் அருளாற்றலின் உணர்வுகள் நமது புவியில் அதிகமாய்ப் படர்கின்றன. அச்சமயத்தில், கணவனும், மனைவியும் ஒன்றாக அமர்ந்து துருவ நட்சத்திரத்தின் அருளாற்றல்களை எண்ணி, ஏங்கி தியானிக்கும் பொழுது, துருவ நட்சத்திரத்திலிருந்து வெளிப்படும் அருளுணர்வுகள் உங்களில் படர்ந்து, உங்களுடைய வாழ்க்கையில் வரும் தீமைகளை வெல்லும் சக்தியாக உங்களில் வளர்கின்றது.

வாழ்க்கையில் வரும் தீமைகளைப் போக்கி, பொருளறிந்து செயல்படும் திறனை வளர்ப்பதற்காகவும், பெரு வீடு பெருநிலையான அழியா ஒளி சரீர வாழ்வு பெறும் நிலைக்காகவும், தங்களிடத்தில் துருவமகரிஷிகளின் அருளாற்றலின் உணர்வுகளை இணைத்து வளர்க்கும் நிலையை பெறுவதற்கு, இல்லறத்தை நல்லறமாக்கும் துருவத் தியானம் செய்யும் முறையை கீழே கொடுத் துள்ளோம். ஆகவே இதன் வழி கொண்டு, அதிகாலை 4.30 மணியிலிருந்து 6.00 மணிக்குள் கணவன், மனைவி

இருவரும் சேர்ந்தாற்போல் துருவத் தியானத்தில் அமர்ந்து, கீழே குறிப்பிட்டுள்ள முறைப்படி துருவத் தியானத்தை கடைப்பிடித்து, துருவமகரிஷியின் அருள் ஞான உணர்வு களை உங்களிடத்தில் பெருக்கி, நீங்கள் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற்று, வாழ்ந்து வளர்வதற்கு எமது அருளாசிகள்.

## ஆத்ம சுத்தி செய்யும் முறை

தியானமிருப்பவர்கள் ஆத்ம சுத்தியை கீழ்க் கண்டவாறு செய்ய வேண்டும் :

***அம்மா, அப்பா அருளால், ஞானகுரு, சற்குருதேவரின் அருளாசியால் 'துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா' என்று கண்களைத் திறந்து, ஒரு நிமிடம் எண்ணி ஏங்கி விட்டு, பிறகு கண்களை மூடி, 'துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் இரத்த நாளங்களில் கலந்து, எங்கள் இரத்த நாளங்களில் உள்ள ஜீவான்மாக்கள், ஜீவஅணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா'***

## துருவ தியானம், கூட்டு தியானம், பௌர்ணமி தியானம், குடும்ப தியானம் செய்யும் முறை

**''ஓம் ஈஸ்வரா குருதேவா''**

*(மூன்று முறை சொல்ல வேண்டும்)*

**கடவுள் வாழ்த்து**

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாய்
அனுதினம் தொழுவது நம் முதற் கடமையாம்!





உமதருளால் குருவருள் பெறுவேனே!
குருவருளால் உலகையறிவேனே!
மகரிஷிகளின் அருள் ஒளி பெற, எனக்கு
உரு கொடுத்த தாயே தந்தையே!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாய்
அனுதினம் தொழுவது நம் முதற் கடமையாம்!

என் உடலின் உயிரை யார் என்று அறிந்தேனே!
என் உடலின் உணர்வின் அலையை, ஆத்மா என்றறிந்தேனே!
ஆத்மாவின் உரு, கரு, உடலின் செயல் என்றறிந்தேனே!
வாழ்வில் உணரும் உணர்வை
நல் ஒளியின் உணர்வாய்ப் பெறுவேனே!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாய்
அனுதினம் தொழுவது நம் முதற் கடமையாம்!

என் குரு வழி மகரிஷிகளின் அருள் ஒளி பெறுவேனே!
என் உடலின் வாழ்வில் புனிதம் பெறுவேனே!
உயிரின் ஒளியாய் நிலை பெறவே
உணர்வைப் புனிதம் செய்வேனே!
குருவின் துணையால் உணர்வைப் புனிதம் செய்வேனே!
உயிரின் ஒளியாய் நிலை பெற்று
விண்ணின் ஒளியைப் பெறுவேனே!
குருவின் துணையால் விண்ணின் ஒளியைப் பெறுவேனே!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாய்
அனுதினம் தொழுவது நம் முதற் கடமையாம்!

### குருவருட்பா

ஓம் ஈஸ்வரா குருதேவா, கருணை ஸ்வரூபா!
என்னை ஆட்கொண்டருள்வாய் குருதேவா!

ஓம் ஈஸ்வரா! ஓம் ஈஸ்வரா!

ஆதிசக்தியின் அருள் பெற்ற ஈஸ்வரா! குருதேவா!
என்னை ஆட்கொண்டருள்வாய் குருதேவா! கருணைஸ்வரூபா!

ஓம் ஈஸ்வரா!   ஓம் ஈஸ்வரா!

என் இசையில் நீ இசைப்பாய்!
என் நினைவில் நீ வருவாய்!
உன்னருளைப் பெற்றிடவே
என் நினைவை தந்து விட்டேன் உன்னிடம் ஈஸ்வரா!

ஓம் ஈஸ்வரா!   ஓம் ஈஸ்வரா!

நானில்லை நீ இல்லா இவ்வுலகில்!
எல்லா நினைவையும் பெற்றிடவே
எனக்கருள் செய்வாய் ஈஸ்வரா!

ஓம் ஈஸ்வரா!   ஓம் ஈஸ்வரா!

பாட்டை மட்டும் பாடிவிட்டு
பல நினைவில் நானில்லாமல்
பரிபக்குவ நிலையை, எனக்கருள் செய்வாய் ஈஸ்வரா!

ஓம் ஈஸ்வரா!   ஓம் ஈஸ்வரா!

என் நினைவை எங்கெங்கோ அலையவிட்டு
என் ஆசை என்னுள்ளே வளர்ந்திடாமல்
என்னுள்ளே என்றும் நீ இருந்துவிடு ஈஸ்வரா!

ஓம் ஈஸ்வரா!   ஓம் ஈஸ்வரா!   ஓம் ஈஸ்வரா!

ஓம் ஈஸ்வரா குருதேவா

**தியானம்**

*(கீழ்க்கண்ட வாசகங்களை தியானத்தை வழி நடத்துபவர் சொல்ல, தியானத்தில் அமர்ந்துள்ள தியான*



*வழி அன்பர்கள் வாசகங்களை எண்ணி, ஏங்கி, மூன்று நிமிடமாவது கண்களை மூடி தியானத்தில் இருக்கவும்.)*

1. *எங்கள் தாய், தந்தையின் அருளாசியை, நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா!*

2. *எங்கள் குருவின் அருளாசியை, நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா!*

3. *தாய், தந்தை அருளால், குரு அருளால், மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் அருளால், அகஸ்த்தியர் துருவனாகி, துருவ மகரிஷியாகி, துருவ நட்சத்திரமான, அந்த துருவ நட்சத்திரத்திலிருந்து வெளிப்படும் பேரருளை, பேரொளியை, நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா.*

4. *துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் இரத்த நாளங்களில் கலந்து, இரத்தத்தில் உள்ள ஜீவான்மாக்கள், ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா.*

*(துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் உடலில் உள்ள உறுப்புகளை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் பெறவேண்டும் என்று கண்களின் நினைவை உடல் உறுப்புகளில் செலுத்தி இரண்டு நிமிடம் ஏங்கித் தியானிப்போம்.)*

5. *துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் சிறுகுடல், பெருங்குடல் முழுவதும் படர்ந்து, எங்கள் சிறுகுடலை, பெருங்குடலை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.*

6. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் கணையம் முழுவதும் படர்ந்து, எங்கள் கணையத்தை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும் துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

7. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் கல்லீரல், மண்ணீரல் முழுவதும் படர்ந்து, எங்கள் கல்லீரலை, மண்ணீரலை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

8. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் நுரையீரல் முழுவதும் படர்ந்து, எங்கள் நுரையீரலை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

9. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் சிறுநீரகங்களில் படர்ந்து, எங்கள் சிறுநீரகங் களை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

10. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் இதயம் முழுவதும் படர்ந்து, எங்கள் இதயத்தை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

11. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் கண்களில் படர்ந்து, எங்கள் கண்களில் உள்ள

கருமணிகள், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

12. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் நரம்பு மண்டலம் முழுவதும் படர்ந்து, எங்கள் நரம்பு மண்டலத்தை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

13. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் எலும்பு மண்டலம் முழுவதும் படர்ந்து, எங்கள் எலும்பு மண்டலத்தை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

14. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் நெஞ்சின் எலும்புகளுக்குள் படர்ந்து, நெஞ்சு எலும்புகளுக்குள் இருக்கும், ஊனை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

15. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் தசை மண்டலம் முழுவதும் படர்ந்து, எங்கள் தசை மண்டலத்தை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

16. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் தோல் மண்டலம் முழுவதும் படர்ந்து, எங்கள் தோல் மண்டலத்தை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

17. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் இரத்த நாளங்களில் கலந்து, எங்கள் உடல் உறுப்புகளில் அறியாத சேர்ந்த, விஷத் தன்மைகள் அனைத்தும் அகன்று, சர்வ நோய்களும், பிணிகளும், வலிகளும் எங்கள் உடலை விட்டு நீங்க அருள்வாய் ஈஸ்வரா.

18. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், என் தாய், தந்தை உடல் முழுவதும் படர்ந்து, அவர்களது இரத்த நாளங்களில் கலந்து, அவர்களது உடல் களிலுள்ள ஜீவான்மாக்கள், ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா.

19. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவர் மீதும் படர்ந்து, எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெற அருள்வாய் ஈஸ்வரா.

**ஓம் ஈஸ்வரா குருதேவா**

*(கீழ்க்கண்ட வாசகங்களை தியானத்தை வழி நடத்துபவர் சொல்ல, தியானத்தில் அமர்ந்துள்ள தியான வழி அன்பர்கள் அவரவர் குடும்பங்களில் உடலைவிட்டுப் பிரிந்து சென்ற உயிரான்மாக்களை எண்ணி தியானத்தில் இருக்கவேண்டும்.)*

சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும், பேரொளியும் எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் இரத்த நாளங்களில் கலந்து, எங்கள் இரத்த நாளங்களில் உள்ள ஜீவான்மாக்கள், ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா.

(மேற்கண்டவாறு ஒரு முறை சொல்ல வேண்டும்)



**ஓம் ஈஸ்வரா குருதேவா**

*எங்களுடன் வாழ்ந்து, வளர்ந்து உடலை விட்டுப் பிரிந்து சென்ற எங்கள் குலதெய்வங்களான மூதாதையர் களின் உயிரான்மாக்கள், சப்தரிஷி மண்டலங்களின் ஒளி அலைகளுடன் கலந்து, உடல் பெரும் உணர்வுகள் கரைந்து, பெருவீடு பெருநிலை என்ற பிறவியில்லா நிலையான அழியா ஒளி சரீரம் பெற அருள்வாய் ஈஸ்வரா.*

*(மேற்கண்டவாறு மூன்று முறை சொல்ல வேண்டும்)*

*எங்களுடன் வாழ்ந்து வளர்ந்து உடலைவிட்டுப் பிரிந்து சென்ற எங்கள் உற்றார், உறவினர் மற்றும் நண்பர் களின் உயிரான்மாக்கள் சப்தரிஷி மண்டலங்களின் ஒளி அலைகளுடன் கலந்து, உடல் பெறும் உணர்வுகள் கரைந்து பெருவீடு பெருநிலை என்ற பிறவியில்லா நிலையான அழியா ஒளிசரீரம் பெற அருள்வாய் ஈஸ்வரா.*

*(மேற்கண்டவாறு மூன்று முறை சொல்ல வேண்டும்)*

**ஓம் ஈஸ்வரா குருதேவா**

*சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும், பேரொளியும் எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் இரத்த நாளங் களில் கலந்து, எங்கள் இரத்தநாளங்களில் உள்ள ஜீவான்மாக்கள், ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா.*

**ஓம் ஈஸ்வரா குருதேவா**

*(இத்துடன் தியானத்தை நிறைவு செய்து விட வேண்டும். பிறகு கீழ்க்கண்ட வாசகங்களை, தியானத்தை வழி நடத்துபவர் சொல்ல, தியானத்தில் அமர்ந்துள்ள*

தியான வழி அன்பர்கள், அவர் சொல்லுவதைப் பின் தொடர்ந்து சொல்ல வேண்டும்.)

1. அகஸ்த்திய மாமகரிஷியின் அருட்சக்தியும், துருவ மகரிஷியின் அருட்சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், சப்தரிஷி மண்டலங்களில் பேரருளும் பேரொளியும், தியானமிருக்கும் எங்கள் உடல்களில் படர்ந்து, இரத்த நாளங்களில் கலந்து, எங்கள் இரத்தநாளங்களில் உள்ள ஜீவான்மாக்கள், ஜீவ அணுக்கள், அனைத்தும் பெற்று, எங்கள் வாழ்க்கை யில் அறியாது சேர்ந்த, தீய வினைகள், சாப வினைகள், பாவ வினைகள், பூர்வ ஜென்ம வினைகளால் விளைந்த சர்வ நோய்களும், சர்வ தோஷங்களும் நீங்கி, உடல் நலம், மன பலம், மன வளம் பெற்று, அருள்வழி வாழ்ந்து, எங்கள் இல்லற வாழ்க்கையில், இருளினை நீக்கி, நஞ்சினை வென்று, பேரருள் பெற்று, அருள் ஞானம் பெருகி, தொழில் வளம் பெருகி, விவசாயம் பெருகி, செல்வம், செல்வாக்கு, சொல்வாக்குப் பெருகி, தெளிந்த மனதுடன், மகிழ்ந்திடும் உணர்வுடன், அருள் ஞான வாழ்க்கையாக, வாழ்ந்து வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா.

2. அகஸ்த்திய மாமகரிஷியின் அருட்சக்தியும், துருவ மகரிஷியின் அருள் சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும் பேரொளியும், நாங்கள் தியானமிருக்கும், இந்த வீடு முழுவதும் படர்ந்து, இங்கே அமர்ந்து தியானிப்போரும், இங்கு குடியிருப்போரும், இங்கு வருவோரும் அகஸ்த்திய மாமகரிஷியின் அருட் சக்தியையும், துருவ மகரிஷியின் அருட்சக்தியையும்,



துருவ நட்சத்திரத்தின் பேரருளையும் பேரொளியையும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளையும் பேரொளியை யும் பெற்று, அவரவர்கள் இல்லற வாழ்க்கையில் இருளினை அகற்றி, நஞ்சினை வென்று, பேரருளைப் பெற்று, இப்பிறவியில் பிறவியில்லா நிலையென்னும், அருட்சக்தி பெற்று, அருள் ஞான வாழ்க்கையாக, வாழ்ந்து வளர்ந்திட, அருள்வாய் ஈஸ்வரா.

3. அகஸ்த்திய மாமகரிஷியின் அருட்சக்தியும், துருவ மகரிஷியின் அருட்சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும் பேரொளியும், தியானமிருக்கும் அனைவரது குடும்பங்களில் படர்ந்து, அவர்களது குடும்பங்களில், அறியாத சேர்ந்த தீய வினைகள், சாப வினைகள், பாவ வினைகள், பூர்வ ஜென்ம வினைகள், அனைத்தும் அகன்று, அருள் மகரிஷிகளின் அருள் வட்டத்தில், அவர்களது குடும்பங்களில் உள்ள, அனைவரும் வாழ்ந்து, வளர்ந்து, மனபலம் பெற்று, உடல் நலம் பெற்று, அருள் ஞானம் பெற்று, அவர்களது குடும்பங் களில், வாழ்ந்து வரும், கணவனும், மனைவியும், வசிஷ்டரும், அருந்ததியும் போன்று வாழ்ந்து, நளாயினியைப் போன்று, கணவனும் மனைவியும், ஒருவரை ஒருவர் மதித்து நடந்து, சாவித்திரியைப் போன்று, இருமனமும் ஒன்றி வாழ்ந்து, இல்லற வாழ்க்கையில், இருளினை அகற்றி, நஞ்சினை வென்று, பேரருள் பெற்று, மெய்ப்பொருள் காணும் திறன் பெற்று, தெளிந்த மனதுடன், மகிழ்ந்திடும் உணர்வுடன் வாழ்ந்து, அவர்களது பார்வையில், அவர்களது குடும்பங் களில் வளர்ந்து வரும் குழந்தைகள், கல்வியில் ஞானமும், கருத்தறிந்து செயல்படும் திறனும், உலக

ஞானமும் பெற்று, உலகைக் காத்திடும், அருள் ஞானக் குழந்தைகளாக, வளர்ந்து வாழ்ந்திட அருள்வாய் ஈஸ்வரா.

4. அகஸ்த்திய மாமகரிஷியின் அருட்சக்தியும், துருவ மகரிஷியின் அருட்சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும் பேரொளியும், இப்புவி முழுவதும் படர்ந்து, இப்புவியில் கலந்துள்ள, நச்சுத் தன்மைகள் அனைத்தும் அகன்று, இப்புவியில் வாழும் மக்கள் அனைவரும், மத பேதமின்றி, இன பேதமின்றி, மொழி பேதமின்றி, மன பேதமின்றி, சகோதர உணர்வுடன், ஒன்றுபட்டு வாழ்ந்திட அருள்வாய் ஈஸ்வரா.

5. அகத்திய மாமகரிஷியின் அருள் சக்தியும், துருவ மகரிஷியின் அருள் சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் கருவுற்றிருக்கும் தாய்மார் களும், கருவில் வளரும் அனைத்து சிசுக்களும் பெற்று, மகாலட்சுமியைப் போன்று கவரும் ஆற்றல் பெற்று, மகா சரஸ்வதியைப் போன்று சர்வ ஞானமும் பெற்று, பராசக்தியைப் போன்று அனைத்தையும் உருவாக்கும் ஆற்றல் பெற்று, உலகத்தைக் காத்திடும் அருள்ஞானச் சக்தி பெற்று, பிறந்து வளர்ந்து இந்த உலகத்தைக் காத்திடும் அருள்ஞானக் குழந்தைகளாக வாழ்ந்து வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா.

6. அகஸ்த்திய மாமகரிஷியின் அருட்சக்தியும், துருவ மகரிஷியின் அருட்சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும் பேரொளியும், மேகங்களில் படர்ந்து, மழை மேகங்கள் கூடி, நல்ல மழை பெய்து, ஏரி குளங்கள்

நிரம்பி, நீர் வளம் பெருகி, தாவர இனங்கள் செழித்து வளர்ந்து, உணவு தானியங்கள் உற்பத்திப் பெருகி, ஊரும் உலகமும், உலக மக்கள் அனைவரும், நலமும் வளமும் பெற அருள்வாய் ஈஸ்வரா.

(மேற்குறிப்பிட்டவாறு, நல்ல மழை பெய்ய வேண்டும் என்று சிறிது நேரம் தியானம் இருந்துவிட்டு, 'ஓம் ஈஸ்வரா குருதேவா' என்று மூன்று முறை சொல்லிவிட்டு தியானத்தை நிறைவு செய்ய வேண்டும்.)

## கூட்டுத் தியானத்தின் பலன்கள்

மழைக் காலங்களின் சிறு துளிகளாக மழை பெய்து, பெரும் வெள்ளமாகத் திரண்டு ஓடுகின்றது. அப்பொழுது குப்பை கூளங்களையும், அசுத்தங்களையும் அடித்துச் செல்கின்றது. அதைப்போன்று அதிகம் பேர் ஒன்று சேர்ந்து ஓர் இடத்தில் அமர்ந்து 'துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியைப் பெறவேண்டும்' என்ற ஒரே உணர்வின் எண்ணங் கொண்டு, அனைவரும் தியானத்தில் ஈர்ப்பதனால், கூட்டுத் தியானத்தில் அமர்ந்துள்ள அனைவருக்கும் துருவ நட்சத்திரத்தின் பேரருளையும், பேரொளியையும் அதிக அளவில் பெறுகின்றனர். அதனால், ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில், தன்னையறியாமல் சேர்ந்திருக்கும் தீய சக்திகளும், தீய உணர்வுகளும் மாய்ந்துவிடுகின்றன. ஆகையால் சஞ்சலம் நீங்குகிறது. மனம் அமைதியாகிறது. நல்ல எண்ணங்களின் உணர்வுகள் வலுப்பெறுகின்றன. ஆத்மாவும் ஒளிநிலை பெறும் ஆற்றலைப் பெறுகின்றது. ஆகவே, ஒவ்வொரு வாரத்திலும் ஒருநாள் கூட்டுத் தியானமிருப்பது மிக அவசியம். தனித்து தியானத்தில் இருந்து சஞ்சலத்தைப் போக்க முடியாதவர்கள், கூட்டுத்

தியானத்தில் கலந்து கொள்வதால், சஞ்சலத்தைப் போக்கிட முடியும். மன அமைதியும் கிடைக்கும். நாம் பிறரைப் பார்க்கும் பொழுது அவர்களும் மன அமைதி பெறு கின்றனர். நாம் தொட்டுக் கொடுக்கும் பொருள்களில் நல்ல மனமிருப்பதால், வியாபாரம் நல்லவிதமாய் அமைய நம்மனமே உதவுகிறது. மன அமைதி பெறுவதால், தொழில் செய்யும் பொழுது சிந்தித்து செயல்பட முடிகிறது. ஆத்மாவும் ஒளிநிலை பெறும் ஆற்றல் பெறுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நட்சத்திரத்தின் ஆற்றல் பெற்றவர். மனிதர்கள் 'துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் பெறவேண்டும்' என்ற ஒரே ஏக்க உணர்வுடன் கூட்டாகத் தியானமிருப்பதால், (27 நட்சத்திரங்களின் ஒளிச்சக்தியை எப்படிச் சூரியன் எடுத்துக்கொள்கிறதோ அது போல்) ஒவ்வொருவரும் 27 நட்சத்திரங்களின் ஆற்றலைப்பெற முடியும்.

வான மண்டலத்தில் ஏற்படும் கோள்களின் மாற்றத்தினால் உண்டாகும், மாறுபடும் தீய உணர்வு களிலிருந்தும், நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள கூட்டுத் தியானம் மிக உதவியாகயிருக்கின்றது.

## பௌர்ணமி தியானம் செய்வதால் ஏற்படும் பலன்கள்

எம் குருநாதர் காட்டிய முறைப்படி பௌர்ணமி தியானமிருக்கும் அனைத்து ஆத்ம ஐக்ய அன்பர்களின் எண்ணங்களையெல்லாம், ஒன்று சேர்த்துக் குவித்து, ஒரு இலட்சம் பேர் தியானிக்கிறோம் என்றால், தியானித்த ஒவ்வொருவருக்கும், அந்த ஒரு இலட்சம் பேருடைய





சக்தி கிடைக்கின்றது. அச்சமயம் நமக்கு சக்தி அதீத நிலைகளில் கூடுகிறது. எம் குருநாதர் காட்டிய முறைப்படி, நீங்கள் தியானமிருக்கும்போது, யாம் அச் சமயம் தியானமிருக்கிறோம். அச்சமயம் உங்களுக்குக் சக்திகூட, எம் குருநாதர் காட்டிய நெறிப்படி, உங்கள் உயிராத்மாவைப் பிரார்த்தித்து, அந்த சக்தியை நீங்கள் பெற எம்மால் உதவ முடிகிறது.

இப்போது, சாதாரணமாகப் பூமியிலே பூச்செடியிருக் கின்றது. பூமியிலே இருக்கக் கூடிய காந்த அலைகளுக்குள் இருக்கும் தன் இனமான நறுமணத்தை தன்னுள் ஈர்த்து தானும் வளர்ந்து, தான் வளர்த்துக்கொண்ட நறுமணத்தை பூமியிலே படரச் செய்கின்றதோ, அதைப்போன்று, நாம் முதலில் சொன்ன முறைப்படி இந்தத் தியானத்தைச் செய்து வந்தால், இந்தக் காற்றலைகளிலே கலந்துள்ள மகரிஷிகள், ஞானிகள் இந்தப் பூமியிலே வாழ்ந்த காலங்களில் எவ்வளவு சக்திகளை இங்கே படர விட்டிருக்கின்றார்களோ, இதையும், அதைப்போன்று நாம் விண்ணை நோக்கிச் சந்திரனைத் தியானிக்கும்போது விண்ணிலே மகரிஷிகள் இன்று துருவ நட்சத்திரமாகவும், சப்தரிஷி மண்டலங் களாகவும், பரவெளி மண்டலங்களில் இருப்பதனாலேயே, அதிலிருந்து வெளிப்படும் உயர்ந்த சக்திகள் பூமிக்கு வெளியே படர்ந்திருக்கும். அந்தச் சக்திகளை, இந்த முறைப்படி நீங்கள் தியானிக்கும்போது, அந்த மகரிஷிகளுடைய உயர்ந்த அருள் சக்தி உங்களுக்குக் கிடைக்க, எம் குருநாதர் காட்டிய வழிகொண்டு உதவ முடிகின்றது.

ஆகவே பௌர்ணமி தியானத்திலே உங்களுக்கு இந்தச் சக்திகூட, யாம் உதவுவதால், அந்த நேரத்தை விரயம் செய்யாது நீங்கள் தியானமிருந்து பயனடையுங்கள்.

இப்பௌர்ணமி தியானத்திலே உங்களுக்கு வழி யறிந்து செயல்பட ஞானம் கிடைக்கின்றது. துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் பெறுவதால் நமது ஆத்மாவிலும் ஒளிபெறும் அணுக்கள் வளர்கின்றன. நம் மூதாதையர்கள் ஒளி சரீரம் பெற உதவுகின்றோம். அதே சமயம் சப்தரிஷி மண்டலங்களின் பேரருளையும், பேரொளியையும் நாம் பெற தகுதி பெறுகின்றோம்.

## குடும்ப தியானத்தின் பலன்கள்

குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமுடன் வாழ்ந்து வந்தாலும், புற வாழ்க்கையில் எதிர்பாராது வரும் இன்னல் களும், வெறுப்பு உணர்வுகளால் கோபமும், குரோத உணர்வுகள் வளர்ச்சி பெற்றுச் சஞ்சலமும், வேதனை உணர்வுடன் தொழில் செய்யும் பொழுது, சிந்திக்கும் ஆற்றல் குறைந்து, வெறுப்புடன் தொழில் செய்யும் பொழுது, பிறர் நம்மை வெறுப்புடன் பார்ப்பதும், பேசுவதும், அதனால் தொழில் செய்யும் இடங்களில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. வியாபாரங்களில் நாம் தொட்டுக் கொடுக்கும் பொருள்களில் வெறுப்பான உணர்வலைகள் படுவதால், பொருள்கள் வாங்குபவர்கள் அப்பொருளைப் பார்த்து வாங்கும்பொழுது, பொருள் மீது வெறுப்படைந்து பொருளை வாங்காமல் சென்று விடுகின்றனர். வியாபாரத்தில் மந்தம் ஏற்படும்பொழுது, வேதனை உணர்வுகள் ஆற்றல் பெறத் தொடங்கி விடுகின்றன. அதனால் இரத்த அழுத்தம் போன்ற நோய் மற்றும் பல நோய்கள் வரக் காரணமாகின்றன.

குடும்பத்தில் மனைவி மக்களுடன் தாய், தந்தை யுடன், பந்த பாசத்துடன் இருந்தாலும், குடும்பத்தில்



எவரிடத்திலும் சிறுகுறைகளை, நாம் பார்க்க நேரிட்டால் நம்மை அறியாமல் வெறுப்பும், வேதனையும், கோபத்துடன் பேசும் உணர்வின் ஆற்றலைத் தூண்டிவிடுகின்றன. இதனால் குடும்பத்தில் வேற்றுமை உணர்வுகள் வளரத் தொடங்கிவிடுகின்றன. நல்ல குணங்களின் உணர்வின் ஆற்றல் தணிந்துவிடுகின்றது. சஞ்சலமும், வேதனையும் கொண்ட உணர்வுகள் மேலோங்கி இருப்பதால், கோவிலுக்குச் சென்று அங்கு அமைதி பெற விரும்பினாலும், அமைதி பெற முடிவதில்லை. ஞானிகள் உபதேசித்து அருளிய நல்ல உணர்வுகளைப் பெற விரும்பினாலும் பெற முடிவதில்லை. ஆகவே நம்மை அறியாமல் நம்மை ஆட்டிப்படைக்கும், இத்தகைய தீய உணர்வுகளை மாய்த்து, ஞானிகள் உபதேசித்தருளிய, நற்குணங்களின் உணர்வின் ஆற்றலைப் பெறச் செய்வதே குடும்பத் தியானம்.

குடும்பத் தியானம் இருப்பவர்கள் மன அமைதி பெறுகின்றனர். வீட்டில் பதிந்துள்ள சஞ்சல அலைகள் மறைகின்றன. குழந்தைகள் தாய், தந்தை சொற்படி நடந்து, நன்கு படிக்கவும் உதவுகின்றன. குடும்பத்தில் அமைதி நிலவும். வியாபாரம் நல்லவிதமாக நடைபெற உதவும். தொழில் செய்யுமிடங்களில் அமைதி கொண்டு தொழில் செய்ய முடியும் நல்ல பெயரும் புகழும் கிடைக்கும். உயிராத்மாவில் உள்ள அணுச்சிசுக்கள் ஒளியாக மாறும் ஆற்றல் பெறுகின்றன. **ஆகவே, குடும்ப வாழ்க்கையிலேயே 'ஆத்ம ஞானம்' பெற்றுப் 'பிறவா நிலை' என்னும் ஒளிநிலையை அடையலாம். உங்களை நம்புங்கள். உங்களிடம் உள்ள ஆற்றலால் இவ்வழியைக் கடைப்பிடித்து ஒளிநிலை அடையலாம்.**

## கலசமும் தியானமும்

**கலசம் வைப்பதற்குத் தேவையான பொருட்கள் :**

1. தேங்காய்
2. சொம்பு (செம்பு, பித்தளை, எவர்சில்வர் அல்லது வெள்ளி.)
3. பச்சரிசி.
4. தட்டு (செம்பு, பித்தளை, எவர்சில்வர் அல்லது வெள்ளி)
5. மஞ்சள் கயிறு
6. மாவிலை 5 (ஐந்து இலைகள்)
7. 25 பைசா நாணயம் அல்லது ஒரு ரூபாய் நாணயம்
8. எலுமிச்சம் பழம் ஒன்று
9. ஒரு முழம் பூ
10. ஒரு மஞ்சள்

## கலசம் வைக்கும் முறை

ஒரு பித்தளைத் தட்டில், அந்தத் தட்டுக்குத் தகுந்தாற்போல் பச்சரிசி நிரப்பி, 'ஓம்' என்று எழுதி விடவும். பிறகு, ஒரு பித்தளைச் சொம்பில், நல்ல நீர் நிரப்ப வேண்டும். அதன் பிறகு 5 மாவிலைகளை வைக்கவேண்டும். அதன் மீது ஒரு முற்றிய தேங்காய் வைப்பதற்கு முன், தேங்காய் மீது முழுவதும் நன்றாக மஞ்சள் தடவி, சந்தனம், குங்குமம் பொட்டு வைக்க வேண்டும். பின் தேங்காயைச் சொம்பின்மீது வைக்கும்



போது, சற்குருதேவரை எண்ணி, ஒரு 25 பைசாவையோ அல்லது ஒரு ரூபாய் நாணயத்தையோ சொம்பிற்குள் போட வேண்டும். பின் சொம்பின் கழுத்தில் மஞ்சள் கட்டப்பட்டுள்ள மஞ்சள் கயிற்றைக் கட்டிவிடவும். பிறகு தேங்காய்மீது புஷ்பத்தை மாலையாகச் சாத்தவும்.

பூஜையறை இருந்தால் அவ்வறையில் கலசம் வைக்கலாம். பூஜையறை இல்லாதவர்கள் குழந்தைகளுக்கு எட்டாதவண்ணம் சிறிது உயரத்தில் சிறுபெட்டி போன்று செய்து, சுவரில் பதிய வைத்து, அதில் கலசம் வைக்கலாம். அலமாரி இருந்தால் அதில் கலசம் வைக்கலாம். இவ்வாறு கலசம் வைத்தால் தோஷமோ, தீட்டோ பட்டு விடுமோ என்று பயப்படத் தேவையில்லை. குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் அவரவர்கள் சிறிது நேரம் சங்கடத்தையும், வேதனைகளையும் ஒதுக்கிவிட்டு, இதிலிருந்து 'நலமும் வளமும் பெறுவோம்' என்ற உணர்வுடன் தங்கள் உயிரைப் புருவமத்தியில் 'ஈஸ்வரா' என்று எண்ணித் 'துருவ மகரிஷிகளின் அருள் சக்தியை நான் பெற அருள்வாய் ஈஸ்வரா' என்ற உணர்வுடன் ஒரு நிமிடம் ஏங்கிவிட்டு, அடுத்த நிமிடம் 'துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியை நான் பெற அருள்வாய் ஈஸ்வரா' என்று ஏங்கிய வண்ணம் கலசத்திற்கு அருகில் சென்று, கலசத்தைப் பார்த்த வண்ணம் 'துருவ நட்சத்திரத்தின் பேரருள், பேரொளி இங்கு படர வேண்டும் ஈஸ்வரா' என்ற உணர்வுடன் ஐந்து நிமிடம் தியானம் இருக்கவும். தியானமிருப்பதால், துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியை குடும்பத்தில் உள்ள அனைவரும் பெற ஏதுவாகின்றது. **'உங்கள் உணர்வின் ஆற்றலே உங்களைக் காக்கும்'** என்ற உறுதியான நம்பிக்கை கொண்டு தியானித்து நலமும், வளமும் பெறுங்கள்!

முறைப்படி கலசத்தை வைத்துவிட்டுக் குடும்ப சகிதம் அவரவர்கள் உயிரைப் புருவ மத்தியில் 'ஈஸ்வரா' என்று எண்ணிவிட்டு 'துருவ நட்சத்திரத்தின் பேரருளை பேரொளியை நான் பெற அருள்வாய் ஈஸ்வரா! என்ற உணர்வுடன், ஐந்து நிமிடம் கலசத்தைப் பார்த்துவிட்டுப் பின், தியானத்திற்குச் சொன்ன வாசகங்களை ஒருவர் சொல்ல, மற்றவர்கள் மனத்தில் எண்ணிக் கொண்டு, கலசத்தைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். தியான வாசகங்களைச் சொல்லி முடித்தவுடன் கண்களை மூடி 'துருவ நட்சத்திரத்தின் பேரருளை பேரொளியை நான் பெற அருள்வாய் ஈஸ்வரா' என்ற உணர்வுடன் பத்து நிமிடம் தியானித்து விட்டுக் கண்களைத் திறந்தவுடன் 'துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை பெற வேண்டும்' என்ற உணர்வுடன் ஒரு நிமிடம் ஏங்கி இருக்கவேண்டும். அடுத்த நிமிடம் கண்களை மூடி 'துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை என் ஜீவாத்மா பெறவேண்டும் ஈஸ்வரா!' என்ற உணர்வுடன், உடல் முழுவதும் ஒரு நிமிடம் எண்ணித் தியானிக்கவும், பின் கண்களைத் திறந்தவுடன், கணவன் மனைவி இருவரும் ஒருவர் நெற்றியை ஒருவர் பார்த்து 'துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை என் கணவரின் ஜீவான்மா பெறவேண்டும்' என்று மனைவியும், 'துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை என் மனைவி யின் ஜீவான்மா பெற வேண்டும்' என்று கணவனும், எண்ணிப் பார்த்து விட்டுத் தியானத்தை நிறைவு செய்யவும்.

பிரசாதம் வழங்கும்போது 'குழந்தைகள், துருவ நட்சத்திரத்தின் பேரருளை பேரொளியைப் பெறவேண்டும் ஈஸ்வரா!' என்ற உணர்வுடன் எண்ணி குழந்தைகளுக்கு பிரசாதம் கொடுக்கவும்.



*குழந்தைகள் பிரசாதம் வாங்கும்போது 'தாய், தந்தையின் அருளாசியை நான் பெற வேண்டும் ஈஸ்வரா!' என்ற உணர்வுடன் ஏங்கிப் பாதத்தைத் தொட்டு வணங்கிவிட்டுப் பிரசாதத்தை வாங்கவேண்டும்.*

*இவ்வாறு செய்வதால் குழந்தைகளின் தோஷம் விலகி, தாய், தந்தையுடன் பாசத்துடன் வளர்வார்கள்.*

## கணவன் மனைவி தியானம் செய்யும் முறை

**''ஓம் ஈஸ்வரா குருதேவா''**

*அம்மா அப்பா அருளாசியை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா!*

*(ஈஸ்வரா என்று சொல்லும்பொழுது புருவ மத்தியில் உள்ள உயிரை ஈசனாக எண்ண வேண்டும்)*

*குருவின் அருளாசியை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா...!*

*அம்மா அப்பா அருளாசியால், குருவின் அருளாசியால் அகத்தியமா மகரிஷியின் அருள்சக்தியையும், துருவ மகரிஷிகளின் அருள்சக்தியையும், துருவ நட்சத்திரத்தின் பேரருளையும், பேரொளியையும், சப்தரிஷி மண்டலங் களின் பேரருளையும், பேரொளியையும் நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா...!*

*இப்போது இருவரும் கண்களை மூடி*

*துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் எங்கள் இரத்த நாளங்களில் கலந்து எங்கள் உடல் முழுவதும்*

படர்ந்து எங்கள் உடல்களில் உள்ள ஜீவான்மாக்கள், ஜீவஅணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா...!

சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும், பேரொளியும் எங்கள் இரத்த நாளங்களில் கலந்து எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் உடல்களில் உள்ள ஜீவான்மாக்கள், ஜீவஅணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா...!

என்று தியானிக்க வேண்டும்.

**''ஓம் ஈஸ்வரா குருதேவா''**

இப்பொழுது கணவன், 'மனைவி மகரிஷிகளின் அருள் சக்தியைப் பெற்று, அருள் ஞானம் பெற்று, உயர்ந்த ஆற்றல்களைப் பெற வேண்டும்' என்றும், மனைவி, 'கணவன், மகரிஷிகளின் அருள்சக்தியைப் பெற்று, அருள்ஞானம் பெற்று, உயர்ந்த ஆற்றல்களைப் பெற வேண்டும்' என்றும் தியானம் செய்தல் வேண்டும்.

## கணவன் மனைவிக்காக தியானம் செய்யும் முறை

''அகத்திய மாமகரிஷியின் அருள்சக்தியையும், துருவ மகரிஷியின் அருள்சக்தியையும், துருவ நட்சத்திரத்தின் பேரருளையும், பேரொளியையும், சப்தரிஷி மண்டலங் களின் பேரருளையும், பேரொளியையும் மனைவி பெற்று, அருள் ஞானம் பெற்று மலரைப் போன்ற மணமும், மகிழ்ந்து வாழும் சக்தியும் பெற்று, மகரிஷிகளின் அருள்வட்டத்தில் வாழ்ந்து, வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா'' என்று கணவன் மனைவி மீது நினைவினை செலுத்தி சில நிமிடங்கள் தியானிக்கவும்.



## மனைவி கணவனுக்காக தியானம் செய்யும் முறை

‘‘அகத்திய மாமகரிஷியின் அருள்சக்தியையும், துருவ மகரிஷியின் அருள்சக்தியையும், துருவ நட்சத்திரத்தின் பேரருளையும், பேரொளியையும், சப்தரிஷி மண்டலங் களின் பேரருளையும், பேரொளியையும் என் கணவர் பெற்று, அருள் ஞானம் பெற்று மகரிஷிகளின் அருள் சக்தியால் அவருடைய தொழில்வளம் பெருகி, அவர் பார்ப்பவர்களும், அவரைப் பார்ப்பவர்களும், மகரிஷி களின் அருள் சக்தியால், மலரைப் போன்ற மணமும், மகிழ்ந்து வாழும் சக்தியும் பெற்று வாழ்ந்து வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா’’ என்று மனைவி கணவன் மீது நினைவினை செலுத்தி தியானம் செய்தல் வேண்டும்.

**‘‘ஓம் ஈஸ்வரா குருதேவா’’**

இப்பொழுது கணவனும் மனைவியும் அவர்களது தாய் தந்தையை மனதில் எண்ணி அவர்கள் உயர்ந்த சக்தி பெற வேண்டும் என்று இருவரும் அவரவர்கள் தாய் தந்தைக்காக தியானம் செய்தல் வேண்டும்.

## கணவனும் மனைவியும் அவரவர்களின் தாய் தந்தைக்காக தியானம் செய்யும் முறை

அகத்திய மாமகரிஷியின் அருள்சக்தியையும், துருவ மகரிஷியின் அருள்சக்தியையும், துருவ நட்சத்திரத்தின் பேரருளையும், பேரொளியையும், சப்தரிஷி மண்டலங்

களின் பேரருளையும், பேரொளியையும் எங்களது தாய் தந்தை பெற்று, மகரிஷிகளின் அருள் வட்டத்தில் இணைந்து, பேரின்பப் பெருவாழ்வாக வாழ்ந்து, அவர்களுடைய அருட்பார்வையில் அவர்களுடைய அருளாசியின் உறுதுணை கொண்டு நாங்கள் என்றென்றும் நல்லவர்களாக, உயர்ந்த ஞானமுள்ளவர்களாக, உயர்ந்த ஆற்றல் பெறும் நிலையாக வாழ்ந்து வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா! என்று இருவரும் அவரவர்கள் தாய் தந்தைக்காக தியானிக்க வேண்டும்.

பிறகு, கணவன், மனைவி இருவரும் சப்தரிஷி மண்டலங்களின் பேரருளை, பேரொளியை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா...! என்று எண்ணி ஏங்கிவிட்டு...

''எங்களுடன் வாழ்ந்து வளர்ந்து, உடலை விட்டுப் பிரிந்து சென்ற, எங்கள் குலதெய்வங்களான மூதாதையர்களின் உயிரான்மாக்கள், சப்தரிஷிமண்டலங்களின் ஒளி அலைகளுடன் கலந்து, உடல்பெறும் உணர்வுகள் கரைந்து, பெருவீடு பெருநிலை என்ற பிறவியில்லா நிலையான, அழியா ஒளி சரீரம் பெற அருள்வாய் ஈஸ்வரா...!

என்று அவரவர்களின் குலதெய்வங்களான மூதாதையர்களின் உயிரான்மாக்களை விண்செலுத்தி, சப்தரிஷி மண்டலங்களின் பேரொளியில் இணையச் செய்ய வேண்டும்.

மறுபடியும் சப்தரிஷி மண்டலங்களின் பேரருளை பேரொளியை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா என்று எண்ணி ஏங்கிவிட்டு தியானத்தை நிறைவு செய்ய வேண்டும்.



**‘‘ஓம் ஈஸ்வரா குருதேவா’’**

*கீழ்கண்ட வாசகங்களை இருவரில் ஒருவர் சொல்ல மற்றவர் ஏக்கத்துடன் பின் தொடர்ந்து சொல்ல வேண்டும்.*

1. *அகத்திய மாமகரிஷியின் அருட்சக்தியும், துருவ மகரிஷியின் அருட்சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும், பேரொளியும் எங்கள் குடும்பம் முழுவதும் படர்ந்து, எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் பொருள் கண்டுணர்ந்து செயல்படும் திறன் பெற்று, மகரிஷிகளின் அருள் சக்தியால் எங்கள் குழந்தைகள் கல்வியில் ஞானமும், கருத்தறிந்து செயல்படும் திறனும் உலக ஞானமும் பெற்று உலகைக் காக்கும் அருள் ஞானக் குழந்தைகளாக வாழ்ந்து வளர்திட அருள்வாய் ஈஸ்வரா...!*

2. *நாங்கள் எங்கள் வாழ்க்கையில் பார்ப்பவர்கள் அனைவரும், பழகியவர்கள் அனைவரும், அகத்திய மாமகரிஷியின் அருட்சக்தியையும், துருவ மகரிஷியின் அருள் சக்தியையும், துருவ நட்சத்திரத்தின் பேரருளையும், பேரொளியையும், சப்தரிஷி மண்டலங் களின் பேரருளையும், பேரொளியையும் பெற்று அவர்கள் அனைவரும் உடல்நலம், மனபலம் பெற்று மலரைப் போன்ற மனமும், மகிழ்ந்து வாழும் சக்தி பெற்று, மகரிஷிகளின் அருள் உணர்வுடன் வாழ்ந்து, அவர்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் செல்வச் செழிப் புடன் வாழ்ந்து வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா...!*

3. *அகத்திய மாமகரிஷியின் அருட்சக்தியும், துருவ மகரிஷியின் அருட்சக்தியும், துருவ நட்சத்திரத்தின்*

*பேரருளும், பேரொளியும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும், பேரொளியும் நாங்கள் தொழில் செய்யும் இடங்களில் படர்ந்து அவ்விடத்தில் மலரைப் போன்ற மணமும், மகிழ்ந்து வாழும் சக்தியும் படர்ந்து, எங்கள் தொழில் சிறப்பாக நடைபெற்று, தொழில் வளத்துடன் வாழ்ந்து வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா...!*

*4. அகத்திய மாமகரிஷியின் அருள்சக்தியையும், துருவ மகரிஷியின் அருட்சக்தியும், துருவ நட்சத்திரத்தின் பேரருளையும், பேரொளியையும், சப்தரிஷி மண்டலங் களின் பேரருளையும், பேரொளியையும் எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவரும் பெற்று அவர்கள் வாழ்க்கையில் செல்வ செழிப்புடன் வாழ்ந்து வளர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா...!*

**"ஓம் ஈஸ்வரா குருதேவா"**

## கணவன் மனைவி உறங்கச் செல்லுமுன்

கணவன் மனைவி எதிர் எதிர் அமர்ந்து கொண்டு, புருவ மத்தியில் உயிரை *'ஈஸ்வரா!'* என்று நினைத்து இரண்டு நிமிடம் ஏங்கிய வண்ணம் இருந்து, அடுத்து *'துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா!'* என்ற உணர்வுடன் இரண்டு நிமிடம் ஏங்கிவிட்டுக் கண்களை மூடி *'துருவ நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா!'* என்ற உணர்வுடன், உடல் முழுவதும் தியானித்துவிட்டுப் பின் கண்களைத் திறந்தவுடன், ஒருவர் நெற்றியை ஒருவர் பார்த்து *'துருவ*



நட்சத்திரத்தின் பேரருளை, பேரொளியை அவர் பெற வேண்டும்' என்ற உணர்வுடன் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு உறங்கச் செல்லவும். கணவன் வெளியூர் சென்றிருந்தாலும், மனைவி மேற்கூறியபடி தியானித்துவிட்டு, நினைக்க வேண்டும். கணவனும் மனைவியை இதைப்போன்றே நினைக்க வேண்டும். மனைவியின் உணர்வலைகள் கணவனைப் பாதுகாக்க உதவுகின்றன. கணவன் மனைவியை நினைக்கும்போது, கணவனின் உணர்வலைகள் மனைவியைப் பாதுகாக்க உதவுகின்றன. உதாரணமாக, நண்பர்களுக்குள் நட்பின் தன்மையால் ஒருவர் ஒருவரை நினைத்து 'நண்பன் உதவி செய்தான்' என்று எண்ணும்போது, வெகு தொலைவில் இருந்தாலும் விக்கல் ஏற்படுகிறதல்லவா! அதைப்போன்று கணவன் மனைவி இருவரும் தியானத்தில் ஆற்றல் பெற்றதனால், கணவன் வெகு தொலைவில் இருந்தாலும், மனைவி கணவனுக்கு 'துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் கிடைக்க வேண்டும்' என்று எண்ணும் பொழுது, கணவனுக்கு எந்த விதமான சிக்கலோ, எதிர்ப்போ ஏற்பட்டாலும், மனைவியின் எண்ண உணர்வுகள், கணவனைச் சிக்கல்களிலிருந்து காப்பாற்ற உதவுகிறது. இதைப்போன்றே கணவன் மனைவியை நினைக்கும்போது, மனைவிக்கும் பாதுகாப்பு கிடைக்கின்றது.

## குழந்தைகள் மீது கோபம் வரும்பொழுது

குழந்தைகள் அடம்பிடித்து அழும்போதோ, அல்லது குறும்புத்தனம் செய்வதைப் பார்க்கும்பொழுதோ, கோபம் வந்து, சாபம் இடுவதைப் போன்று, திட்டுவதனால், குழந்தைகள் குணம் கெடுவதோடு உடல்களிலும், பாதிப்பு

ஏற்படுகிறது. இவ்வாறு நம்மையறியாது சாபமிட்டாலும், உங்களை அறியாது உங்கள் உடலில் இச்சாப உணர்வுகள் சேர்ந்து கைகால் குடைச்சல், போன்ற நோய்கள் வரக் காரணமாகிறது. கோபித்த சிறிது நேரத்திலாவது, முன் கூறியபடி 'ஆத்மசுத்தி' செய்துகொண்டு, 'இனி அவர்கள் செய்வதெல்லாம் நல்லனவாக இருக்க வேண்டும்' என்று எண்ண வேண்டும். இவ்வாறு செய்வதால் உங்களை அறியாது சேர்ந்த தீய அலைகள் நீங்கி, குழந்தைகளுக்கு நல்ல வாக்கு கிடைக்கின்றது. அதனால் குழந்தைகளுடைய மனநிலை நன்கு வளர்ச்சி பெற உதவுகின்றது.

## கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு

கருவுற்றிருக்கும் பெண்கள் முன் குறிப்பிட்டவாறு 'ஆத்மசுத்தி' செய்து கொண்டு கண்களை மூடிக் கருவில் இருக்கும் குழந்தையை நினைத்துக் 'குழந்தையின் உணர்வில் துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் பெற வேண்டும் ஈஸ்வரா!' என்று சிறிது நேரம் நினைக்க வேண்டும். இவ்வாறு நாளொன்றுக்கு மூன்று முறையாவது நினைக்க வேண்டும். இரவில் படுக்கைக்குச் செல்லுமுன், கண்டிப்பாக இம்முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் குழந்தை ஞானக் குழந்தை யாகப் பிறக்கும். எதிர்காலத்தில் சொல்வாக்கும், செல்வாக்கும் உள்ளவர்களாக ஆவார்கள்.

## கைக் குழந்தைகளுக்கு

குழந்தைகளுக்குப் பால் அல்லது ஆகாரம் கொடுக்கும் பொழுது 'ஆத்மசுத்தி' செய்து கொண்டு துருவ மகரிஷி



களின் அருள் சக்தியை என் குழந்தை பெற வேண்டும் 'ஈஸ்வரா' என்று எண்ணி ஆகாரம் ஊட்டவும், சரியாக ஆகாரம் சாப்பிட மறுக்கும் குழந்தைகளை 'அதோ பார்! துருவ மகரிஷி!' என்று சொல்லி, வானத்தைப் பார்க்க வைத்துச் 'சாப்பிடு, ஞானி ஆவாய்!' என்று சொல்லி ஆகாரம் ஊட்டவும், இவ்வாறு சொல்வதால் குழந்தை களின் தோஷம் விலகி, நல்ல அறிவுள்ள குழந்தை களாக வளரும்.

## குழந்தைகளுக்கு தியானம் பழக்குதல்

கைக்குழந்தை முதல் ஐந்து வயதுக் குழந்தை வரை யில் உள்ள குழந்தைகளை, மேற்குறிப்பிட்டவாறு 'ஆத்ம சுத்தி' செய்துகொண்டு, மடியில் அமர்த்தியவாறு எதிரில் உள்ள கலசத்தையோ, தெய்வ படங்களையோ, குத்து விளக்கையோ, காண்பித்து, 'அதோ பார் துருவ மகரிஷி! அருள் கொடுப்பார்! ஞானம் கொடுப்பார்! பார் பார்!' என்று இரண்டு நிமிடங்களாவது சொல்லிச் சொல்லிப் பார்க்கச் சொல்லவும். தியானம் இருந்து வரும் தாய்மார் களுக்குச் சொல்லின் ஒலியில் ஆற்றல் இருப்பதால், திரும்பத் திரும்பச் சொல்வதனால், சொல்லின் ஒலி குழந்தைகளின் உணர்வில் பதிவாகிறது. ஆகவே, தாயின் சொல்வாக்கு குழந்தைகளுக்குப் பலித்து 'வழியறிந்து செயல்படும் ஞானக் குழந்தைகளாக' வளரும். குழந்தை அழும் போதெல்லாம் இவ்வாறே காண்பித்துச் சொல்வதனால் உங்கள் சொல்லின் வாக்குப் பலிதமாகிக் குழந்தைகள் நல்லவர்களாக வளர்வார்கள்.

## விவரம் தெரிந்த குழந்தைகளுக்கு

குறும்புத்தனமோ, சொன்னபடி கேட்காமலோ மந்தமாக இருக்கும் குழந்தைகளை, நீங்கள் பார்க்கும் பொழுது அல்லது நினைக்கும்பொழுது, குழந்தைகள் மீது இருக்கும் பாசத்தால், குறும்புத்தனம் செய்யும் குழந்தைகள், வெளியில் சென்று சிறிது நேரம் தாமத மானாலும், அவன் நினைவு வரும்போது, உங்களை யறியாமல், பய உணர்வுகள் தோன்றி, எங்கு விழுந்து விட்டனோ என்ற எண்ணமோ இன்னும் காணவில்லையே என்ற எண்ணமோ தோன்றுவதும், இவ்வாறு தோன்றிய உணர்வலைகள் குழந்தையின் உணர்வை இயக்கி, அவ்வாறே நடந்துவிடுவதும் உண்டு. குழந்தைகளுக்குப் படிக்கும் ஆர்வம் இருந்தாலும் படித்ததை நினைவில் நிறுத்தும் அணுத்தன்மை பலஹீனமாய் இருப்பதுண்டு. இத்தகைய குழந்தைகள் படித்தது நினைவில் வராததனால் ஆசிரியர் ஏசுவார் என்ற பய உணர்வு தோன்றுவதும், வீட்டில் வந்து படிக்க எண்ணினால் சோர்வு அடைவதும், சில குழந்தைகள் நன்கு படிக்க வேண்டும் என்ற ஆர்வ மிருந்தாலும், தாய் தந்தை சங்கடத்துடன் மிரட்டிப் படிக்கச் சொல்வதனால், குழந்தைகளுக்குத் தாய் தந்தை மீது இனம் புரியாத வெறுப்பு ஏற்பட்டுச் சிந்தனையற்ற குழந்தைகளாகிவிடுகின்றன. வீட்டிலேயே தாய் இருப்பதால், குழந்தைகளைப் பார்க்கும்பொழுது நினைக்கும் பொழுது எல்லாம், வேதனை உணர்வுகள் உந்திக் கொண்டி ருப்பதுடன், அதனால் கைகால் குடைச்சலாகிச் சோர்வாவதும், இதனால் மனம் அமைதியற்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே, இத்தகைய நிலையைச் சீர்ப்படுத்த மாலை 6.00 மணி அல்லது 7.00 மணியளவில் கலசத்தின்



*முன் அல்லது தெய்வப் படத்தை வைத்துப் பால், தீர்த்தம் வைத்து தீபம் ஏற்றி வைத்து, மேற்குறிப்பிட்டவாறு 'ஆத்மசுத்தி' செய்து கொண்டு, குழந்தைகளை அழைத்துக் கலசத்திற்கு முன் அல்லது படத்திற்கு முன் அமரச் செய்து தீபத்தையோ, கலசத்தையோ பார்க்கச் சொல்லும்போது, 'துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் பெற வேண்டும்! என்ற ஆசையோடு தீபத்தைப் பார்த்து கொண்டேயிருங்கள். 'துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் கிடைக்கும்! நன்கு படிப்பு வரும்! நல்ல பிள்ளைகள் ஆவீர்கள்! நல்ல ஞாபக சக்தி வரும்!' என்று மூன்று தரம் சொல்லித் தீபத்தைப் பார்க்கும்படி செய்யுங்கள். இவ்வாறு ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் தியானித்துவிட்டு, 'ஓம் ஈஸ்வரா!' என்று எல்லோரும் சொல்லிவிட்டுப் பால் தீர்த்தம் கொடுக்கும் பொழுது ஞானம் பெற வேண்டும் என்று எண்ணிப் பால், தீர்த்தம் கொடுக்கவும் குழந்தைகள் 'அம்மா, அப்பா அருளாசியும், ஞானமும் பெறவேண்டும்' என்று எண்ணிப் பாதம் தொட்டு வணங்கிப் பிரசாதம் வாங்கச் செய்யவும்.*

*இவ்வாறு செய்து பாருங்கள். உங்கள் சொல்வாக்கால் உங்கள் குழந்தைகள் எவ்வளவு நல்ல பிள்ளைகளாக ஆகிறார்கள் என்று தெரியும். இவ்வாறு தியானமிருக்கு முன் இதைக் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டவும், இதைத் தினம் குழந்தைகளைப் படிக்கச் சொல்லுங்கள்.*

## குழந்தைகள் நலம் பெற

*குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் முன் அம்மா, அப்பாவின் பாதங்களைத் தொட்டு கல்வியில் தேர்ச்சி*

பெற அருளாசி வேண்டும்' என்று எண்ணி வணங்கி விட்டுப் பள்ளிக்குச் செல்லப் பழக்க வேண்டும்.

பள்ளிக்குச் சென்று இருக்கையிலமர்ந்தவுடன் 'ஆத்ம சுத்தி' செய்து கொள்ளவேண்டும். கையில் புத்தகத்தை எடுத்துப் படிக்குமுன் 'தாய் தந்தையின் அருளாசியால் நான் படிப்பது அனைத்தும் என் நினைவில் நிலைத்து நிற்க வேண்டும் ஈஸ்வரா!' என்று எண்ணி ஏங்கிவிட்டுப் படிக்க வேண்டும். அதனால் ஞாபக சக்தி வலுப்பெற உதவும்.

வீட்டிற்கு வந்ததும் வழக்கமாய்த் தியானமிருக்கு மிடத்தில் இரண்டு நிமிடம் அமர்ந்து 'ஆத்மசுத்தி' செய்து கொள்ளப் பழக்க வேண்டும். ஏன் என்றால் மற்றக் குழந்தைகள் குறும்புத்தனம் செய்துகொண்டுள்ளதை, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால், குறும்புத்தனமாக உணர்வுகள் இந்தக் குழந்தைகளின் உடலில் பதிவாகி, இவையும், குறும்புத்தனம் செய்யத் தொடங்கிவிடும். பள்ளியிலிருந்து வீட்டிற்கு வரும் பொழுது எதிர்பாராது பயந்திருக்கலாம். அல்லது பிறர் கண்பார்வை பட்டு இருக்கலாம். இதனால் படிப்பில் மந்தம், உடற் பிணி, வர ஏதுவாகும். ஆகையால், குழந்தைகளை 'ஆத்மசுத்தி' செய்து கொள்ளப் பழக்குவது மிகவும் அவசியமாகிறது.

## சமையல் செய்யும் பொழுது

சமையல் செய்யும் முன் 'ஆத்மசுத்தி' செய்து கொண்டு 'நான் செய்யும் இச்சமையல் நல்லவையாக அமைய வேண்டும். இதைச் சாப்பிடுபவர்கள் நலமும், வளமும், ஞானமும் பெற வேண்டும் ஈஸ்வரா' என்று எண்ணிச் சமையல் செய்வதால் நீங்கள் சமைக்கும் உணவுகள்



சுவையாக இருக்கும். இதைச் சாப்பிடுபவருக்கும் உடல் நலம் பெற உதவும்.

## உணவு பரிமாறும் பொழுது

உணவு பரிமாறுவதற்கு முன் 'ஆத்மசுத்தி' செய்து கொண்டு, 'இதைச் சாப்பிடும் அனைவரும் உடல் நலமாக இருக்க வேண்டும் ஈஸ்வரா' என்று எண்ணி உணவு பரிமாற வேண்டும். உங்கள் குடும்பத்தில் நீங்கள் எண்ணிய நல்ல உணர்வலைகளால் உடல்நலம் கிடைக்கும்.

## உறவினர்கள் கஷ்டங்களைச் சொல்லக் கேட்டபின்

உறவினர்கள், அவரவர்கள் கஷ்டங்களையும், நஷ்டங் களையும், வேதனையுடன் இருப்பதைச் சொல்லக் கேட்டுக் கொண்டு இருக்கும்பொழுது, அந்த வேதனையான உணர்வுகள், உங்கள் உணர்வுகளையும் வேதனைப்படச் செய்துவிடுகின்றன. இவ்வாறு பேசிக் கொண்டிருந்து விட்டு, அவர்கள் சென்ற பின்னும் உங்களுக்குள் அந்த வேதனையான எண்ணம் உந்திக் கொண்டேயிருப்பதனால், வேதனையான சுவாசமே சுவாசிப்பதோடன்றி, அன்றைய நாள் முழுவதும் மன அமைதியும் கெடுகின்றது. அச் சமயம் சுவாசிக்கும் வேதனையான உணர்வலைகள் இரத்தத்தில் சிறுகச் சிறுக கலந்துவிடுகின்றன. இதனால், வேதனை தரும் அணுக்கள் உங்கள் உடலில் உருவாகத் தொடங்கிவிடுகின்றன.

ஆகவே வேதனையான பேச்சுக்கள் பேசினாலும், கேட்டாலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பத்து நிமிடங்

களில் 'ஆத்மசுத்தி' செய்து கொண்டு 'அவர்கள் வாழ்க்கையில் நலமும் வளமும் பெற வேண்டும் ஈஸ்வரா' என்று எண்ண வேண்டும். இவ்வாறு எண்ணுவதால் உங்கள் இரத்தத்தில் வேதனையான உணர்வலைகள் கலக்காமல், தடுப்பதோடு, உங்கள் வாக்கால் உறவினர்கள் நலமும் வளமும் பெறவேண்டும் என்று எண்ணியதால், அவர்களும் நலம்பெற உதவி செய்தவராகிறீர்கள்.

## அன்பாய் எண்ணும்பொழுது

இன்றைய விஞ்ஞான உலகில் பல ஆயிரக்கணக்கான ஊர்களிலிருந்து ரேடியோக்களில் பல அலைவரிசையில் ஒலிபரப்பு செய்து காற்றுடன் கலக்கச் செய்கின்றனர். அதை நம் வீட்டில் உள்ள ரேடியோவில், அதாவது டெல்லி என்று வைத்துக் கொள்வோம்; அந்த அலைவரிசையில் உள்ள காந்தத்தில், ஈர்ப்பு காந்தத்தை இணைத்தவுடன் டெல்லி அலைவரிசையில் ஒலிபரப்பும் பாட்டுக்களையோ, பேச்சுக்களையோ நம் வீட்டு ரேடியோவில் கேட்கின்றோம் அல்லவா! அதைப்போன்று நம் உடலில் பற்பல குணங்களின் உணர்வலைகள் பதிந்து இருப்பதால், நம் அன்பான குணத்தின் உணர்வில், எண்ணத்தைச் செலுத்தியவுடன் நம் உடலில் பதிந்துள்ள ஈர்க்கும் காந்தத்தில் இணைந்து, காற்றில் கலந்துள்ள அன்பான குணத்தின் உணர்வலைகளை நம் உடல் ஈர்த்து சுவாசிக்கின்றது. நம் உடலின் ஜீவ அணுக்களை இயக்கும் உயிர், நம் நெற்றியில் புருவ மத்தியில் உட்புறமாக இருந்துகொண்டு, உடலை இயக்கும் மூலக்கருவாக, குருவாக உயிர் இருக்கும் நிலையில், உடலில் விளைந்த அனைத்துக் குணங்களின் உணர்வலைகளை உயிரின்



ஈர்ப்பில் அணைத்துக்கொண்டு, மறு உடல் உருபெறச் செய்யும் கருவினையாக சேர்த்துக் கொண்டிருக்கின்றது.

நம் அன்பான குணத்தின் உணர்வில் எண்ணத்தைச் செலுத்தியவுடன், நம் உடலில் பதிந்துள்ள, ஈர்க்கும் காந்தத்தில் இணைந்து, காற்றில் கலந்துள்ள அன்பான குணங்களின் உணர்வு அலைகளை நம் உடல் ஈர்த்து சுவாசிப்பதால் உயிரின் காந்தத்தில் படும்பொழுது, கனிவாகப் பேசவும், கனிவுக்குத் தக்க செயலைச் செய்விக்கின்றது. அச்சமயம், வாயில் உமிழ்நீர் கனிவாகச் சுரந்து, நாம் உட்கொண்டிருந்த ஆகாரத்தைக் கனிவான நிலையில் ஜீரணிப்பதால் ஆகாரத்தின் சத்து, கனிவான ரத்தமாக மாறுகின்றது. அன்பான குணங்களின் உணர்வு அலைகளின் நுண்ணணுக்களை சுவாசிப்பதால், இவை நம் உடல் முழுவதும் செல்லும் பொழுது கனிவான நுண்ணணுக்களை ரத்தம் வடித்துக்கொள்கின்றது. கனிவான மூச்சு வெளிப்படுகின்றது. உடலும் மனமும் மகிழ்கின்றது. அப்பொழுது செயலும் மகிழ்ச்சியுடையதாக அமைகின்றது.

இரத்தத்தில் கலந்துள்ள கனிவான ஆகாரத்தின் சத்தும், இரத்தத்தில் வடித்துக்கொண்ட கனிவான உணர்வு அலைகளின் நுண்ணணுக்களும், இந்த இரண்டும் உயிரின் இயக்கத்தால் தசைகளாக மாறும்பொழுது தசையும் உடலும் களிப்படைகின்றன.

## பிறர் கஷ்டங்களை காதால் கேட்கும்பொழுது

நீங்கள் நண்பர் ஒருவரிடம் அன்பு, பண்பு, பாசம், பரிவுடன் பழகி வருகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்.

நண்பரும், அவ்வாறு பழகி வருகிறார். ஆனால், நண்பருக்கு எதிர்பாராது, சந்தர்ப்ப வசத்தால், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு அதனால் குடும்பத்தில் பல சிக்கல்கள் உருப்பெற்று மனவேதனையுடன் உங்களிடம் சொல்லும் பொழுது, நண்பர்பால் உங்களுக்குள்ள பாசத்தால், நண்பர் வேதனையுடன் கஷ்டங்களைச் சொல்லுவதை நீங்கள் பரிவுடன் கேட்டுக் கொண்டிருக்கும்போது, உங்கள் உடலில் உள்ள ஈர்ப்பு காந்தத்தில் இணைந்து, காற்றில் கலந்துள்ள வேதனையான உணர்வு அலைகள் உங்கள் உடலால் ஈர்க்கப்பட்டு, நீங்கள் சுவாசிக்கும்பொழுது, உங்கள் பரிவான குணத்தின் உணர்வுகள் பலகீனமாகி, உடல் சோர்வடைவதும், மனம் வேதனைப்பட்டு சுவாசிக்கும்பொழுது சுரக்கும் உமிழ்நீர், நீங்கள் உட்கொண்ட ஆகாரத்தைக் கடினப்படுத்தி, குடல் உபாதைக்குக் காரணமாவதும், அச்சமயம் நீங்கள் சுவாசித்ததை வடித்துக்கொள்வதும், ஆகாரத்தின் சத்து இரத்தமாகி இவையிரண்டும் கலப்பதனால், இரத்தத்தில் மாற்றம் ஏற்படுவதும், இரவில் இரத்தம் தசைகளாக மாறும்பொழுது, தசைகளில் இனம் புரியாத வலிகள் உண்டாவதும் தூக்கமின்மையும் ஏற்படுகின்றன.

பகலில் வாழ்க்கையில், உதாரணமாக ஜவுளிக்கடை வைத்து நடத்துகிறோம் என்று வைத்துக்கொள்வோம். ஜவுளி வாங்குபவரிடம் ஜவுளிகளை எடுத்துக்கொடுத்து, காண்பித்து ஜவுளிகளின் விலையைச் சொல்லும்பொழுது, அதாவது பாலில் சர்க்கரை போடப்பட்டிருந்தாலும் அதில் சிறிது காரம் விழுந்து விட்டால், காரத்தின் தன்மையே முதலில் தெரிவது போன்று, நீங்கள் சாந்தமுடன் துணியின் விலையைச் சொன்னாலும், உங்கள் நண்பர் வேதனையுடன் சொன்ன உணர்வு



அலைகளை நீங்கள் சுவாசித்ததனால், உங்கள் நல்ல குணங்களின் உணர்வுடன் வேதனையான உணர்வுகள் சொல்லின் ஒலியில் கலந்து, துணியை வாங்குபவரின் உணர்வுகளில் உந்தப்பட்டு, கண்களால் துணியைப் பார்க்கும்போது, துணிகளின் மீது வெறுப்பாகி, துணி களை வாங்காமல் சென்று விடுகின்றனர். உங்கள் மனமோ மேலும் வேதனையான உணர்வலைகளைச் சுவாசிக்க நேருகிறது. இவ்வாறு அன்றைய வியாபாரத்தில் மந்தம் ஏற்படுகின்றது. இந்த நிலையில் வீட்டிற்குச் சென்று விவரம் அறியாத கைக்குழந்தையிடம் கவலையைப் போக்க கொஞ்சிப் பேசினாலோ, அந்தக் குழந்தைக்கு இனம்புரியாத உடல் உபாதைகள் ஏற்பட்டுச் சிறிது நேரத்தில் அழ ஆரம்பித்துவிடுகின்றது. நீங்கள் தவறு செய்யாமலே சந்தர்ப்பவசத்தால் நீங்களும் வேதனைப்பட நேர்கின்றது.

## கண்களால் துன்பங்களைப் பார்க்கும்பொழுது

நீங்கள் தர்ம சிந்தனையுடன் அன்பு, பரிவு, பாசம், ஞானம், தைரியம், சாந்தமாக வாழ எண்ணி உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தாலும், ஒருவர் மற்றொருவரைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும்போது, நீங்கள் அவரைப் பார்க்கும்பொழுது, உங்கள் கண்களின் புலனறிவால், கோபஉணர்வைக் கவர்ந்து, உடலில் உள்ள ஈர்ப்பு காந்தத்தில் இணைந்தவுடன், உடல் காற்றில் கலந்துள்ள கோப உணர்வலைகளை ஈர்ப்பதனால் உங்கள் சுவாசத்துடன் கலந்து, உயிரில் உராய்வதனால், ஆத்திர உணர்வின் எண்ணம் உங்களை அறியாமலேயே ஆத்திரத்துடன் பேசவோ, கேட்கவோ தூண்டுகின்றது.

அச்சமயம் உங்கள் உமிழ் நீரும் மாறுபட்டு நீங்கள் உட்கொண்ட ஆகாரத்துடன் கலப்பதால், குடலில் ஒருவித எரிச்சல் ஏற்படுகின்றது. அப்பொழுது எதைச் சாப்பிட்டாலும் சுவை குன்றியே இருக்கும். அதனால் ஆகாரம் குறைத்துச் சாப்பிட்டு உடல் சோர்வடையக் காரணமாகின்றது. உணர்வு அலைகளை இரத்தம் வடித்துக் கொள்வதனால், இரவில் உறங்கும்பொழுது இரத்தம் தசைகளாக மாறும் சமயம், உடல்களில் ஒருவித எரிச்சலும் தூக்கமின்மையும் ஏற்படக் காரணமாகின்றது.

உதாரணமாக நீங்கள் வயலைப் பக்குவப்படுத்தி நெல்லை விதைத்து, நெல்முளைத்து வருகிறது என்று வைத்துக்கொள்வோம். காற்றில் மிதந்து வந்த வேண்டாத வித்துக்கள் வயலில் வீழ்ந்து களைகளாக முளைத்து, நெல்லிற்கு இட்ட உரத்தைக் களைகள் எடுத்துக்கொண்டு, களைகள் பெருகுகின்றன. களைகளை நீக்கவில்லை என்றால் நெற்பயிர் வளர்ச்சி குன்றி, நெல்லின் தரம் குறைந்து விடுகின்றதைப்போன்று, நீங்கள் சுவாசித்த கோப குணங்களின் உணர்வலைகளின் நுண் அணுக்கள் உங்கள் இரத்தத்தில் பெருகி தசைகளாக மாறும் போது, தசைகளிலும் உடல் உறுப்புகளிலும் பெருகி, மேல்வலி, தலைவலி போன்ற உடல் உபாதைகள் ஏற்படுவதும், அதனால் உடல் சோர்ந்து, எச்செயலையும் சோர்வுடன் செய்யக் காரணமாகின்றன.

நீங்கள் உலக நிலைகளை அறிந்து கொள்ளும் வண்ணம் பத்திரிகைகளைப் பார்க்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். பத்திரிகை வாசகத்தில் ''இரவு 8.00 மணி யளவில் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது திடீர் என்று கொள்ளையர்கள் வீடு புகுந்து வீட்டில்

இருப்பவர்கள் அனைவரையும் அடித்துப் படுகாயப் படுத்திப் போட்டுவிட்டு, வீட்டில் உள்ள பொருள்களை எல்லாம் வாரிக்கொண்டு போய் விட்டார்கள்'' என்று படிக்கும்பொழுது உங்களை அறியாது பயம் கலந்த வேதனையான உணர்வு அலைகளைச் சுவாசிப்பதனால், அவை உங்கள் இரத்தத்தில் கலந்துவிடுகின்றன. அன்று இரவு நீங்கள் அமைதியாகப் படுத்திருந்தாலும், வேறு ஏதாவது புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாலும், எதிர்பாராது ஜன்னல் கதவின் ஓசை 'டப்' என்று உங்கள் செவிகளில் கேட்டவுடன், உங்களை அறியாது பய உணர்வு உந்தப்பட்டு, உடல் சிலிர்த்து, பய உணர்வு அலைகளைச் சுவாசித்து, மேலும் மேலும் பய உணர்வுகள் பெருகக் காரணமாகின்றன. இது போன்று அடிக்கடி நேர்ந்தால் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் மனத்தில் ஒருவித பயத்துடன் செயல்படும் நிலை ஏற்படுகின்றது.

நீங்கள் வேலையின் நிமித்தம் தெருவில் நடந்து செல்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். தெருவின் முனை அருகில் செல்லும் சமயம் ஒரு கார் திடீரென்று திரும்புகையில், உங்கள் மீது மோதும் நிலையை நீங்கள் பார்க்க நேர்ந்தால், கண்களின் புலனறிவு பயவுணர்வலை களைத் துரிதமாக ஈர்த்து, உங்கள் உடலில் உள்ள ஈர்ப்பு காந்தத்தில் பாய்ச்சுவதால், உங்கள் உடல் துரித நிலை யில் பயவுணர்வலைகளை அதீதமாக சுவாசிப்பதால் துரிதமாக இயங்கி, உடல் நடுக்கமாகி, உங்களைக் காக்கும் எண்ணம் துரிதமாக உருப்பெற்று, விபத்திலிருந்து உங்களைக் காத்துக் கொண்டாலும், அதீதமான பயத் துடிப்புடன் வாகனத்தில் ஓட்டுநரைப் பார்க்கும்பொழுது, ஆத்திரவுணர்வுகள் உந்தப்பட்டு ஆத்திரவுணர்வையும்

அச்சமயம் நீங்கள் சுவாசிக்க நேருவதால், பயத்துடிப்புடன் ஆத்திரவுணர்வலைகள் உயிரில் உராய்வதால், புலன் களின் பொறிகள் இயக்கப்பட்டு, ஆத்திரத்துடன் பேசுவதும், அதற்குரிய செயலையும் செய்விக்கின்றன.

நீங்கள் விபத்திலிருந்து தப்பியதைப் பார்த்தவர்கள் உங்களைப் பார்த்து, 'நீங்கள் செய்த தர்மத்தால் உங்களைத் தெய்வம் காப்பாற்றியது', என்று ஆறுதல் கூறுவார்கள். ஆனால், நீங்கள் சுவாசித்த அதீத பய ஆத்திர உணர் வலைகளின் நுண் அணுக்கள் இரத்தத்தில் கலந்து, தசை களாக மாறுகின்றன. வயலைப் பக்குவப்படுத்தி நெல்லை விதைத்து, பயிராக முளைத்து வரும் நிலையில், எங்கோ இருந்து காற்றில் கலந்து வந்த வித்துக்கள், வயலில் வீழ்ந்ததால், அதுவும் முளைத்துவிடுகின்றன. நீங்கள் எதிர்பாராது அதீத பயவுணர்வுடன் ஆத்திர உணர்வையும் சுவாசித்தால், இரத்தத்தில் கலந்து இரத்தம் தசைகளாக மாறுவதும், தசைகளில் பயவுணர்வின் அணுத்திசுக்களும், ஆத்திரவுணர்வின் அணுத்திசுக்களாக உருப்பெற்று, அதன் இயக்கத்தால் தசைகளில் அமிலங்கள் சுரந்து, இந்த அமிலங்கள் உடலை இயக்கும் நரம்புகளை ஈர்த்து, நரம்புகள் இயக்குவதால், நரம்புகளில் உள்ள அமிலங் களின் உணர்வுகளின் சத்தை எலும்பின் ஈர்ப்பு காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டு, எலும்பினுள் ஊனாக வடித்துக் கொள்கின்றன. (இந்த ஊனைத்தான் **ஊழ்வினை** என்று ஞானிகள் பெயர் வைத்தார்கள்)

எடுத்துக்காட்டாக, வேப்பமரத்தை எடுத்துக் கொள்வோம். வேம்பின் வித்து எத்தனை வகையான உணர்வின் சத்தில் வித்தானதோ, அது நிலத்தில் முளைத்து வரும்பொழுது அதன் உணர்வுகளின் சத்தில் கலந்துள்ள

ஈர்ப்பு காந்த சக்தியால் நிலத்தில் உள்ள நீரையும், காற்றில் மிதந்து வரும் தன் இனமாக உணர்வுகளின் சத்தை ஈர்த்துக் கொண்டு, ஈர்த்துக்கொண்ட வெப்பத்தினால் நீரில் கலந்துள்ள உணர்வின் சத்துகள் உறைந்துள்ளதால், வெப்பத்தின் இயக்கத்தினால் வேப்பமரமாக வளர்கின்றன.

அதைப்போன்று, அதீத பயகுணத்தின் உணர்வலை களின் சத்தையும் ஆத்திர குணத்தின் உணர்வலையின் சத்தையும், எலும்புக்குள் ஊனாக வடித்து வைத்திருப் பதனால், உயிரின் இயக்கத்தால், எலும்பின் காந்த ஈர்ப்பினால், உடல் காற்றில் பரவி இருக்கும் பய குணத்தின் உணர்வலைகளையும், ஆத்திர குணத்தின் உணர்வலைகளையும் ஈர்க்கின்றன.

வேப்பமரம் எவ்வாறு தன் உணர்வுகளின் கசப்பான சத்தை ஈர்த்து, தன்னை வளர்த்துக்கொண்டு, தான் வளர்த்துக்கொண்ட கசப்பான உணர்வுகளின் சத்தின் மணத்தை வெளிப்படுத்துகையில், அதை நீங்கள் நுகர்ந்தால், அதன் கசப்பான உணர்வலைகள் உங்கள் முகத்தைச் சுளிக்கச் செய்கின்றன.

அதைப்போன்றே உங்கள் உடல் ஈர்க்கும் பய குணத்தின் உணர்வுகளையும், ஆத்திர குணத்தின் உணர்வு களையும் நீங்கள் சுவாசிக்கும்பொழுது முகம் கடுகடுப்பு அடைகின்றது.

வேம்பின் இலைகளைச் சாப்பிட்டால் கசப்பின் உணர்வுகள் குடலில் இயங்கி, குமட்டல் ஏற்படும்பொழுது வாந்தி வந்துவிடும் என்ற பயம் கலந்த எண்ணம் தோன்று கிறது. இதைப்போன்று உங்கள் உடல் ஈர்க்கும் பய

குணத்தின் உணர்வலைகளையும் ஆத்திர குணத்தின் உணர்வலைகளையும், நீங்கள் சுவாசித்துக்கொண்டு இருப்பதனால் இரத்தம் வடித்துக் கொண்டதால் பய, ஆத்திர குணங்களின் உணர்வலைகள் இரத்தத்தில் நுண்ணணுக்களாக வளர்ச்சிபெற்று, இரத்தக்கொதிப்பு போன்ற வியாதிகள் வளரக் காரணமாவதும், அதனால், அதிர்ச்சியான பேச்சை காதில் கேட்டால் பயமான எண்ணம் தோன்றுவதும், அச்சமயத்தில் பயத்தினால் சிந்திக்கும் திறன் இழந்து கோபப்படுவதும் ஏதாவது பொருள் கீழே வீழ்ந்ததனால் ஏற்படும் ஓசையைக் காதில் கேட்டால், உங்களை அறியாது உடல் சிலிர்ப்பதும், அதனால் பயமான எண்ணம் தோன்றுகின்றது. இதைப் போன்று எச்செயலை நீங்கள் செய்ய முற்பட்டாலும் உங்களை அறியாது அவசர ஆத்திர உணர்வுடன் செயல் படத் தூண்டுகின்றது. ஆனால், சிறிது தடைப்பட்டாலோ, கோபமான எண்ணம் உருப்பெற்று விடுகின்றது. இரத்தம் தசைகளாக, உடல் உறுப்புகளாக மாறும்பொழுது, அதில் பய ஆத்திரகுணங்களின் அணுத்திசுக்களாக வளர்ச்சி பெற்று, தசைகளிலும் உடல் உறுப்புகளிலும், தசைவாதம், குடல்வாதம், பக்கவாதம் போன்ற உடல் உறுப்புகளில் வாதநோய்கள் வரக் காரணமாவதும் தசைகளில் உருவான அமிலங்கள், உடல் உறுப்புகளை இயக்கும் நரம்பினங்கள் ஈர்த்துக் கொள்வதும், அதனால் கீல்வாதம், மூட்டுவாதம், முடக்குவாதம் போன்ற நோய்கள் உருப்பெறக் காரணமாகின்றன.

உதாரணமாக ஒரு செடி நல்ல முறையில் வளர்ந்து, பூ பூத்து, பிஞ்சாகி, காய் காய்த்து, பழமாகி வித்தானால் அந்த வித்து மறுபடி முளைத்து நல்ல செடியாக வளர்கின்றது.



எதிர்பாராது செடியில் பூச்சிகள் வீழ்ந்து பூச்சிகள் செடியின் சத்தைப் புசித்து விடுவதனால் செடியின் சத்து குறைந்து, சரியாக பூ பூக்காமலும், பூ பூத்தாலும் அப் பூவில் விளைந்த வித்து சத்தற்று இருப்பதனால், அந்த வித்து தன் இனமான செடியாக முளைக்க முடியாமல், அந்த வித்தின் சத்து, மற்ற செடியின் உரமாகச் சேர்ந்து விடுகின்றது. அதைப்போன்று நல்ல குணங்களின் உணர்வு களைச் சுவாசித்து, உடல் உறுப்புகளில் விளைந்த உணர்வு களின் அணுக்கள், உடலை இயக்கும் உயிரின் ஈர்ப்புக்குச் சென்று, உயிரின் அணைப்பில் உயிராத்மா இயங்கி வருவதும், உடல் முதிர்ந்து உடலைவிட்டு பிரிந்த உயிராத்மா மறுபிறவியில் மனிதனாக உருப்பெறுகின்றது.

நல்ல குணங்களின் உணர்வுடன் சுவாசித்து, உடல் நலமுடன் வாழ்ந்து வந்தாலும் எதிர்பாராது பயகுணங் களின் உணர்வையோ, கோபகுணங்களின் உணர்வையோ, வேதனையான குணங்களின் உணர்வையோ ஆத்திரமான குணங்களின் உணர்வையோ, குரோதமான குணங்கள் உணர்வையோ, சோர்வான குணங்களின் உணர்வையோ, சந்தர்ப்பவசத்தால் சுவாசிக்க நேர்ந்தால், நல்ல குணங்கள் பலஹீனமாகி தசைகளிலும், உடல் உறுப்புகளிலும், நோய்கள் உருப்பெற்று அதில் விளைந்த நுண் அணுக்கள், உயிரின் ஈர்ப்பிற்குச் சென்று உயிரின் அணைப்பில் உயிராத்மாவாக இயங்குவதும் நலமான உடல் பலஹீனமாகி, உடல் நலிந்தும், உயிராத்மா வளர்ச்சி குன்றி, உடலை விட்டு, உயிராத்மா பிரிந்து செல்கின்றது. இவ்வாறு பிரிந்து சென்ற உயிராத்மா மறுபிறவியில் மனித உறுப்பெறும் தகுதியை இழக்கின்றது.

மேற்கூறியவாறு ஒவ்வொரு மனிதர்களின் உடல் களிலும் அவரவர்கள் நிலைக்கொப்ப சுவாசித்து வளர்த்துக் கொண்ட நல்ல குணங்களின் உணர்வுகளுடன் பேசும் பொழுது, நல்ல குணங்களின் ஒலி அலைகளாக, சொல்லில் வெளிப்பட்டுக் காற்றில் மிதந்து கொண்டிருக்கின்றன. இதைப் போன்றே, தீய குணங்களின் உணர்வுகளுடன் ஏசும்போதும், ஏச்சில் தீய உணர்வுகளின் ஒலியலைகளாக வெளிப்பட்டு, காற்றில் மிதந்து கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, உலகில் 400 கோடி மக்கள் வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதில் விஞ்ஞானிகள் சிலர் அதிநுட்ப அறிவின் உணர்வுகளின் ஆற்றல்களைத் தங்களின் ஏக்க உணர்வுகளால் சதா ஏங்கி, கண்களின், காதுகளின் புலனறிவுகளினால் அதிநுட்ப உணர்வுகளின் ஆற்றல்களை ஈர்த்து, தங்களின் உடல் களில் இணைத்துக்கொண்டு, தங்களுக்குள் வளர்த்துக் கொண்ட உணர்வலைகள் பேச்சில் ஒலி அலைகளாக வெளிப்பட்டு, காற்றில் மிதந்து கொண்டிருக்கின்றன.

விஞ்ஞானிகள் மக்களை நலமும் வளமும் பெறச் செய்து, பேரும் புகழும் பெற்று மகிழ்ந்து வாழ்ந்து வந்தாலும், விஞ்ஞானியின் வாழ்க்கையில் சந்தர்ப்ப வசத்தால், கண்களின், காதுகளின் புலனறிவுகளினால் கோபக் குணத்தின் உணர்வலைகளை சுவாசிக்க நேர்ந்தால், கோபக் குணங்களின் உணர்வலைகள் உடலில் விளைந்து, குரோத உணர்வாகப் பெருகி, (குறிப்பு : குரோத உணர்வு, என்பது சதா எதிரிகளை எண்ணச்செய்து கோப உணர்வு களை தூண்டிக்கொண்டேயிருக்கும் ஆற்றல்கள்) அது ஆத்திர உணர்வலையாக வீரியம்பெற்று, எதிரி நாட்டையோ அல்லது தன் எதிரிகளையோ அழித்துவிடும் நிலையின்



எண்ணம் உருப்பெறுகின்றது. ஆனால், தான் சுவாசித்த கோப உணர்வலைகள், குரோத உணர்வலைகளாக வளர்ச்சி பெறும் நிலையில், வாத நோய்கள், இரத்தக்கொதிப்பு, போன்ற நோய்கள் வீரியம் அடைந்து உடலை முடங்கச் செய்வது மட்டும் அல்லாது, சிந்தனைகளையும் முடங்கச் செய்துவிடுகின்றது.

நோய்களினால் உடலில் விளைந்த நுண் அணுக்கள் உயிரின் ஈர்ப்பிற்குச் சென்று, உயிரின் அணைப்பின் உயிராத்மாவாக நிலைப்பெற்று, உடலைவிட்டுப்பிரிந்த பின், உயிராத்மா மறுபிறவியில் மனித உருப்பெரும் நிலையை இழந்து புழுவாகவோ, பூச்சியாகவோ, மிருக மாகவோ, உருப்பெறும் நிலையை அடைந்து, காற்றில் மிதந்து கொண்டேயிருக்கிறது.

இவ்வாறே சாதாரண மனிதர்கள் முதல் விஞ்ஞானிகள் வரை, சுற்றுப்புற சூழ்நிலைகளுக்கொப்ப, சந்தர்ப்பவசத்தால் கண்களின், காதுகளின் புலனறிவால் ஈர்க்கப்பட்ட கோபம், குரோதம், ஆத்திரம், அதீத பயம் போன்ற குணங்களின் உணர்வலைகளைச் சுவாசித்து, உடல்களில் பதிந்து உருப் பெற்ற நோய்களைத்தான் விஞ்ஞானிகளால் போக்க முடியும்.

ஆனால், நோய்களினால் உடலில் விளைந்த நுண்ணணுக்கள் உயிரின் ஈர்ப்பிற்குச் சென்று, உயிரின் அணைப்பில் உயிராத்மாவாக இயங்கிக் கொண்டிருக்கும் உணர்வுகளின் அணுச்சிசுக்களை மாற்ற விஞ்ஞானிகளால் முடியாது.

விஞ்ஞான முன்னேற்றத்தினால் மனித உடல்களைப் பாதுகாக்க முடியுமே தவிர, அவர்களின் உடலை இயக்கும்

உயிராத்மாவை ஒளிநிலையாக மாற்றும் ஆற்றல் விஞ்ஞானிகளுக்கு இல்லை.

ஞானிகள், மகரிஷிகள் தங்கள் தபோவலிமைகளினாலும், தியானங்களினாலும், பேரண்டத்தில் பரவிக் கிடக்கும் பேராற்றல்களின் உணர்வலைகளின் உண்மை நிலையைக் கண்டறிந்து, புலன்களின் அறிவால், அந்தப் பேராற்றல்களின் உணர்வலைகளை, தங்களின் தப தியானங்களின் பேராற்றல்களால் தங்களின் புலன்களின் அறிவால், உடல்களில் சேர்த்து வளர்த்துக் கொண்டதனால், சந்தர்ப்ப சூழ்நிலைகளால், புலனறிவுகளினால் ஈர்த்த, தீய, கோப, குரோத, ஆத்திர குணங்கள் போன்ற உணர் வலைகளைச் சுவாசிக்க நேர்ந்தால், அவைகளை மாய்த்து, தங்களின் உடல்களில் பேராற்றல் மிக்க உணர்வலைகளை வளர்த்துக்கொண்டு, உயிராத்மாவை ஒளிநிலையாக மாற்றிக்கொண்டிருக்கும் நிலையில், தங்கள் சொல்லாலும் செயலாலும், வெளிப்படுத்திக் கொண்டிருந்த பேராற்றல்கள் ஒலியலைகளாகக் காற்றில் பரவிக் கொண்டிருப்பதும், மேலும் தங்கள் உயிராத்மாவை ஒளியாய் மாற்றிக்கொண்டு, உடலைவிட்டு விண்ணைச் சென்றடைந்து, சப்தரிஷி மண்டலங்களாகத் திகழ்ந்து கொண்டும், இயங்கிக் கொண்டும் இருக்கின்றார்கள். அதிலிருந்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் ஒளி, ஒலியின் ஆற்றல் மிக்க உணர் வலைகள் பரவெளியில் பரவிக்கொண்டே இருக்கின்றன.

மேற்கூறிய நிலைகளை எம் குருநாதர் காட்சியாகவும், உணர்ச்சி பூர்வமாகவும், உணர்த்தி உபதேசித்து அருளியதை யாம் உங்களுக்கு உபதேசிக்கின்றோம்.



மெய்ஞ்ஞானிகள், மகரிஷிகள் உபதேசித்து அருளிய ஒலியான உணர்வலைகளையும், சப்தரிஷி மண்டலங்களிலிருந்து வெளிப்பட்டு, பரவெளியில் பரவி இருக்கும் ஒலி, ஒளியான ஆற்றல் மிக்க உணர்வலைகளைப் பெற, எமக்கு எம் குருநாதர் உபதேசித்து உணர்த்திய 'சூரியனில் இருந்து வெளிப்படும் காந்தச் சக்தியைத் தியானத்தால் தனக்குள் பெற்று, அதன் துணைகொண்டு, ஞானிகள் மகரிஷிகள் வெளிப்படுத்திய ஆற்றல் மிக்க ஒலியலையான உணர்வலைகளையும், சப்தரிஷி மண்டலங்கள் வெளிப்படுத்தி, பரவெளியில் பரவி இருக்கும் ஒலி, ஒளியான ஆற்றல்மிக்க உணர்வலைகளைப் பெறவும், எமது வாழ்க்கையில் எம்மையறியாது, எம் புலனறிவால் ஈர்க்கப்பட்டு, யாம் சுவாசித்து, தீய, கோப, குரோத, ஆத்திரமான குணங்களின் உணர்வலைகளை மாய்க்க 'ஆத்மசுத்தி' செய்துகொள்ளும் வழிமுறைகளை, எமக்கு எம் குருநாதர் உபதேசித்து அருளியதை, யாம் நீங்களும் பெற வேண்டும் என்ற ஆசையினால், 'ஆத்மசுத்தி' செய்து தீய, கோப, குரோத, ஆத்திரமான உணர்வலைகளை மாய்த்து, நீங்களும் நலமும், வளமும் பெற்று, உங்கள் உயிராத்மா ஒளிநிலைபெற எம் குருநாதரைப் பிரார்த்திக்கின்றோம்.

## வெளியே செல்லும்பொழுது

*''ஆத்மசுத்தி'' செய்துகொண்டு, ''என் சொல்லும் செயலும் புனிதம் பெற அருள்வாய் ஈஸ்வரா!, என் பேச்சும் மூச்சும் உலக மக்கள் நலம்பெற அருள்வாய் ஈஸ்வரா!'', ''எனக்கு நல்ல மனதும் என்னைப் பார்ப்பவர்களுக்கு நல்ல மனதும் என் வழி நல்வழியாகவும், நான்*

உன்னை மறவா நிலை பெறவும் அருள்வாய் ஈஸ்வரா!'' என்று எண்ணிவிட்டு வெளியில் செல்லவும்.

## வேலை பார்க்கும் இடங்களில்

அலுவலகங்களில் வேலை ஆரம்பிக்கும் முன்பு ''ஆத்மசுத்தி'' செய்து கொண்டு ''என் சொல்லும் செயலும் புனிதம் பெற வேண்டும், என் பேச்சும் மூச்சும் உலக மக்கள் அமைதி பெற உதவ வேண்டும். என் செயல் எல்லோருக்கும் நன்மை பயக்க வேண்டும் ஈஸ்வரா!'' என்று தியானித்துவிட்டு வேலையை ஆரம்பிக்கவும்.

## வியாபாரம் செய்பவர்களுக்கு

வியாபாரம் ஆரம்பிக்கும் முன்பு ''ஆத்மசுத்தி'' செய்து கொண்டு ''என் சொல்லும் செயலும் புனிதம் பெற வேண்டும். என் பேச்சும் மூச்சும் உலக மக்கள் அமைதி பெற உதவவேண்டும். என்னிடம் பொருள் வாங்கிச் செல்வோர் நலமும் வளமும் பெறவேண்டும் ஈஸ்வரா!'' என்று எண்ணி வியாபாரத்திற்கு வைத்திருக்கும் பொருள் களைப் பார்க்க வேண்டும்.

## பத்திரிகை படிக்கும்பொழுது

பத்திரிகைகளை படிக்கும்பொழுது நம்மை அறியாமல் பல சங்கடமான உணர்வலைகள் நம்மை அடைகின்றன. ஆகவே நாம் பத்திரிகைகளைப் படித்த பின் ''ஆத்மசுத்தி'' செய்து கொண்டு, ''நாளை நடப்பவை அனைத்தும் நல்லவையாக நடக்கவேண்டும் ஈஸ்வரா!'' என்று எண்ண வேண்டும்.



## உறவினர்கள், நண்பர்கள் இல்லங்களுக்குச் செல்லும்பொழுது

உறவினர்கள், நண்பர்கள் இல்லங்களுக்குச் செல்லும் பொழுது “ஆத்மசுத்தி” செய்துகொண்டு “துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் இக்குடும்பத்தில் உள்ள அனைவரும் பெற்று நலமும் வளமும் பெற வேண்டும் ஈஸ்வரா!’’ என்று எண்ண வேண்டும்.

## திருமணங்களுக்குச் செல்லும்பொழுது

திருமணம் நிகழுமிடத்திற்குச் செல்கையில் ‘‘ஆத்ம சுத்தி’’ செய்துகொண்டு துருவநட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் மணமக்கள் பெற்று அவர்கள் வாழ்வில் நலமும் வளமும் பெறவேண்டும் என்று எண்ணி அவர்களை வாழ்த்தவேண்டும்.

## வயலில் விதையிடும்பொழுது

வயலில் விதையிடும்பொழுது ‘‘ஆத்மசுத்தி’’ செய்து கொண்டு இவ்விதைகள் நன்றாக விளையவேண்டும் ‘‘ஈஸ்வரா! இதை உண்பவர்கள் ஆரோக்கியமான நிலையைப் பெறவேண்டும் ஈஸ்வரா!’’ என்று எண்ணி விதையிட வேண்டும்.

வயலில் உரமிடும்போது ‘‘ஆத்மசுத்தி’’ செய்து கொண்டு உரமிடவேண்டும். பயிர் நன்கு வளர, வயலுக்குச் செல்லும்போதெல்லாம் ஆத்மசுத்தி செய்துவிட்டு வயலிலுள்ள பயிர்களைப் பார்த்து ‘‘பயிர் நன்கு தழைத்து

வளரவேண்டும் ஈஸ்வரா'' என்ற உணர்வுடன் பயிர்களைப் பார்க்க வேண்டும்.

## நோயாளிகளைச் சந்திக்கும்பொழுது

நோயாளிகளைச் சந்திக்கும்போது ‘‘ஓம் ஈஸ்வரா குருதேவா!'' என்று எண்ணி ‘‘ஆத்மசுத்தி'' செய்துகொண்டு ‘‘நீங்கள் நலம் பெறுவீர்களாக! உங்களுக்கு எந்தக் குறையும் வராது!'' என்று கூறி அவர்கள் நலம் பெற வாழ்த்த வேண்டும்.

## சங்கடமான உணர்வலைகளைப் போக்க

சந்தர்ப்ப வசத்தால் நம்மையோ அல்லது பிறரையோ யாரும் திட்டுவதைக் கேட்க நேரிடும்பொழுது, அடுத்த கணம் ‘‘ஆத்மசுத்தி'' செய்துகொண்டு ‘‘இனி அவர் பேசுபவை எல்லாம் நல்லவையாகப் பேச வேண்டும் ஈஸ்வரா!'' என்று எண்ண வேண்டும்.

## விபத்துக்களையோ எதிர்பாராத நிலைகளையோ பார்க்கும்பொழுது

விபத்துகளையோ அல்லது எதிர்பாராத நிலைகளையோ பார்க்க நேரிட்டால், உடனே ஆத்மசுத்தி செய்துவிட்டு பின் ‘‘பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்லது நடக்க வேண்டும் ஈஸ்வரா!'' என்று எண்ணிவிட்டு, ஐந்து நிமிடங்களோ, அல்லது அதற்கு உட்பட்ட நேரத்திற்குள்ளோ ‘‘ஆத்மசுத்தி'' செய்துகொள்ள வேண்டும். (இவ்வாறு செய்ய வேண்டியது மிக மிக அவசியம்)



## துக்கமான நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்பொழுது

*துக்கம் (இறப்பு) ஏற்பட்ட வீட்டிற்குச் செல்லும்போது "ஆத்மசுத்தி" செய்துகொண்டு "சப்தரிஷி மண்டலங்களின் பேரொளியில் உடலை விட்டுப் பிரிந்துச் சென்ற உயிர் ஆத்மா கலக்க வேண்டும் ஈஸ்வரா!" என்று எண்ண வேண்டும்.*

## குல தெய்வங்களை வணங்கும் முறை

*தாய் தந்தை உங்களை ஈன்று வளர்க்கப் பல இன்னலும், பல தொல்லைகளும் பட்டு, வளர்த்து ஆளாக்கி வாழ வழி வகுத்து வசதிகள் பல செய்து கொடுத்தும், நல்வழி நடத்தி, நல்வழிப் படுத்த பல ஆசையுடன் உங்களை வளர்த்து வந்த தாய், தந்தை மற்றும் காலத்தால் உடலை விட்டுப் பிரிந்த நம் முன்னோர்கள் தெய்வமாக வணங்கும் முறைகளே கடந்த கால ஞானி களினால் ஏற்படுத்தப்பட்ட குலதெய்வங்களை வணங்கும் முறைகள் ஆகும்.*

*தாய் தந்தை அணிந்திருந்த ஆடைகளையும், அவர்கள் முக்கியமாக உபயோகித்த பொருள்களையும் வைத்து, அவர்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து, தாய் தந்தை உங்களை நல்வழி நடத்த ஆசை யுடன் இருந்த நல் உணர்வுகளின் எண்ணங்களைத் தெய்வமாக எண்ணி, உங்கள் குடும்பத்தார் அனைவரும் அந்தத் தெய்வக் குணங்களைக் கடைபிடிக்க அருள வேண்டும் என்று எண்ணி, தாய் தந்தையின் உயிராத்மா சொர்க்கம் அடைய வேண்டும் என்று பிரார்த்தித்து*

வந்தனர். பிற்காலத்தில் அதையே குல தெய்வங்களாக மருகி வழிபடலாயினர்.

தினம் தியானமுறைப்படி, தியானம் செய்து வருபவர்கள் தாய், தந்தை அருளாசி பெறுகின்றனர். எதிர்பாராது ஏற்படும் வேதனை, பயவுணர்வலைகள் உடலில் சேரா வண்ணம் ஆத்மசுத்தியும் செய்து கொள்கின்றனர்.

வாரத்தில் ஒருநாள் குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து கூட்டுத்தியானம் இருந்து தாய், தந்தை பிரசாதம் கொடுக்கும் பொழுது, தாய், தந்தையின் பார்வைபட்டு குழந்தைகளின் பீடை, பிணி நீங்க உதவுகின்றது. தியானம் இருக்கும் போதெல்லாம் சப்தரிஷி மண்டலங்களையும், மகரிஷிகளையும் எண்ணி மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்ற உணர்வுடன் இருப்பதால் மகரிஷிகள் அருள் சக்தி அலைகள் சிறுகச் சிறுக உடலில் சேர்ந்து, நல்ல உணர்வுகள் வலுப்பெறுகின்றன.

ஆகவே, குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஆற்றல் இருப்பதால், வாரத்தில் ஒரு நாள் தியானம் இருந்து, கடைசியில் வீட்டின் தலைவனாவது அல்லது தலைவி யாவது ‘நம் குல தெய்வங்களான மூதாதையர்களின் உயிராத்மா சப்தரிஷி மண்டலங்களின் பேரொளியில் கலக்க வேண்டும் ஈஸ்வரா’ என்று சொல்ல வேண்டும். மற்றவர்களும் அவ்வாறே சொல்லவேண்டும். இவ்வாறு குடும்பத்தில் உள்ள அனைவரும் சொல்வதனால் மூதாதையர்களின் உயிராத்மா விண்ணை அடைந்து, சப்தரிஷி மண்டலங்களின் பேரொளியில் கலக்கின்றது. இதுவே, தாய் தந்தைக்கும், மூதாதையர்களுக்கும் நீங்கள் செய்யும் தலையாய கடமையாகும் என்று அறிந்து கொள்க.



# கோயிலுக்குச் சென்று வழிபடும் முறைகள்

எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் விநாயகர் கோயிலுக்கு முதலில் சென்று விநாயகரைப் பார்த்து ‘ஓம் ஈஸ்வரா’ என்று உயிரை நினைத்து, வானை நோக்கிப் பார்த்து ‘இவற்றையெல்லாம் அருளிய மகரிஷிகளின் அருளாசியை நான் பெறவேண்டும் ஈஸ்வரா’ என்று ஏங்கிய பின், கண்களை மூடி ‘துருவ மகரிஷிகளின் அருள் சக்தியை என் ஜீவான்மா பெற வேண்டும்’ என்ற உணர்வுடன் உடலை நினைத்து விட்டுக் கண்களைத் திறந்து தீபாராதனை காட்டும்பொழுது ‘வழியறிந்து செயல் படும் ஞானநிலை பெற அருள்வாய் ஈஸ்வரா’ என்று எண்ணி ஏங்கி விட்டு, அங்கு இருக்கும் மலரைப் பார்த்து ‘மலரின் நறுமணம் நான் பெற அருள்வாய் ஈஸ்வரா’ என்று எண்ணி ஏங்கிவிட்டு கனிகளைப் பார்த்து ‘இக்கனி களின் சுவை போன்று என் சொல்லும், செயலும் சுவை பெற அருள்வாய் ஈஸ்வரா’ என்று எண்ணி ஏங்கிவிட்டு ‘இங்கு வருபவர் அனைவரும் மகரிஷிகளின் அருளாசி பெற வேண்டும் ஈஸ்வரா’ ‘அவர்கள் வாழ்வில் நலமும் வளமும் பெற அருள்வாய் ஈஸ்வரா’ என்று எண்ணி ஏங்க வேண்டும்.

மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போகின்றீர் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் கோயிலில் ஸ்தல புராணங்களின்படி மீனாட்சி அம்மனை வழிபட்டு, வணங்கி வந்தால் சகல துன்பங்களையும் போக்கி எண்ணியதை எண்ணியவாறு சகல இன்பங்களையும் தருவாள். வேண்டிய வரம் தந்து, வேண்டிய அருள் தந்து நம்மை எல்லாம் நல்வழி நடத்திச் செல்வாள்.

நல்லதையே செய்வாள் என்று நல்ல உபதேசங்களை காவியமாக படைத்து, அதன் வழியில் பாமரனும் ஆத்ம ஞானம் பெற வல்லதாக ஆலயங்களை அமைத்து, நற் குணங்களின் செயலை உணர்த்த உருவங்களை அமைத்து, நற்குணங்களின் மணத்தை உணர்த்த நறுமணம் உள்ள மலர்களைச் சாத்தி, சொல்லில் சுவையைக் காணக் கனி களை வைத்து இவையனைத்தும் இருட்டில் மறைத்து கற்பூர தீபம் காட்டி, இருளைப்போக்கி, அங்குப் பார்க்கும் போது புலனறிவால் நல்ல உணர்வுகளை நுகரச் செய்து, பாமரனும் ஆத்மஞானம் பெறும் வழியை மகரிஷிகளும், ஞானிகளும், சித்தர்களும் உணர்த்திச் சென்றார்கள்.

ஆகவே, தியானம் இருந்துவரும் அனைவரும் கோயிலுக்குச் செல்லும்பொழுது முதலில் விநாயகர் ஆலயத்திற்குச் சென்று முதலில் குறிபிட்டவாறு தியானித்து விட்டு அடுத்து அம்மன் ஆலயத்திற்கு செல்லும்பொழுது கோபுரவாயில்முன் வந்தவுடன், கோபுரத்தை பார்த்து 'என்னில் உயர்வான எண்ணம் பெற வேணடும்' என்று எண்ணி, இதே உணர்வுடன், யாருடனும் பேசாமல் பிரகாரத்தைச் சுற்றி வலம் வந்து, சன்னதிக்கு முன் அமைந்திருக்கும் கொடிக்கம்பம் அல்லது தூப ஸ்தூபி இருக்கும் இடத்தில் ஒரு நிமிடம் நின்று சன்னதியை நேராகப் பார்க்கவேண்டும். அப்பொழுது 'இந்தத் தெய்வ குணத்தை நான் பெற வேண்டும் ஈஸ்வரா!' என்ற ஏக்க உணர்வுடன், உங்கள் உயிரை நினைத்து வானை நோக்கிப் பார்க்க வேண்டும். வானை நோக்கிப் பார்க்கும்பொழுது 'இந்த தெய்வக் குணத்தை அருளிய துருவ மகரிஷிகளின் அருள் சக்தியை நான் பெற அருள்வாய் ஈஸ்வரா!' என்ற உணர்வுடன் ஏங்கியவாறே கண்களை மூடி 'துருவ



மகரிஷிகளின் அருள் சக்தியை நான் பெற அருள்வாய் ஈஸ்வரா' என்ற உணர்வுடன் உடல் முழுவதும் ஒரு நிமிடம் தியானித்து விட்டு, கண்களைத் திறந்து ஆலயத் திற்குள் செல்ல வேண்டும்.

பிரகாரம் வலம் வரும்பொழுது இந்தத் தெய்வ குணமாக என் சொல்லும் செயலும் இருக்க வேண்டும் என்ற உணர்வுடன் வலம் வந்து, மூலஸ்தானம் வந்தவுடன், இதே உணர்வுடன் மூலவரைப் பார்த்துக் கொண்டிருங்கள்.

கற்பூர தீப ஆராதனை காண்பிக்கும்பொழுது 'வழி யறிந்து செயல்படும் இந்த ஜோதி நிலைபெற வேண்டும் ஈஸ்வரா' என்ற உணர்வுடன் பாருங்கள். அப்போது மூலவருக்கு சாத்தப்பட்டுள்ள மலர் அலங்காரம் தெரியும் அச்சமயம் 'இந்த மலரின் நறுமணம் என்னில் பெற அருள்வாய் ஈஸ்வரா!' என்ற உணர்வுடன் ஏங்குங்கள். அங்கே படைத்துள்ள கனிகளில் தெரியும். 'இந்தக் கனியின் சுவையைப்போல என் சொல்லும் செயலும் சுவைபெற அருள்வாய் ஈஸ்வரா!' என்ற உணர்வுடன் ஏங்கி ஒரு நிமிடம் கண்களை மூடி 'என் ஜீவான்மா இந்தத் தெய்வநிலை பெறவேண்டும் ஈஸ்வரா!' என்ற உணர்வை உடல் முழுவதும் செலுத்திவிட்டு, கண் களைத் திறந்து 'இங்கு வருபவர்கள் அனைவரும் இந்தத் தெய்வநிலை பெறவேண்டும் ஈஸ்வரா!' என்ற உணர் வுடன் சொல்லிவிட்டுச் சன்னதியிலிருந்து வெளியில் வந்தபின் ஆலயத்தில் அமைதியான இடத்தைப் பார்த்து, ஓரமாக அமர்ந்து கொண்டு, மேற்குறிப்பிட்டவாறு, ஐந்து நிமிடம் கண்களை மூடித் தியானித்து விட்டுக் கண்களை திறந்து அந்த ஆலயத்திற்கு வரும் மனிதர்களின் உடல்

களை ஆலயமாக எண்ணி அந்த உடல்களை இயக்கி ஆண்டு கொண்டிருக்கும் உயிரைக் கடவுளாக எண்ணி, ‘இங்கு அருள் பெற வரும் உயிராத்மாக்கள் அனைவரும் நலமும், வளமும், துருவ மகரிஷிகளின் அருள் சக்தியும் பெற வேண்டும் ஈஸ்வரா!’ என்ற உணர்வை ஆலயங் களில் படரச் செய்யுங்கள்.

இந்த முறைப்படி ஆலயங்களுக்குச் சென்று வழிப் பட்டுத் தியானிப்பதால் ஞானிகள் மகரிஷிகள் உபதேசித்த அருள்சக்தி அலைகள் உங்கள் ஆத்மாவில் சேர்கின்றன. அதனால், உங்கள் ஆத்மா தெய்வநிலை பெறுகின்றது. நீங்கள் ஆலயத்தில் பத்து நிமிடம் தியானத்தில் அமர்ந்து ‘ஆலயத்திற்கு வரும் அனைவரும் வாழ்க்கையில் நலமும், வளமும் பெறவேண்டும் ஈஸ்வரா!’ என்ற உணர்வுடன் படரச் செய்த மூச்சலைகளால் நீங்கள் ஆலயத்திற்கு வரும் அனைவருக்கும் வாழ்வில் நலமும் வளமும் பெற உதவி செய்தவர்களாவீர்கள்.

வாழ்க்கையில் நல்லதையே செய்து கொண்டு எவருக்கும் தீங்கு செய்யாமல் இருந்தாலும், சந்தர்ப்ப வசத்தாலும் எதிர்பாராது பயந்து விடுகிறோம். அச்சமயம் பய உணர்வலைகள் நம் உடலில் சேர்ந்துவிடுகின்றன. நண்பர் ஒருவர் நம்மைப் பார்க்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும் வேதனையுடன் சொல்கிறார். அதை கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அவர் வேதனையுடன் சொன்ன உணர் வலைகள் நம் உடலில் சேர்ந்து நம்மையும் வேதனைப் படச் செய்துவிடுகின்றன. இவ்வாறு நாம் தவறு செய்யா மலேயே, நம் வாழ்க்கையில் பல துன்பங்கள், பலவித



வேதனை உணர்வலைகள் நம்மை அறியாது சூழ்ந்து கொண்டு, மன அமைதி குலைந்து, துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களின் துன்ப உணர்வுகளைப் போக்கவே, ஞானிகள் அன்று ஆலயங்களை அமைக்க உதவினார்கள்.

ஆகவே, **ஆலயங்களுக்குச் சென்று துன்பங்களையும் வேதனைகளையும் சொல்லி முறையிடாதீர்கள்.** உங்களை அறியாது முறையிடுவதனால், **இந்தத் துன்ப உணர்வலைகள் அங்கு வரும் அனைவருக்கும் துன்பத்தைக் கொடுத்து விடும்.** ஆகவே, ஆலயங்களுக்கு வரும் பக்தர்களின் உடலைக் கோயிலாய் மதித்து, 'அவர்களின் உயிரைக் கடவுளாக எண்ணி' **'இந்த ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அனைவரும் இங்குள்ள தெய்வ குணங்களைப் பெற்று நலமுடனும் வளமுடனும் வாழ அருள்வாய் ஈஸ்வரா!'** என்று எண்ணி வேண்டிக் கொள்ளுங்கள்.

கோவிலிலிருந்து வீட்டிற்கு வந்து, வீட்டு முற்றத்தில் அமர்ந்து ஐந்து நிமிடம் தியானித்து விட்டு 'நம் குடும்பத்தில் அனைவரும் தெய்வக் குணம் பெற வேண்டும்! நம் வீட்டிற்கு வரும் அனைவரும் தெய்வக் குணம் பெற வேண்டும்! நம்மிடம் வியாபார நிமித்தம் வருபவர்கள் நலமும் வளமும் பெற வேண்டும்! நாம் தொழில் செய்யுமிடங்கள் செழித்தோங்க வேண்டும் ஈஸ்வரா!' என்று எண்ணிவிட்டு, கோயிலிலிருந்து கொண்டு வந்த திருநீறு, மலர்களை நீர் உள்ள சொம்பில் போட்டு, மேற்கூறிய உணர்வுடன், அந்நீரை வீட்டில் அனைத்து இடத்திலும் தெளித்து விடுங்கள். இவ்வாறு செய்வதால் வீட்டில் உள்ள தீய உணர்வலைகள் மறைந்து, நல்ல உணர்வலைகள் வீட்டில் படரும்.

**வீடு கோயிலாகிறது உங்கள் எண்ணம் தெய்வமாகின்றது. உங்கள் உயிர் கடவுளாகிறது.**

*மேற்கூறியவாறு தியானம் இருந்து வரும் அனைவரும் குடும்ப சகிதம் தியானம் இருந்து, துருவ மகரிஷிகளின் அருள் சக்தி பெற்று, ஆத்மசுத்தி செய்து கொண்டு, மனம் அமைதி பெற்று, எண்ணம், சொல், செயல் வலுப்பெற்று, சொல்வாக்கு, செல்வாக்கு பெற்று, உங்கள் சொல்லும் செயலும் புனிதம் பெற்று நீங்கள் செய்யும் தொழில் நலமும், வளமும் பெற்று உங்களிடம் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் அனைவரும் நலமும் வளமும் பெற்று, உங்கள் பேச்சும், மூச்சும் உலக மக்கள் நலம் பெற உதவட்டும்.*

*நீங்கள் தொழில் செய்யுமிடங்களில் உங்கள் சொல்லால், செயலால், அன்பும், பண்பும் மலரட்டும். ஆலயங்களில் உங்கள் பேச்சும் மூச்சும் ஆலயங்களுக்கு வருபவர்கள் புனிதம் பெற உதவட்டும். உங்கள் பேச்சும், மூச்சும் தெய்வ நிலை பெறட்டும்.*

**கணவன் மனைவி தியானத்தால் துருவ மகரிஷி களின் அருள் சக்தியைப் பெற்று உங்கள் ஆத்மா உயிருடன் ஒன்றி ஒளியாகி, பிறவா நிலையெனும் பெரும்பேறான வீட்டை அடைய எல்லாவற்றிலும் எல்லாமாய்க் கலந்துள்ள எமது குருநாதரைப் பிரார்த்திக்கிறேன்.**

*நலம் பெறுக! வளம் பெறுக!*

*துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியும் பெறுக.*



# விநாயகர் சதுர்த்தி - தத்துவ விளக்கம்

விநாயகர் சதுர்த்தி என்றால் அன்று ஞானிகள் காட்டிய அருள் வழியைப் பார்ப்போம். விண்ணிலே தோன்றிய உயிர் அணு நமது பூமிக்குள் ஈர்க்கப்பட்டு தாவர இன சத்தில் இருந்து வெளிப்படும் சத்தை இந்த உயிர் அணு தனக்குள் கவர்ந்து, தனக்குள் உடலாக அது அமைந்து, ஒரு புழுவாக உருபெறுகின்றது. அந்த புழுவாக உரு பெற்ற அந்த நாளை, அதை சிவமாக, சிவன் ராத்திரி யாகக் கொண்டாடப்படுகின்றது. காரணம் உயிரான ஒளி அலைகள் தாவர இனச் சத்தின் உணர்வை தனக்குள் சேர்த்து, இந்த உணர்வின் சத்தாலே, அந்த உயிரை சூழ்ந்து புழுவாக உடல் பெற்ற நாள்தான் சிவன்ராத்திரி. ஆக சக்தி சிவமாக உரு பெறுகின்றது என்று அந்த நன்னாளை கொண்டாடுகின்றார்கள்.

அந்த உயிர் அணு தனக்குள் சேர்த்துக் கொண்ட தன்மை கொண்டு, ஆரம்ப நிலையில் பரிணாம வளர்ச்சியில், ஒரு புழுவாகத் தோன்றுகின்றது. அது ஒரு செடியின் சத்தை, தான் சுவாசித்து, அந்த சத்திலிருந்து தனக்குள் சேர்த்துக் கொண்ட உணர்வின் சத்தால், உடல் பெற்ற பின், எந்த செடியின் சத்தால், இந்த புழு உண்டானதோ, அந்தத் தாவர இன சத்தான, இலையின் சத்தை தனக்குள் ஆகாரமாக எடுத்து அது புசிக்கின்றது.

ஆனால், அந்த செடியின் இலைகள் தீர்ந்த பின் அது தான் நுகர்ந்து, நுகர்ந்து அலைகின்றது. அதே இன இலையை தன் பசியாற்ற, தான் நுகர்ந்து அந்தச் செடி யின் இலையைத் தேடி, தன் பசியைப் போக்க நகர்ந்து,

நகர்ந்து செல்கின்றது. ஆக, வாசனையால், தான் அறிந்து செல்லும் இந்த சந்தர்ப்பத்தில், தான் நகர்ந்து செல்லும் பொழுது, உடலில் வேதனையும், அதே சமயம் பசியின் உந்தலால் இந்த உணர்வின் தூண்டுதலின் சந்தர்ப்பத் தினால் தன் பசியின் ஏக்கத்தால், தான் எந்தச் செடியின் நிலையைக் கொண்டு இந்த உடல் உருபெற்றதோ, அந்த சத்தின் வாசனையை நுகர்ந்து, அந்த திசையை நோக்கி ஏங்கி ஏங்கி பார்க்கின்றது.

ஏங்கி, ஏங்கி பார்த்தாலும் கண் இல்லை. அதனுடைய சந்தர்ப்பத்தில் அந்த வாசனை அந்த சுவாசத்தின் உணர்வு கொண்டு அதன் பக்கமே அது நுகர்ந்து, நுகர்ந்து பார்க்கின்றது. அது ஏங்கிச் செல்கின்றது. இப்பொழுது ஒரு மரம் தன் சத்தினைக் கொண்டு பூமியின் ஈர்ப்பில் இருக்கும் பொழுது, தனக்கு அருகிலே செல்லும், காற்றில் கலந்துள்ள தன் சத்தான நிலைகளை தான் கவர்ந்து, தனக்குள் சேர்த்து, மரங்கள் வளர்கின்றன. அதைப்போலத் தான் இந்த புழுவும், தன் மணத்தை ஏங்கி அந்த உணர்வின் ஏக்க சக்தியால் நகர்ந்து சென்று, அதே இன இலையை தேடிச் செல்கின்றது.

ஆக தேடிப்பார்க்க கண் இல்லை, அந்த வாசனை யால்தான் அறிய முடிகின்றது. தன் பசியின் ஏக்கத்தின் உணர்வுகள் உந்தும்பொழுது அது பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்தின் துடிப்புகள் அதிகமாகி அந்த ஏக்கத் திலேயே விண்ணை நோக்கி பார்க்கின்றது. அதனால் அந்த பார்த்த ஏக்கத்தின் உணர்வாலே சுவாசித்து, அந்த உணர்வுகள் அந்த கண் அற்ற புழுவின் உடலிலே சேர்க்கப்பட்டு வினையாக உடலில் விளைந்து, அதன்

உயிராத்மாவில் சேர்ந்த அந்த வினையின் தன்மை கண் அற்ற புழுவிலிருந்து உடலைவிட்டுப் பிரிந்து சென்ற உயிராத்மா, மறு பிறவியாக அடுத்து தாவர இன சத்தினை அது நுகர்ந்து அந்த வாசனைக்கு ஒப்ப, அது நகர்ந்து அதனின் சத்திலே உருபெற்ற புழு, கண் உள்ள புழுவாக உரு பெறுகின்றது.

ஆக, முன் சேர்த்துக்கொண்ட வினைகளுக்கு நாயகனாக, கண் உள்ள புழுவாக அது உரு பெறுகின்றது. அதனால் தான் அந்த உயிரின் தன்மை தனக்குள் சேர்த்துக் கொண்ட நிலைகளுக்கு ஒப்ப ‘விநாயகா’ என்று நாம் அறிந்து கொள்வதற்கு ஞானிகள் பெயரை வைத்தார்கள். அது சேர்த்துக்கொண்ட வினைகளுக்கு ஒப்ப கண்ணாக தோன்றினாலும் அதனின் ஆற்றலை நாம் அறிந்து கொள்வதற்காக கண்ணான புலன் அறிவின் செயலை நாம் உணர்ந்துகொள்வதற்கு அஷ்டமியிலே பிறந்தான் கண்ணன் என்று உபதேசிக்கின்றார்கள்.

அஷ்டமி என்கிறபொழுது எட்டு கோள்களின் சத்தின் தன்மை கொண்டுதான் மற்ற தாவர இனங்கள் விளைகின்றன. சூரியனின் காந்த அலையின் ஈர்ப்பின் தொடர்பால் மற்ற தாவர இனங்கள் வளர்ச்சி பெற்று வளர்கின்றன. ஆனால் எட்டு கோள்களின் சத்தின் தன்மைகள் பல அணுக்களாக பிரிக்கப்பட்டு, பல அணுக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, அது கலந்ததின் நிலைகளுக்கு ஒப்ப, அந்த தாவர இன செடிகளின் நிலைகள் உருபெறுகின்றன. ஆக, அந்த தாவர இன சத்தின் தன்மையை இந்த உயிர் அணு சுவாசித்து அது உடலாக்கப்படும்பொழுது, அந்த எட்டு கோள்களின்

சத்தின் கலவையின் நிலைதான், இந்த உடலின் அமைப்பு களுக்கு, தான் எண்ணிய இந்த பதிவின் தன்மையிலும், தான் நுகர்ந்து கொண்ட சூரியகாந்த சக்தியில் இணைந்து, அது கண்ணாக உருபெறும் சந்தர்ப்பத்தால் உருபெறுகின்றது.

உடலான சிவன் ராத்திரியான இந்த உணர்வின் தன்மையைத்தான், உடலுக்குள் எண்ணிய இந்த உணர்வின் சத்தை அது நினைவு கொள்ளும்பொழுது சந்தர்ப்பத்தைப் பெறுகின்றது. அந்த கண்ணுக்கு '**கண்ணா**' என்ற பெயரை வைத்து அதற்கு '**பரந்தாமா**' என்கிறார்கள். ஏன் என்றால் அந்த கண்ணனான கண் பரவிக்கிடக்கும் அனைத்தை யும் தமக்குள் தமதாகக் காட்டுகின்றது என்ற இந்த உண்மையை "**பரந்தாமா**" என்ற பெயரை வைக்கின்றார்கள்.

அஷ்டமியில் பிறந்தான் கண்ணன் என்று கீதை யிலே காட்டப்படுகிறது அல்லவா. கண்ணன் சாரதியாக செல்கின்றான். நமது கண் நமக்கு வழிகாட்டியாக ஒவ்வொன்றையும் நமக்கு உணர்த்துகின்றது. ஒருவன் தவறு செய்கின்றான் என்று நாம் பார்க்கப்படும்போது, அந்த தவறான உணர்வுகள் நமக்குள் ஈர்க்கப்பட்டு அறிந்து கொண்டாலும், அந்த உணர்வின் சத்துக்கள் நமது உடலுக்குள் வினையாக சேருகின்றன.

ஒருவன் தவறு செய்வதை நாம் உணரமுடிகின்றது. ஆனால் அந்த தவறான உணர்வின் சத்துக்கள் நமது உடலுக்குள் பதிந்து கலந்து விடுகின்றது. இந்த தவறான உணர்வுகள் தீய வினையாக சேர்ந்து இது நமது உடலிலே விளைகின்றது. இதைப்போன்று கண்ணின் பார்வையிலே தனக்குள் ஒவ்வொன்றாக சேர்ந்து தன்னை பாதுகாக்கும் சத்தான, தான் எண்ணிய நிலைகள், தனக்குள்



வினையாக சேர்ந்து தனக்குள், எந்த எந்த வினையாக தனக்குள் பாதுகாக்க எண்ணியதோ, அந்த உணர்வின் தன்மையை கண்ணால் பார்க்கச் செய்து, அதற்குத் தக்கவாறு தன் வாழ்க்கையில் தான் சுவாசித்த இந்த உணர்வின் சத்து கொண்டுதான் பரிணாம வளர்ச்சிகள் வளர்ந்து நாம் சேர்த்துக்கொண்ட வினைகளுக்கு ஒப்ப, நாயகனாக, இவ்வாறு பலகோடி சரீரங்களைப்பெற்று மனிதனாக உருவாக்க செய்திருக்கின்றது.

நமது உயிரில் சேர்த்துக்கொண்ட வினைகளுக்கு ஒப்பத்தான் நாயகனாக பரிணாம வளர்ச்சியில், அதற்குத் தக்கவாறு உடல்கள் அமைந்தது; நாம் புழுவிலிருந்து மனிதனாகத் தோன்றும் வரையிலும் பல வகையாக, சாதாரணமாக, புழுக்களாக இருந்தால் தாவர இன சத்துக்களை புசிக்கின்றது. இதைப்போன்று எத்தனையோ வகையான இலைகளை அது எதை, எதை புசிக்கின்றதோ அந்த சத்துக்கு ஒப்ப அதனின் நிறங்களும் குணங்களும் அமைந்து வருகின்றது.

எந்த, எந்த குணத்தின் தன்மை தனக்குள் ஒப்புக் கொண்டதோ, அந்த குணத்தை தன்னை தற்காத்துக் கொள்வதற்காக, அதைத் தனக்குள், தன்னை பாதுகாக்கும் உணர்வின் சத்துக்களை வினையாக சேர்த்து, அடுத்து தான் சேர்த்துக்கொண்ட வினைகளுக்கு ஒப்ப மறு சரீரம் பெறும் பொழுது, முதல் சரீரத்தில் எதை, எதை தான் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய உணர்வை சுவாசித்ததோ, அதற்கு தக்கவாறு அங்கங்கள் அதற்கு தோன்றி இப்படி எல்லாவற்றையும் பாதுகாக்கக் கூடிய எண்ணங்களின் சத்துக்கள் உருவாகி, உணர்வின் சத்துக்கு ஒப்ப இன்று

மனிதனாகப் பிறக்கச் செய்து இருக்கின்றது. நமது உயிரான **'ஆதிமூலம்'** என்ற இந்த உயிரான ஈசனின் செயல்.

இதை நாம் அறிந்துகொள்வதற்குத்தான் **'விநாயகர் சதுர்த்தி'** என்று பெயர். புழுவிலிருந்து மிருகமாக வரும் வரையிலும் இயற்கையில் விளைந்த பொருட்கள் அனைத்தையுமே அது புசித்து வந்து இருக்கின்றது. ஆனால் மனிதனான பின் நாம், இயற்கையில் விளைந்த பொருள் அனைத்தையும் வேகவைத்து உண்ணுகின்றோம். உதாரணமாக, ஒரு செடியில் இருக்கக்கூடிய காரலான ஒரு நிலையை நாம் வேகவைத்தபின் அந்த காரல்கள் மறைகின்றது. அதற்குள் பல சுவையான பொருட்களை இணைத்து சுவை உள்ளதாக சமைத்து உண்கின்றோம்.

இதைப்போன்று, பல பொருட்களின் நிலையை நாம் சுவையாக சமைத்து சாப்பிடும் அந்த ஆற்றல் பெறும் தகுதியின் நிலைதான் விநாயகர் சதுர்த்தி. மிருகநிலையில் இதுவரையிலும் இயற்கையில் விளைந்த தாவர இன உணர்வின் சத்தால் வளர்ந்து வந்தாலும், அதை நிறுத்தி விட்டு, அடுத்து நமக்கு என்று சமைக்கும் அந்த ஆற்றல் மிக்க சக்திபெற்ற மனிதனின் உடலுக்குள் சேர்த்துக் கொண்ட வினைகளுக்கு ஒப்ப, அந்த வினையின் சக்தியின் ஆற்றல்தான் நாம் செயலாக்கும் எண்ண உணர்வுகள், இந்த நிலையை உணர்த்துவதற்காகத்தான் நாம் எந்த வினையை சேர்க்க வேண்டும் என்ற நிலைக்கு விநாயகர் சதுர்த்தியை நமக்குக் காட்டினார்கள்.

விநாயகர் சதுர்த்தியன்று நாம் அனைவருமே மண்ணிலே விநாயகரைச் செய்து, அதற்கு கரும்பு, இனிப்பு,

கொழுக்கட்டை, கனி வகைகள் வைத்து நாம் பூஜித்து விட்டு நாம் அடுத்து மண்ணிலே செய்த அந்த விநாயகனை நீரிலே கரைத்து விடுகின்றோம். அதனின் உட்பொருள், இந்த மனித வாழ்க்கையில் கடந்தகால, ஒரு வருட காலத்தில், நாம் அறியாமலே, நல்லதை எண்ணிச் செய்தாலும் நம்மையறியாது, சலிப்பு, சஞ்சலம், சங்கடம், குரோதம், அவசரம், ஆத்திரம், வெறுப்பு, பயம் இதைப்போன்றே இந்த உணர்வுகள் நமக்கு வழிகாட்டியாக அமைந்து இருந்தாலும் அவை அனைத்தும் வேதனை கொடுக்கக்கூடிய செயலாகும். இவ்வாறு **நமக்குள் சேர்த்துக் கொண்ட தீய வினைகளை அகற்றி விட்டு நல்வினைகளை நமக்குள் சேர்க்கத் தூண்டும் நாளே விநாயகர் சதுர்த்தி.**

நம் வாழ்க்கையில் நம்மையறியாது சேர்ந்துள்ள வினைகளை நீக்குவதற்காக, இந்த சுவைமிக்க உணவு களை படைத்துவிட்டு இந்த உண்மையை உணர்த்திய மகரிஷிகளின் அருள் சக்தி நாம் பெற வேண்டும், என்று ஏங்கி நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் ஞானிகள் அருளிய அந்த அருள்வாக்கின்படி நம் வாழ்க்கையில் நாம் செயல்படுவது அனைத்தும், அது சுவைமிக்கதாக வேண்டும் என்ற அந்த எண்ணத்தை நமக்குள் சேர்த்துக் கொள்ளக்கூடிய அந்த நினைவான நாள்தான் விநாயகர் சதுர்த்தி. இயற்கையிலே நாம் தாவர இனங்களின் சத்தை புசிப்போமேயானால், அந்த தாவர இனச் சத்துக்கு ஒப்பதான் நம்முடைய எண்ண அலைகளும் அதனுடைய இயக்கங்களும் அதனுடைய நோக்கங்களும் செல்கின்றன.

நான் இன்று சுவையாக சமைத்து ஒவ்வொன்றையும் சேர்த்து, நமக்கு வேண்டிய நிலைகளுக்கு ஒப்ப சமைத்து

நாம், ரசித்து, சுவைத்து சாப்பிடும் இந்தச் செயலை செய்ய வைக்கும் வினைகளை நமக்குள் வளர்த்துக்கொண்ட இதைத்தான், நாம் மெய் ஒளி காணும் அந்த சதுர்த்தி, முந்தைய நிலைகளை நிறுத்திவிட்டு, இன்றைய நிலைகள், ஞானியின் அருள் வாக்கினை நாம் பெறக் கூடிய தகுதியினை, நமக்கு நினைவுபடுத்தும் நன்நாள் இது.

நாம் பாதையிலே செல்லும் பொழுது ஒருவன் தவறு செய்கின்றான். ஒருவனை ஒருவன் அடிக்கின்றான். உதைக்கச் சொல்பவனைப் பார்க்கும் பொழுது எரிச்சல் வருகின்றது, நமக்கு. அலறுபவனைப் பார்த்தவுடன் வேதனை வருகின்றது. இந்த இரண்டு உணர்வும் நமக்குள் அந்த உணர்ச்சியைத் தூண்டி நம் உயிரான ஈசனிடம் படும்பொழுது உயிரான ஈசனுக்கு எரிச்சல் ஏற்படுகின்றது. உணர்வின் அலைகள் நமது உடலுக்குள் புகுந்து எரிச்சல் ஊட்டும் செயலை நமக்குச் செய்விக்கின்றது. அந்த எரிச்சலான வினையின் தன்மைகள் நமக்குள் உடலான சிவத்துக்குள் ஐக்கியமாகின்றது.

அந்த எரிச்சலான வேதனையான நிலைகள் நமக்குள் வியாதியாக வினையான உருபெறுகின்றது. இந்த வினையை நீக்குவதற்கு, நாம் இன்று கொழுக்கட்டை செய்து வைத்து சுவையான அமுதை சேர்க்கின்றோம் அல்லவா? இதனை நினைவு படுத்துவதின் நோக்கங்கள் இத்தகைய வினைகளை நாம் தீர்ப்பதற்கு. ஒருவன் தவறு செய்தான் என்றால் அந்த தவறைக் கண்ணுற்ற பின் அந்த உணர்வின் சத்து நமது உடலுக்குள் சேரா வண்ணம் தடுப்பதற்கு, அன்பர்கள் அனைவருமே 'ஓம் ஈஸ்வரா' என்று எண்ணி 'மகரிஷிகளின் அருள் சக்தியை நாம் பெற

வேண்டும். இதை என் ஜீவான்மா பெறவேண்டும்' என்று அந்த ஞானிகளின் அருள்வாக்கான அந்த உணர்வின் தன்மையை சுவாசித்து 'இதை என் ஜீவான்மா பெற வேண்டும்' என்ற இந்த எண்ணத்தை நாம் செலுத்தி அந்த ஞானியின் ஒளி கொண்டு நமக்குள் அது சேர்க்கப்படும் பொழுது பிறர் நமக்கு எதிரில் செய்துகொண்ட அந்த எரிச்சலைத் தடுப்பதற்கும், அதை நீக்கிவிட்டு நல் வினைவின் தன்மையை நமக்குள் சேர்க்கின்றோம். அதை நினைவுபடுத்தும் நன்நாள்தான் விநாயகர் சதுர்த்தி.

இதைப் போன்று நாம் வீட்டில் பையன் நன்றாக படிக்க வேண்டும் என்று எண்ணுகின்றோம். பையன் படிக்கவில்லை என்றால் அவனைப் பார்த்தவுடன் நாம் வேதனைப்படுகின்றோம். சஞ்சலப்படுகின்றோம். கோபப்படு கின்றோம், காரணம் நாம் நினைக்கும் இந்த உணர்வின் தன்மைகள் நாம் எதை சுவாசிக்கின்றோமோ, எதை நினைக்கின்றோமோ, அந்த உணர்வுகள் நமக்குள் சுவாசிக்கச் செய்து நமக்குள் அந்த வேதனைகள் உருவாகின்றது. ஆனால், பையன் நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றோம். நல்லதை சிறிது நேரம் எண்ணிவிட்டு, எதிர்காலத்தை நினைத்து வேதனையான சுவாசத்தை நமக்குள் சேர்த்து, தீய வினையை சேர்த்துக் கொண்டு, இந்த தீய உணர்வை உருவாக்கும் எண்ணத்தைத் தான் நாம் பையன்மேல் பாய்ச்சுகின்றோம்.

இதை எல்லாம் மாற்றுவதற்குத்தான் தியான வழியில் காட்டிய ஆத்மசுத்தியினால் நாம் கலசத்திற்கு முன் நின்று குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்று நினைவுபடுத்தி 'ஓம் ஈஸ்வரா' என்று எண்ணி

'மகரிஷிகளின் அருள்சக்தி நான் பெற வேண்டும், என் ஜீவான்மா பெற வேண்டும்' என்று நினைத்துவிட்டு, 'நமது குழந்தைகளுக்கு மகரிஷிகளின் அருள் சக்தி கிடைக்க வேண்டும். அந்த ஆற்றலை அவன் பெற வேண்டும். அந்த வழியிலே அவன் ஞானியாக வேண்டும். கல்வியிலே திறன் பெறவேண்டும்' என்று நாம் எண்ணி அந்த வினையை சேர்த்து அந்த வினையின் உணர்வில் விளைந்த எண்ணத்தைக் குழந்தையின்பால் நாம் பாய்ச்ச வேண்டும். நமக்குள் ஒளிபெறும் சக்தியை நாம் வளர்த்துக்கொள்ள நினைவுபடுத்தும் நன்நாள்தான் விநாயகர் சதுர்த்தி.

மகரிஷிகளின் அருள்ஒளி ஒவ்வொரு நிமிடமும் உங்கள் உடலில் சேர்த்து, நம்மை அறியாது வந்த தீய வினைகள் அனைத்தும் விலகி, உங்கள் வாழ்க்கையில் தொழில் வளம், மனபலம், உடல் நலம் பெற்று மகரிஷி களின் அருள் ஒளி பெற்று வளர்ந்து, உங்கள் பேச்சும் மூச்சும், உலக மக்கள் நலம் பெற உதவ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

அதன் வழியில் உங்களுக்கு சகல நன்மைகளும் கிடைக்கும்.

எமது அருளாசியுடன்,

**வேணுகோபாலசாமி.**

விநாயகர் சதுர்த்தி தினத்தன்று
தபோவனத்தில் அருளியது.

நலம் பெறுக வளம் பெறுக.

துருவ நட்சத்திரத்தின் பேரருளைப் பேரொளியைப் பெறுக.




ஓம் ஈஸ்வரா குருதேவா

# ஞானகுருவும் தபோவனமும்

நம் ஞானகுரு அவர்கள் தமது குருநாதர் காட்டிய அருள் வழிப்படி, இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று வானவியல், புவியியல், உயிரியல் ஆகியவற்றின் உண்மை நிலைகளை, அறிந்து, உணர்ந்து, அதை அனைவரும் பெறவேண்டுமென்கிற அவாவினால், தியானத்தின் மூல மாகவும், உபதேசங்களின் வாயிலாகவும் உணர்த்தி வந்ததைப் போன்று, ஞானகுரு காட்டிய அருள்வழியில் சாமிஅம்மா தியானப் பயிற்சியும் அருளாசியும் வழங்கி வருகிறார்கள்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்கா, புஞ்சை புளியம்பட்டி நகருக்கு அருகில் வடுகபாளையம் என்ற ஊரில் தமது குருநாதரின் பெயரால் ''மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனத்தை'' உருவாக்கி அதில் ''மெய்ஞான தியான வளர்ப்பு திருச்சபை''யையும் ஏற்படுத்தி உள்ளதை, ஞானகுரு அவர்கள் ஒளிநிலை

அடைந்தபிறகு சாமிஅம்மா அவர்கள் வழிநடத்திச் செல்கிறார்கள்.

தபோவனத்தில் ''பௌர்ணமி தியானத்தில்'' நாம் விண்ணை நோக்கி, துருவ நட்சத்திரத்தைத் தியானிக்கும் போது, விண்ணிலே துருவ நட்சத்திரத்திலிருந்தும், சப்தரிஷி மண்டலங்களிலிருந்தும், பரவெளியிலிருந்தும் வெளிப்படும் அருள்ஞான சக்திகளை சாமிஅம்மா, நமது ஞானகுரு அவர்கள் காட்டிய வழி கொண்டு, நமக்குக் கிடைக்குமாறு உதவ முடிகின்றது. பௌர்ணமி நாளில் கூட்டுத் தியானத்தில் நமது குலதெய்வங்களான முன்னோர் களின் உடலைவிட்டுப் பிரிந்து சென்ற உயிரான்மாக் களையும், நம்முடன் வாழ்ந்து வளர்ந்து உடலை விட்டுப் பிரிந்து சென்ற நண்பர்கள், உற்றார், உறவினர்களது உயிரான்மாக்களையும் சப்தரிஷி மண்டலத்துடன் இணைத்து பிறவி இல்லா பெருநிலை பெறச் செய்வது சிறப்பு அம்சமாகும். அன்றைய தினம் தியானமிருக்கும் அன்பர்களுக்கு அபரிமிதமான சக்திகளை சாமி அம்மா அவர்கள் தியானத்தின் மூலம் பெற உதவுகிறார்கள். அதைப் பயன்படுத்தி விண்ணின்று கிடைக்கும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும், பேரொளியையும், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளையும், பேரொளியையும், நாம் அனைவரும் பெற பௌர்ணமி தியானம் ஒரு அரிய வாய்ப்பாகும். அதைப் பயன்படுத்தி, பல ஊர்களிலிருந்து தபோவன உறுப்பினர்களும் வெளியூர், வெளிமாநில அன்பர்களும், தபோவனத்தைச் சுற்றி அமைந்திருக்கும் கிராமங்களிலிருந்தும் அன்பர்கள் கலந்து கொண்டு சாமிஅம்மா அவர்களின் அருளாசி பெற்று வருகின்றனர்.



சாமிஅம்மாவை தபோவனத்தில் சந்தித்து தியானப் பயிற்சி, உபதேசம் பெறவும், விளக்கங்கள் கேட்டுப் பெற வரும் அன்பர்களுக்கு தங்கிச் செல்ல, தங்கும் அறைகளும், உணவு உண்ண, உணவு விடுதியும் அமைக்கப்பட்டு உள்ளது.

தபோவனம், புஞ்சை புளியம்பட்டியிலிருந்து சத்திய மங்கலம் போகும் பாதையில் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. உடனுக்குடன் பஸ் வசதியும் உள்ளது. எண் 6, 6A, N6 ஆகிய பேருந்துகள் தபோவன வழித் தடத்தில் ஓடுகின்றன. கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் பாதை வழியாகவும், ஈரோடு, அவிநாசி, புஞ்சை புளியம்பட்டி பாதை வழியாகவும் வடுகபாளையத்தை (தபோவனத்தை) அடையலாம்.

தபோவனத்திலிருந்து ‘‘உயிரே கடவுள்’’ என்ற மெய்ஞ்ஞான மாத இதழ் ஞானகுருவின் அருள்ஞான உபதேசங்களைத் தாங்கி வெளிவருகிறது. அதன் வருட சந்தா ரூ. 100/- ஆகவும், ஆயுட் கால சந்தா ரூ. 500/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் மெய்ஞான தியான வளர்ப்புத் திருச்சபை ஆயுட்கால அங்கத்தினராக ரூ. 1500/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள ஆயுட்கால உறுப்பினராகவும், உயிரே கடவுள் மாத இதழ் ஆயுட்கால உறுப்பினராகவும், ஆகும் அன்பர்களுக்கு அருள்ஞானச் சக்கரம், சாமிஅம்மா நேரடியாக அளித்து ஆசி வழங்குவார்கள்.

**நிர்வாகிகள்**

# தபோவன வெளியீடுகள்

## ''ஞானகுரு அருளியது''

1. உயிரே கடவுள்
2. முருகனும் போகனும்
3. விநாயக தத்துவம்
4. உணர்வுகளின் இயக்கங்கள்
5. உணர்வுகளின் பெருக்கமும் உயிரின் இயக்கமும்
6. வினை நீக்கும் விண்ணின் ஆற்றல்கள்
7. எண்ணத்தின் தோற்றமும் எண்ணத்தின் இயக்கமும்
8. மெய்ஞான உணர்வும் விஞ்ஞான உணர்வும்
9. பேரண்டமும் பெருவீடும்
10. மகா சிவன் ராத்திரி
11. அகத்தியர் அருளிய குரு வழி தியானம்
12. ஞான பொக்கிஷம் பாகம் - I
13. ஞான பொக்கிஷம் பாகம் - II
14. குரு வழியில் ஞானகுரு - I
15. குரு வழியில் ஞானகுரு - II
16. மனித உணர்வுகளால் வரும் நோய்கள் நீங்கும் வழி
17. கீதையின் சாரம்

18. ஆத்ம சுத்தி
19. ஆத்ம ஜோதி
20. நாராயணனின் அவதாரம் பத்து
21. அருள்ஞான பொக்கிஷம்
22. மாமகரிஷிகள் அருளிய பேருண்மைகள்
23. பேரின்பத்தைத் தரும் பேரொளி
24. **कृपा ज्ञान कोष** (ஹிந்தி - புத்தகம்)
25. ஞானகுரு உபதேசித்து அருளிய மூலக்கூறுகள்
26. துருவ தியானமும் ஆத்ம சுத்தியும்
27. Treasure of Wisdom
28. Divine Revelation
29. தன்னைத் தான் அறிதல்
30. குருவிடம் பெற்ற அனுபவங்கள்
31. துருவ தியானம்
32. Liberation of Soul
33. தெளிந்து வாழ்ந்திட குருவின் அருள்வழி
34. தியானப் பயிற்சியும் பலன்களும்
35. சற்குருவின் அருள் ஞானம்
36. குருவின் மெய்வழி
37. காளிங்கநாதரும் போகமா மகரிஷியும்
38. தவம்

39. ஆன்மாவின் நிலைகள்

40. அருள் ஒளி பெறும் அருள் வாழ்க்கை

41. அருள் ஞானம்

42. தியான அருட் பயிற்சி

43. அருள் ஞானப் பொக்கிஷம்

44. குரு வழியில் வாழும் வழி

45. துருவ தியான விளக்கம்

46. மெய்ஞானப் பாடல்கள்

47. விநாயகனை தியானிக்கும் முறை

48. உயிர் உடல் இயக்கம்

49. ஆலய வழிபாடு

50. வாழும் வழி முறை



**ஞானகுரு வேணுகோபால சுவாமிகள் அருளிய ஒலி, ஒளி தட்டுக்கள்**
**மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனம் டிரஸ்ட் வெளியீடுகள்**

## ஒலித் தட்டுக்கள் (CD)

| வ.எண் | பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துருவ தியானப் பயிற்சி | 1 |
| 2. | மெய் ஞானப் பாடல்கள் | 1 |
| 3. | ஞானப் பாடல்கள் | 1 |
| 4. | அருள் ஒளி பெறும் அருளுரை பாகம் – I | 1 |
| 5. | அருள் ஒளி பெறும் அருளுரை பாகம் – II | 1 |
| 6. | மருத்துவக் குறிப்புக்கள் | 1 |
| 7. | துருவ தியான விளக்கம் | 1 |
| 8. | உயிர் உடல் இயக்கம் | 1 |
| 9. | விநாயகனைத் தியானிக்கும் முறை | 1 |
| 10. | ஆலய வழிபாடு | 1 |
| 11. | வாழும் வழி முறை | 1 |

## ஒலி, ஒளித் தட்டுக்கள் (VCD)

| வ.எண் | பெயர் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதல் குரு பூஜை பாகம்–1 | காலை 10 மணி | 2 |
| 2. | முதல் குரு பூஜை பாகம்–2 | காலை 10 மணி | 2 |
| 3. | முதல் குரு பூஜை பாகம்–3 | இரவு 7 மணி | 2 |
| 4. | 2–வது குரு பூஜை | காலை 10 மணி | 3 |
| 5. | 3–வது குரு பூஜை | காலை 10 மணி | 3 |
| 6. | 6–வது குரு பூஜை | காலை 10 மணி | 4 |
| 7. | 7–வது குரு பூஜை | காலை 10 மணி | 4 |
| 8. | 8–வது குரு பூஜை பாகம்–1 | துருவ தியானம் | 3 |
| 9. | 8–வது குரு பூஜை பாகம்–2 | காலை 10 மணி | 3 |

| வ.எண் | பெயர் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 10. | 9-வது குரு பூஜை | இரவு 7 மணி | 3 |
| 11. | 10-வது குரு பூஜை | துருவ தியானம் | 2 |
| 12. | 10-வது குரு பூஜை | இரவு 7 மணி | 3 |
| 13. | 10-வது குரு பூஜை | காலை 10 மணி | 3 |
| 14. | 11-வது குரு பூஜை | காலை 10 மணி | 3 |
| 15. | 12-வது குரு பூஜை பாகம்-1 | இரவு 7 மணி | 3 |
| 16. | 12-வது குரு பூஜை பாகம்-2 | துருவ தியானம் | 2 } 4 |
| | | காலை 10 மணி | 2 |
| 17. | கடனா நதி 1999-ம் வருடம் | | 2 |
| 18. | கடனா நதி பாகம்-1 | 1, 2 | 2 |
| 19. | கடனா நதி பாகம்-2 | 3, 4 | 2 |
| 20. | கடனா நதி பாகம்-3 | 5, 6 | 2 |
| 21. | கடனா நதி பாகம்-4 | 7, 8 | 2 |
| 22. | கடனா நதி பாகம்-5 | 9, 10 | 2 |
| 23. | சிதம்பரம் உபதேசம் | 1, 2 | 2 |
| 24. | கீதையின் சாரம் | 1, 2 | 2 |
| 25. | விநாயக சதுர்த்தி | 1, 2, 3 | 3 |
| 26. | அண்டமும் பிண்டமும் | 1, 2, 3 | 3 |
| 27. | தன்னைத்தான் அறிதல் | 1, 2, 3 | 3 |
| 28. | பௌர்ணமி தியானம் | 1, 2 | 2 |
| 29. | பௌர்ணமி உபதேசம் | 1, 2, 3 | 3 |
| 30. | சாமி அம்மாள் உபதேசம் பாகம்-1 | 1, 2 | 2 |
| 31. | சாமி அம்மாள் உபதேசம் பாகம்-2 | 3, 4 | 2 |


**வெளியீடு :**

**மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனம்**

**புஞ்சை புளியம்பட்டி - 638 459 ஈரோடு மாவட்டம்**

# விஞ்ஞானப் பேரழிவுகளில் இருந்து மீள

இன்று விஞ்ஞான உலகில் வாழுகின்றோம். விஞ்ஞானத்தால் பேரழிவுகள் வரப்போகின்றது. மதப்போர், இனப்போர் என்ற நிலைகளில் தீவிர வாதங்கள் பெருகி மக்களை அச்சுறுத்தும் நிலைகளே வருகின்றது. இதிலிருந் தெல்லாம் மீள நமது குருநாதர் காட்டிய அருள் வழியில் துருவ மகரிஷி, துருவ நட்சத்திரமான அந்த துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை, நாம் எண்ணி நமக்குள் அதை வளர்த்தல் வேண்டும். அவ்வாறு நாம் வளர்க்கும்போது உயிருடன் சேரும் உணர்வுகள் பேரொளியின் உணர்வுகளாக சேர்ந்து, இந்த மனித பிறவிக்குப் பின் பிறவியில்லா, ஒளி சரீரம் பெற ஏதுவாக இருக்கும்.

"ஞானகுரு"

# உடல் உறுப்புகளை எண்ணி தியானிப்பதின் முக்கியத்துவம்

காற்றுமண்டலம் நச்சத்தன்மையாக உள்ளது. காற்று மண்டலத்திலே நச்சுத் தன்மையை நீக்கி, வராக அவதாரமாக, நல்ல சக்தியை நீங்கள் பெறவேண்டும். அந்த நல்லசக்தியை நீங்கள் பெற்று வளர்த்துக் கொள்ளக்கூடியது. எலக்ட்ரிக் - எலெக்ட்ரானிக்கால் கம்ப்யூட்டர் இயக்கக்கூடிய, 'ரோபாட்டை' தயார் செய்கின்றனர். ஒருவனது மனது என்னநிலையில் இருக்கின்றதோ, அவனைப் பார்த்தவுடனே, இவன் தவறு செய்பவன் என்று தன் எஜமானனுக்கு எச்சரிக்கை செய்கின்றது. அதேபோன்று உடல் உறுப்புகளுக்கு, எலக்ட்ரிக், எலக்ட்ரானிக் என்ற நிலைகளில் உங்கள் உடல் உறுப்புகளுக்கு சக்தி ஏற்றுகின்றேன். அதை வளர்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் நிலை. வளர்த்துக் கொண்டீர்கள் என்றால் நல்லது.

**"ஞானகுரு"**

**இறுதிப் பேருரை - 15.06.2002**